விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + 16
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 02 ஞாயிற்றுக்கிழமை (14.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 057

### வடக்கின் இரு மாவட்டங்களில்
## புதிய கோவிட் வைரஸ் அடையாளம் காணப்பட்டது
### ஆய்வுக்கு இறங்கியது சுகாதார அமைச்சு

(யாழ்ப்பாணம்)
வட மாகாணத்தில் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் புதிய கோவிட் - 19 வைரஸ் அடையாளம் காணப்பட்டுள்ளது. 15

## 74 ஆயிரத்தை கடந்த தொற்றாளர்கள்
### நேற்றும் +796 பேர் பாதிப்பு

(கொழும்பு)
இலங்கையில் நேற்று மேலும் 796 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் ஏற்கனவே 15

### நீதிக்காக ஐ.நாவை நம்ப வேண்டாம்
# இலங்கையில் தலையிட ஐ.நாவுக்கு தைரியம் இல்லை
### ஐ.நா நிபுணர் குழுவின் முன்னாள் தலைவர் சார்லஸ்



(கொழும்பு)
இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்கள் நீதிக்காக ஐக்கிய நாடுகள் சபையை நம்ப வேண்டாம். இலங்கை பிரச்சினையில் செயற்பட ஐ.நாவுக்கு தைரியம் இல்லை என்று ஐ.நாவின் முன்னாள் உதவி பொதுச் செயலாளரும் ஐ.நா நிபுணர் குழுவின் முன்னாள் தலைவருமான சார்லஸ் பெட்ரி தெரிவித்தார்.

இணையவழி கருத்தரங்கில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோது அவர் இதனை தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பிலும் பிற இடங்களிலும் சரியானதைச் செய்ய விரும்பும் ஐ.நா. அதிகாரிகள் உள்ளனர். 15

## வடக்கில் நேற்று நால்வருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் போதனா வைத்திய 15

## நிபந்தனையின்றி அரசுக்கு ஆதரவு வழங்கத் தயார்
### றிசாட் பதியூதீன்

(கொழும்பு)
நிபந்தனைகள் இன்றி அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க தயாராக இருப்பதாக முன்னாள் 15

## தமிழ்க் கட்சிகள் யாழில் இன்று ஒன்றுகூடுகின்றன

(யாழ்ப்பாணம்)
தமிழ் தேசிய கட்சிகள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடவுள்ளன.
இன்று காலை 10 மணிக்கு யாழ். 15

### ராஜபக்ஷவின் கொடூர ஆட்சியே
## சர்வதேசத்திடம் நீதி கோரி தமிழர் போராடக் காரணம்



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு
07ஆம் பக்கம் பார்க்க

### அரியாலை முள்ளிப் பகுதியில்
## 20 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டன

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ் நடத்துநர் ஒருவருக்கு இரு நாட்களுக்கு முன் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. நேற்று முன்தினம் அவரது மனைவிக்கும் மக 15

## கோவிட் - 19 வைரஸ் நேற்றும் 6 பேர் பலி
### உயிரிழப்பு 390ஆக உயர்வு

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 6 பேர் 15

## கொரோனா வேகமாக பரவுகின்றது ஒன்றுகூடல் நிகழ்வுகளைத் தவிருங்கள்
### பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் பொதுமக்களிடம் கோரிக்கை

(கொழும்பு)
பிரிட்டனில் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்றின் புதிய மாறுபாடு கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, நாட்டின் கோவிட் - 19 அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது என்று இலங்கையின் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித் 15

## இலங்கையின் அரச மதமாக பௌத்தத்தை மாற்ற வேண்டும்
### அமைச்சர் உதய கம்மன்பில வலியுறுத்து


(கொழும்பு)
நாட்டிற்காக புதிய அரசியலமைப்பை இயற்றும்போது இலங்கையின் பெயரை மாற்ற வேண்டும் என்று பிவிதுரு ஹெல உறுமய வலியுறுத்தியுள்ளது.
அத்துடன் 2,300 ஆண்டுகளாக பௌத்தம் நாட்டின் பெரும்பான்மையினரின் மதமாக உள்ளது.
பௌத்தத்தை இலங்கையின் அரச 15

### ஈஸ்டர் தாக்குதல் எதிரொலி
## மைத்திரியின் குடியுரிமை பறிபோகும் அபாயம்!

(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் குடியுரிமையை 7 ஆண்டுகளுக்கு இரத்துச் செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.
ஈஸ்டர் ஞாயிறு 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



பிறப்பு 04 – 04 – 1932

இறப்பு 12 – 02 – 2021

## தம்பிப்பிள்ளை துரைராசா (துரையப்பா)

நெடியகாடு வடக்கு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை துரைராசா நேற்று முன்தினம் (12.02.2021) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - அன்னம் தம்பதியரின் அன்புப் புதல்வனும் தவமணியின் அன்புக் கணவரும் கௌரி, சாந்தி, வசந்தி, ஜெயந்தி, கோணேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆனந்தலிங்கம், இராமச்சந்திரன், சிவகுமார், கோணேஸ் அருனா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.02.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1431)

நெடியகாடு வடக்கு.
வல்வெட்டித்துறை.

077 968 7790

தகவல்:-
குடும்பத்தினர்


## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்** (5659)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## சமையலாள் தேவை

திருநெல்வேலியில் உள்ள
உணவகத்திற்கு ரொட்டி, கொத்து,
சிற்றுண்டி வகைகள் சமையல்
வேலை தெரிந்தவர் உடன் தேவை.
( தங்கி இருந்து வேலை செய்பவர் )
(5664)

**077 296 4899**

## மணமகன் தேவை

92, 8இல் செவ்வாய், 40 பாவம்,
அவிட்டம் 1 மணமகள்
95, 8இல் சூரியன் செவ்வாய்,
உத்தரம் 1 மணமகள்
(5661)

**துர்க்கா திருமண சேவை**
**077 818 5978**

## மணமக்கள் தேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற
மணமக்களை தெரிவு செய்ய விரும்பின்
எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
1980 இலிருந்து 1987 - ஜேர்மன்
1980 இலிருந்து 1987 - கனடா
1980 இலிருந்து 1988 - இலண்டன்
உள்ள மணமகனுக்கு படித்த
மணமகள் தேவை மற்றும் உள்நாட்டு,
வெளிநாட்டு மணமக்கள் தேவை.
(5657)

தொடர்புக்கு
**077 023 7639**
WhatsApp 004917643399372
IMO - 0094 76 475 2219

## வேலை வாய்ப்பு

பலாலி வீதி, கோண்டாவிலில்
புதிதாக திறக்கப்பட்டுள்ள LOLC
நிறுவனத்தின் கிளைக்கு
கீழ்வரும் பதவி
வெற்றிடங்களுக்கான
ஆட்சேர்ப்பு கோரப்படுகின்றது.

- Team Manager
- Financial Planner

(5665)

தொடர்புக்கு
**077 499 3186**


# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில்
முகாமையாளராக கடமையாற்றும்
எமதருமை நண்பன் **கொங்காதரன் கிருபாகரன்**
( சிவாண்ணை ) அவர்களின் அன்புத் தாயார்

அமரர்

## திருமதி சற்குணம் கொங்காதரன்

( இணுவில் )



அவர்களின் திடீர் மறைவினால் துயருற்று
இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு
எங்களுடைய ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 1947.07.08

மறைவு 2021.02.13

## யாழ்ரன் மல்ரி சென்ரர்

இல. 48, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C-1435)

# விடுதலை புலிகள் பற்றியோ பிரபாகரன் பற்றியோ யாரும் வாய்திறக்கக் கூடாது-சரத் வீரசேகர மீண்டும் அதட்டல்



**(கொழும்பு)**

**இலங்கை பாராளுமன்றத்திலுள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பில் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்க முடியாது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், உயரிய பாராளுமன்ற சபையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை புகழ்ந்து பேசுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஜேர்மன் பாராளுமன்றத்தில் நாசிசவாதம் தொடர்பிலோ அல்லது ஹிட்லர் தொடர்பிலோ பேச முடியாது.

அதேபோன்று, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் என்பவர், இலட்சக்கணக்கான மக்களை கொலை செய்த ஒருவர் என்பதுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பயங்கரவாத அமைப்பு.

இலங்கையில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பையோ அல்லது வேலுப்பிள்ளை பிரபாகரனையோ புகழ்ந்து பேசுவதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது.

அவ்வாறு பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டால் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைமை என்னவாகும்.

இதனால் பாராளுமன்றத்திற்குள் விடுதலைப் புலிகளையோ அல்லது அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையோ புகழ்ந்து பேசுவதற்கு எதிரான சட்டமூலமொன்றை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகிறோம். இவ்வாறு கொண்டு வரப்படும் சட்டமூலத்திற்கு எவ்வாறான பதில் கிடைக்கும் என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும் என வீரசேகர தெரிவித்தார். (நி-4)

# சர்வதேசத்திற்கு தெளிவாக கேட்பது அருகிலிருந்தவர்களுக்கு புரியவில்லையாம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிப்பதாக பாராளுமன்றத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறியது பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் உள்ளடங்கலாக சர்வதேச சமூகத்திற்கு மிகத் தெளிவாகக் கேட்டிருக்கிறது. எனினும் பிரதமருக்கு மிக அருகில் இருந்தவர்களுக்கு மாத்திரமே அது கேட்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிப்பதாக பாராளுமன்றத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மிகத் தெளிவாகவே குறிப்பிட்டார்.

அதுமாத்திரமன்றி பிரதமர் பாராளுமன்றத்திலேயே மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

வாகனத்தில் செல்லும் போது ஊடகங்களுக்குக் கூறவில்லை. எனவே பொறுப்பு வாய்ந்த இடத்தில் பொறுப்புடன் வெளியிடப்பட்ட கருத்தை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது.

ஆகவே கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தோரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிக்கும் வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கின்றோம் என முஜிபுர் தெரிவித்தார். (நி-4)


2 ஆம் ஆண்டு

நினைவஞ்சலி



அமரர். திருமதி. ஸ்ரீலோகநாதன் வசந்தா

திதி: மாசிமாத திருதியை 14.02.2021

ஆண்டுகள் இரண்டு ஆனது
அன்புத் தெய்வம் நீயெங்கே
தேடி அலைகின்றேன் ஆலய
வாசலிலும் கோபுர அழகின்
நிழலிலும் காணேன் பொன்னம்
பலத்திலும் பூங்காவனத்திலும்
கீரிமலை கரையிலும்
உம்மைக்காணேன்
உம்மை நினைந்து நினைந்து
நெஞ்சம் உருகுது நீங்கிடாத
துன்பம் பெருகுது மீண்டும்
ஒரு ஜென்மம் இருந்தால்
இணைவோம்.
உமது ஆத்மா சாந்திபெற
இறைவனை பிரார்த்திக்கின்றேன்
ஓம் சாந்தி!

இல.80, படிம் வீதி,
கந்தர்மடம்.
077 271 9000

அன்புக் கணவர்
செ.ஸ்ரீலோகநாதன் (ஆசிரியர்)
அன்புமகன் வித்தகன்.

(5655)


# 12 வாரங்களின் பின் 2 ஆம் கட்ட தடுப்பூசி

(கொழும்பு)

ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா கோவிஷீல்ட் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களுக்கு 12 வாரங்களின் பின்னர் 2 ஆம் கட்டமாக தடுப்பூசியை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசியின் முதல் மருந்தை பெற்றுக்கொண்ட 76 வீதமானவர்களுக்கு 12 வாரங்களுக்கு நோயெதிர்ப்பு சக்தி இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக கொவிட் தடுப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் முதலாவது தடுப்பூசியை செலுத்தி 8-12 வாரங்களுக்கு பின்னர் அடுத்த தடுப்பூசியை செலுத்த உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்துள்ள நிலையில் இது குறித்த இறுதித் தீர்மானத்தினை அடுத்த வாரம் மேற்கொள்ளவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். இதற்கிடையில் ஒரு இலட்சத்து என்பத்தையாயிரத்திற்கும் மேற்பட்ட முன்னணி சுகாதார ஊழியர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸார் முதல் சுற்று கோவிஷீல்ட் தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை கொரோனாத் தொற்றினை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தனியார் சுகாதார தரப்பினருக்கும் தடுப்பூசியை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (நி-4)

# ‘ரன்’ அசுரன் ரோகித்

## தலைநிமிர்ந்தது இந்தியா

## பிடியை தளரவிட்டது இங்கி.




சென்னை டெஸ்டில் துணிச்சலாக ஆடிய ரோகித் சர்மா 161 ஓட்டங்கள் விளாச, இந்திய அணி வலுவான ஓட்ட எண்ணிக்கையை எட்டியது.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்டில்தோற்ற இந்திய அணி 0:1 என தொடரில் பின் தங்கி யுள்ளது. 2ஆவது டெஸ்ட் சென்னை சேப் பாக்கம் மைதானத்தில் நடக்கி றது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ஹோலி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

வோஷிங்டன் சுந்தர், ஷாபாஸ் நதீம், பும்ராவுக்குப் பதில் இந்திய அணியில் குல்தீப் யாதவ், மொஹமட் சிராஜ், அறிமுக வீரராக அக்சர் படேல் சேர்க்கப்பட்டனர்.

**ஹோலி ‘ஷாக்’**

இந்திய அணிக்கு ரோகித் சர்மா, சுப்மன் கில் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. ஸ்டோன் வீசிய இரண்டாவது ஓவரின் மூன்றாவது பந்தில் சுப் மன் கில் ‘டக்’ அவுட் டானார். ரோகித், புஜாரா இணைந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, ஸ்கோர் சீராக உயர்ந்தது.

ஸ்ரோக்ஸ் வீசிய 12 ஆவது ஓவரில் அடுத்தடுத்து சிக்சர், பவுண்டரி அடித்த ரோகித், 47 பந்துகளில் 50 ஓட்டங்களை எட்டினார். 2ஆவதுவிக்கெட்டுக்காக 85 ஓட்டங்கள் சேர்த்த போது, லீச் சுழலில் புஜாரா (21) அவுட்டானார். மொயீன் அலி சுழலில் ஹோலி (0) போல்டாக, சென்னை ரசிகர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர்.

**‘சுப்பர்’ ஜோடி:**

பின் ரோகித், ரகானே ஜோடி அணியை மீட்டது. ‘ஸ்வீப் ஷொட்டில்’ அசத்திய ரோகித் சர்மா டெஸ்ட் அரங்கில் 7வது சதம் எட்டினார். ரகானே 23ஆவது அரைசதம் அடித்தார். நான்காவது விக்கெட்டுக்காக 162 ஓட்டங்கள் சேர்த்த போது, லீச் பந்தில் சிக்சருக்கு ஆசைப்பட்ட ரோகித் சர்மா, 161 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்த சில நிமிடத்தில் ரகானே (67) போல்டானார். அஷ்வின் (13) நீடிக்கவில்லை.

முதல் நாள் முடிவில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 300 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஆடுகளம் சுழலுக்கு ஒத்துழைக்கும் நிலையில், இந்தியாவின் 300 ஓட்டங்கள் என்பது 500 ஓட்டங்களுக்கு சமம்.


## காணி விற்பனைக்கு

செம்மணி வீதியில் நாயன்மார்கட்டு கேணியடியில்
32 பரப்புக் காணி விற்பனைக்கு.
இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு:- (5670)

**077 288 0152**
**077 505 8561**

## விற்பனையாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் எமது ஜவுளி நிறுவனத்துக்கு புடவை வியாபாரம் பழகிய பெண் ஊழியர் தேவை.
(ஞாயிறு நேரில் வரவும். 10 மணி - 2 மணி)

**சென்னை பெசன் வேல்ட்**
63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (5668)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 41 வயது, சொந்தமாக தொழில் புரியும் திருமணமாகாத மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்ப்பில்லை.

தொடர்புகளுக்கு: (5669)
**077 905 8615**
(வைபர் & வாட்ஸ் அப்)

## வேலையாட்கள் தேவை

**ஜஸ்டா** புத்துயிர் மென்பான நிலையத்துக்கு (Jasta fresh Juice bar)
சிற்றுண்டி மற்றும் பி(f) றைட் றைஸ் தயாரிப்பாளர், மென்பானம் தயாரிப்பாளர் தேவை.
(சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்) (C-1436)

தொடர்புகளுக்கு: **077 137 1617**
166, இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(பல்கலைக்கழகத்திற்கு முன்பாக)


## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் 28.02.2021 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஏழூர் மண்டபத்தில் நடைபெற இருப்பதனால் அனைத்து பழைய மாணவர்களையும் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்தி சம்பந்தமான பிரேரணைகள் இருப்பின் 24.02.2021க்கு முன் சமர்ப்பிக்கவும்.

அதிபர்
(5654) இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்

## இந்து பௌத்த கலாசார பேரவையின் பொதுச் செயலாளர் M.T.S. இராமச்சந்திரனை திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலன சபையினர் சந்தித்து உரையாடினர்



இந்து பௌத்த கலாசார பேரவையின் பொதுச் செயலாளர் M.T.S. இராமச்சந்திரனை நேற்று திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பரிபாலன சபையினர் வவுனியாவில் உள்ள சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் சந்தித்து மாற்று சமயங்களால் ஆலயத்தின் சுற்றாடலில் தங்களின் ஆலய கலாசாரத்துக்கு ஏற்பட்டு வரும் இடையூறுகளும் ஆலய முன்னேற்றத்திற்கான தடைகளும் உங்களால் நீக்கித் தரப்பட வேண்டும் என்று இதுவிடயமாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வருமாறும் ஆலயத்தை நேரில் வருகைதந்து பார்வையிடுமாறும் M.T.S. இராமச்சந்திரனிடம் பாரிய வேண்டுகோளை விடுத்து திருக்கேதீஸ்வர பரிபாலன சபை முக்கியஸ்தர்கள் அவரைச் சந்தித்து உரையாடினார்கள். அது சம்பந்தமாக அந்த விடயத்தை ஜனாதிபதிக்கு எடுத்துச் செல்வதாக M.T.S. இராமச்சந்திரன் உறுதியளித்துள்ளார். (C-1434)

## மரண அறிவித்தல்

### திருமதி தஞ்சமலர் சின்னையா



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16•10•1949 | 12•02•2021 |

அராலி மத்தி, வட்டுகோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தஞ்சமலர் சின்னையா நேற்று முன்தினம் (12.02.2021) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து - சின்னம்மா தம்பதியினரின் அன்பு புதல்வியும் காலஞ்சென்ற கந்தையா -பெரியபிள்ளை தம்பதியினரின் மருமகளும் சின்னையாவின் அன்பு மனைவியும் அருளானந்தம், Dr.தேவானந்தம், தவானந்தம் (கொலண்ட்), சர்வானந்தம், ஜெயமாலினி, கஜானந்தம் (தாதிய உத்தியோகத்தர் - களுபோவில போதனா வைத்தியசாலை), தபோதினி, விஜியானந்தம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.02.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேலங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை. (5671)

தகவல்:- குடும்பத்தினர்
077 658 2952

# இரட்டை வேடம் போடும் அரசாங்கம் வாக்களித்த 69 லட்சம் மக்களை ஏமாற்றுகிறது



(கொழும்பு)

சர்வதேச அரங்கில் ஒரு விடயத்தையும் உள்நாட்டு ஊடகவியலாளர் மாநாட்டில் மற்றொரு விடயத்தையும் கூறுவதானது நாட்டுக்குத்தான் பாதகமானதாக அமையும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"உயிர்த்த ஞாயிறு தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை இதுவரை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவில்லை.

ஆகவே இவ்விடயம் தொடர்பாக நாம் சபாநாயகரிடமும் விசேட கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை தடுக்க தவறியவர்களைப் போலவே, இதன் பின்னணியில் உள்ளவர்களும் திட்டமிட்டவர்களும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

இதேவேளை கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது 69 இலட்சம் மக்களை ஏமாற்றுவதற்கு இது ஒரு சிறந்த காரணியாக அமைந்துள்ளது.

இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த அரசாங்கம் ஆட்சியை கைப்பற்றியமை, கொரோனா சடலங்களை தகனம் செய்தல் அல்லது அடக்கம் செய்தல் விவகாரத்தில் தெளிவாகியுள்ளது.

சிங்கள பௌத்த வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு விடயத்தையும் சிறுபான்மை மக்களை ஏமாற்றுவதற்காக இன்னொரு விடயத்தையும் அரசாங்கம் கூறிக் கொண்டிருக்கிறது.

அதேபோன்று சர்வதேச அரங்கில் ஒரு விடயத்தையும் உள்நாட்டு ஊடகவியலாளர் மாநாட்டில் மற்றொரு விடயத்தையும் கூறுகின்றது.

மேலும், கொரோனா தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிப்பதாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானை கூட அரசாங்கம் ஏமாற்றியுள்ளதா? என்ற சந்தேகம் எழுகின்றது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# அடிப்படைவாதிகளின் பிடிக்குள் அரசியல் தலைவர்கள்

## மகாசங்கத்தினர் கவலை

(கொழும்பு)

நாட்டில் தற்போது அரசியல் தலைவர்கள் கூட அடிப்படைவாதிகளின் பிடிக்குள் சிக்கியிருப்பது மிகுந்த கவலையளிப்பதாக மகா சங்கத்தினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளனர். அத்தோடு பௌத்த தத்துவம், தொல்பொருள் மற்றும் பண்டைய தளங்கள் பற்றிய தவறான வியாக்கியானங்களை நிறுத்த வேண்டியதன் அவசியத்தையும் மகா சங்கத்தினர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர்.

எட்டாவது தடவையாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற பௌத்த ஆலோசனை சபை கூட்டத்தின் போதே மகாசங்கத்தினர் இதனை தெரிவித்தனர்.

எல்லோருடையதும் எல்லா கருத்துக்களுக்கும் பதிலளிக்கச் செல்வதன் மூலம் வேலை செய்வதற்கான பெறுமதியான நேரம் விரயமாகிறது. விமர்சனங்களை நியாயமாகக் கருதி சுய சிந்தனையுடன் நாட்டை வழிநடத்துவதே தேவை என பௌத்த ஆலோசனை சபை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளது.


பட்டம், பதவிகள் கிடைக்காத சிலர் என்ன சொன்னாலும் மகா சங்கத்தினரும் மக்களும் ஜனாதிபதி மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர் என்றும் மகா சங்கத்தினர் தெரிவித்தனர்.

சிலரின் வெறுக்கத்தக்க கருத்துக்களால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அரசாங்கம் குறித்து பல்வேறு தரப்பினர் முன்வைக்கும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் மற்றும் களங்கப்படுத்தும் நடவடிக்கைகளால் நாம் சோர்வடைந்து விடக் கூடாது.

எஞ்சியுள்ள மூன்றரை வருடங்களுக்கும் மேற்பட்ட காலத்தில் நாட்டை கொள்கை ரீதியாக ஆட்சி செய்யுமாறு மகா சங்கத்தினர் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். அடிப்படைவாதிகளின் தற்போதைய செயற்பாடுகள் பௌத்த ஆலோசனை சபையின் விசேட கவனத்தைப் பெற்றது. அன்று ஏழைகள் தான் அவர்களது பிடியில் சிக்கினர்.

இன்று பணக்காரர்கள், சக்திவாய்ந்த, புகழ்பெற்ற கலைஞர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் கூட அடிப்படைவாதிகளுக்கு பலியாகியிருப்பது மிகுந்த கவலையளிப்பதாக உள்ளது என்று மகாசங்கத்தினர் தெரிவித்தனர். (நி-4)

# கால் மேசை பந்தாட்டம் முதல் தடவையாக யாழில் அறிமுகம்



(யாழ்ப்பாணம்)

இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சினால் 72 ஆவது விளையாட்டாக அறிமுகப்படுத்திய கால் மேசை பந்தாட்டம் (ரெக் பந்தாட்டம்) முதல் தடவையாக வடமாகாணத்தின் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை வல்வெட்டித் துறை வல்வை விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட இணைப்பாளராக சிவா ஜீவிந்தனை இலங்கை ரெக்பந்தாட்ட சம்மேளனம் நியமித்துள்ளது.

இந்நிகழ்வுக்கு இலங்கை ரெக் சங்கம் சார்பாக இலங்கைக்கான ரெக்பந்தாட்ட அபிவிருத்தி முகாமையாளர் சிவராஜா கோபிநாத், சம்மேளனத்தின் உயர் அதிகாரிகள் ரஞ்சித் மற்றும் மருத்துவர் கணேசநாதன், யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

குறித்த நிகழ்வில் வட மாகாண விளையாட்டுக் கழகங்களுக்கு 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான ரெக்பந்தாட்ட உபகரணங்களை கையளித்து யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ரெக்பந்தாட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இரண்டு ரெக் பந்தாட்ட மேசை வழங்கி வைக்கப்பட்டன. (4-33)

# வாகனங்களில் உள்ள பக்கக் கண்ணாடிகளை திருடியவர் கைது



(கொழும்பு)

வாகனங்களின் பக்கக் கண்ணாடிகளைத் திருடி, கடத்தியவர் தெமட்டகொடை பகுதியில் பொலிஸ் வீதித்தடையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பின் பல பகுதிகளிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களில் இருந்து திருடப்பட்ட 16 கண்ணாடிகள் அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பஞ்சிகாவத்தை பகுதியை சேர்ந்த 31 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் திருடிய பக்கக் கண்ணாடிகளை வாகன உதிரிப்பாக விற்பனையாளர்களுக்கு விநியோகித்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (நி-4)

Samugam Media இல்
வேலை வாய்ப்பு


- Translator
- Area Reporters
- News Presenter
- Social Media Executivate
- Video Editor

குறைந்தது 2 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
வயது எல்லை - (21-45 வயதிற்கு உட்பட்டோர்)
Contact No:- +94 76 245 5533
+94 77 149 7888
Mail ID:- hr.samugam@gmail.com

வேலையாட்கள் தேவை
சண் கலர்லாப் & பிறிண்டிங்
பருத்தித்துறை
பனர், போட் மற்றும் பிறேம்கள் தயாரிப்பதற்கு வேலையாள் தேவை அனுபவம் உள்ளவர்கள் அல்லது ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம் (பயிற்சி அளிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 727 5213 (C-1433)

ஆயுர்வேத சிகிச்சை
உங்கள் அனைத்து விதமான நாட்பட்ட வலிகள், மூட்டு வியாதிகள், முள்ளந்தண்டு பிரச்சினை, கொலஸ்ரோல், நீரிழிவு, உடல் பருமன் மற்றும் அனைத்து விதமான அழகு சிகிச்சைகளுக்கும் இயற்கை முறையில் தீர்வு அழிக்கப்படும். மேலதிக தொடர்புகளுக்கு 077 912 8944, 074 034 4447
264, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு கொக்குவில். (C-1432)

# தோல்விகளை எதிர்கொள்ளும் திறன் சிறுவயதிலிருந்து புகட்டப்பட வேண்டும்



(குப்பிழான்)

**தோல்விகளை எப்படி எதிர்கொள்வது? என்பதைக் கற்றுக் கொடுப்பதில்லை. இதனால் தான் வாழ்க்கையில் தோல்விகள் ஏற்படும் போது தற்கொலை எனும் தவறான முடிவைப் பலரும் தெரிவு செய்கிறார்கள்.**

எனவே, தோல்விகள் ஏற்படும் போது அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சிறுவயதிலிருந்தே புகட்டுவது அவசியமானது என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவ நிபுணர் சி.சிவன்சுதன் வலியுறுத்தியுள்ளார்.

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் திறன் வகுப்பறைத் திறப்பு விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாணவர்கள் வெற்றிபெறுவதற்குத் தேவையான அனைத்து வழிமுறைகளையும் ஆசிரியர்கள் சிறுவயதிலிருந்து மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கிறார்கள்.

கற்பித்தல் செயற்பாடு என்பது மிகவும் நுட்பகரமானது. இது நாளுக்கு நாள் மெருகேற்றப்பட்டு வருகிறது.

கற்பித்த லில் இடம்பெறும் சிறு சிறு செயற்பாடுகள்கூட மாணவர்களின் ஆளுமையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன.

கல்வி கற்கும் போது எமது இலக்கு என்ன? என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும்.

கல்வி கற்கும் போது வாயால் சொல்வது மாணவர்களுக்குப் பதிவது 30 வீதமாகவும் பார்த்துப் பதிவது 70 வீதமாகவும் காணப்படுகின்றது.

ஆசிரியர்கள், பெற்றோர்களின் நடத்தைகளைப் பார்த்துத் தான் மாணவர்கள், பிள்ளைகள் கற்றுக் கொள்கிறார்கள். எனவே, ஆசிரியர்கள், பெற்றோர்கள் தமது நடத்தைகளில் அவதானமாகச் செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-4-18)

## மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் முக்கிய மூன்று முடிவுகள்




(யாழ்ப்பாணம்)

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் சிறு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் ஆராயும் கூட்டத்தில் மூன்று முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதாக யாழ். மாவட்ட தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் என்.இன்பம் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசானது சிறுமீனவர்களின் நலன் சார்ந்து செயற்படாது பல்தேசிய கம்பனிகள் சார்பாக செயற்படுவதன் காரணமாக வட பகுதி மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் தடுக்கும் கோரிக்கைகளை குறிப்பிட்டு அரசுக்கு அழுத்தத்தினை கொடுக்கும் முகமாக சிறு மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை அறிக்கையாக தயாரித்தல், பொதுமக்கள் மத்தியில் மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பல்கலைக்கழக சமூகத்துடன் இணைந்து சிவில் அமைப்பு பிரதிநிதிகளையும் ஒன்றிணைத்து சிறு மீனவர்கள் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகள் தொடர்பில் விரிவாக ஆராய தொடர்ச்சியாக கூட்டங்களை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டதாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் தெரிவித்தார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் பல்கலைக்கழக மாணவர்கள், மீனவர் சங்கப் பிரதிநிதிகள், கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மீனவ சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (5-4-33-101)

## ஏக்கர் வரி செலுத்தவும் கமக்கார அமைப்பு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கமநல சேவைகள் நிலையத்தின் ஆளுகைக்கு உட்பட்ட காரைநகர் மேற்கு, கிழக்கு, வடக்கு, தெற்கு மற்றும் தென்மேற்கு கமக்கார அமைப்பின் வயற்காணிகளுக்கு ஏக்கர் வரி அறவீடுகள் நடைபெறுகிறது.

எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விவசாயிகள் தமது வயற்காணிகளிற்கு 2021 ஆம் ஆண்டுக்கான ஏக்கர் வரியினைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஏக்கர் வரி செலுத்தத்தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏக்கர் வரி வாரம் பெப்ரவரி 15 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படும். கமநல சேவைகள் நிலையத்தில் அல்லது கமக்கார அமைப்பினால் அறிவிக்கப்படும் இடங்களுக்கு சென்று கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர்களிடம் ஏக்கர் வரி செலுத்த முடியும்.

செலுத்தப்படும் பணத்தின் பொருட்டு செல்லுபடியாகும் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4)

## 90 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

லண்டன் வாழ் நாவாந்துறை சமூக ஆர்வலர் செபஸ்ரியாம்பிள்ளை யேசுநாயகத்தின் அனுசரணையுடன் தீபா Dental & Optical இணைந்து இலவச கண் பரிசோதனையும் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கலும் றெக்களமேசன் சனசமூக நிலையத்தில் கடந்த புதன்கிழமை அந் நிலையத்தின் தலைவர் யே.பிறேம் தலைமையில் நடைபெற்றது.

இதில் 90 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (5-4-106)

## வரணியில் வங்கிக் கிளையொன்றினை ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை

(வரணி)

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வரணிக் கிராமம் என்பது கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய பரந்த கிராமமாகும்.

இங்கு பதினான்காயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர்.

அத்துடன் பாடசாலைகள், கடைத்தொகுதி, பொதுச்சந்தை, நூலகம், சமுர்த்தி காரியாலயம், கலாசார மண்டபம், பனை -தென்னை வள உற்பத்தி நிலையம், பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகள், வைத்தியசாலை, தபால் நிலையம் போன்றன அமைந்துள்ளன.

ஆனால் இப்பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் வங்கிச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இப்பகுதி மக்கள் வங்கிச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு 10 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நெல்லியடி மற்றும் கொடிகாமம் நகரங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இதனால் அவர்களது நேரம் வீண்விரயம் ஆவதுடன் தொழில் நடவடிக்கைகளும் பாதிப்புக்கு உள்ளாகின்றன. அத்துடன் பண விரயமும் வீண் அலைச்சலும் ஏற்படுகிறது.

ஆகவே வரணியின் மையப் பகுதியில் அரச வங்கிக் கிளையொன்றினை திறப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கையெடுக்க வேண்டும் எனப் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (5-4-103)

## மஹோற்சவம் தொடர்பான விசேட கலந்துரையாடல்

(குப்பிழான்)

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தினை நடத்துவது தொடர்பான விசேட கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெற்ற இவ் விசேட கூட்டத்தில் நகுலேஸ்வரர் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ ந.குமாரசாமிக் குருக்கள், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் மற்றும் பொலிஸார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர் .

கொவிட்- 19 நோய் பரவல் காரணமாக சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றி நகுலேஸ்வர ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தினை எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது. (5-4-18)

## ஆணைக்குழு உறுப்பினராக யோகேஸ்வரி நியமனம்

(நல்லூர்)

மனித உரிமைகள் மீறல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் உறுப்பினராக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினரும் யாழ்.மாநகர முன்னாள் மேயருமான யோகேஸ்வரி பற்குணராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் அதிவிசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ், ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திர பெர்ணாந்து மற்றும் ஓய்வுபெற்ற மாவட்டச் செயலாளர் நிமல் அபேசிறி ஆகிய மூவர் கொண்டமைந்த மனித உரிமைகள் மீறல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அண்மையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(5-4-33)

# தமிழ் மக்கள் சர்வதேசத்திடம் நீதி கோரி போராட ராஜபக்ஷக்களின் கொடூர ஆட்சியே காரணம்

## முன்னாள் ஜனாதிபதி குற்றச்சாட்டு



**(கொழும்பு)**

**"வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள், சர்வதேசத்திடம் நீதி கோரி வீதியில் இறங்கிப் போராட ராஜபக்ஷக்களின் கொடூர ஆட்சியே காரணமாகும்" என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.**

இலங்கை அரசின் தமிழ் பேசும் மக்கள் மீதான அடக்கு முறைகளைக் கண்டித்தும், சர்வதேசத்திடம் நீதி கோரியும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் வடக்கு, கிழக்கு தமிழ்ச் சமூகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட பேரணி தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை முன்னெடுக்கப்பட்ட பேரணியின் போது தமிழ் மக்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால், அவர்கள் அவ்வாறு கோரிக்கைகளை முன்வைப்பதற்கான நிலையை ஏற்படுத்தியமைக்கு ராஜபக்ஷ அரசே பொறுப்புக்கூற வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ, தமது கடந்த ஆட்சியில் ஐ.நாவுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் வழங்கியிருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றியிருந்தால் தமிழர்கள் இன்று சர்வதேசத்திடம் நீதி கோரி வீதியில் இறங்க வேண்டிய நிலை வந்திருக்கமாட்டாது.

இந்த ஆட்சியிலும் அவரின் சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ தனது ஜனாதிபதி பதவியைத் துஷ்பிரயோகப்படுத்தி வருகின்றார்.

சிவில் நிர்வாகச் செயற்பாடுகளின் உயர் பதவிகளில் இராணுவத்தினரை நியமித்துள்ளதுடன் மட்டுமன்றி வடக்கு, கிழக்கில் தமிழர்களைப் பழிவாங்கும் வகையிலும் இந்த அரசு செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறான மோசமான செயற்பாடுகளே தமிழர்களைக் கொதித்தெழ வைத்துள்ளது என சந்திரிகா தெரிவித்தார். (நி-4)

# புதிய வகை கொரோனா குறித்து சுகாதார அமைச்சு ஆய்வு

(கொழும்பு)

இலங்கையில் கண்டறியப்பட்ட பிரித்தானியாவில் பரவிவரும்புதியவகை கொரோனாத் தொற்று குறித்து சுகாதார அமைச்சு ஆய்வினை ஆரம்பித்துள்ளதாக உயர் சுகாதார அதிகாரி ஒருவர் நேற்று சனிக்கிழமை தெரிவித்தார்.

இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் தொற்று நோயியல் பிரிவுக்கு அறிவுறுத்தியுள்ளதாக சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

புதிய மாறுபாட்டின் பரவல் வீதம் அதிகமாக காணப்படுவதாக ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

தற்போது குறித்த தொற்று, கொழும்பு, அவிசாவளை, இங்கிரிய, பியகம, வத்தளை, மத்துகம, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளில் பெறப்பட்ட மாதிரிகளில் கண்டறியப்பட்டுள்ளது.

ஆகவே பொதுமக்கள் கொரோனாத் தொற்றினை கட்டுப்படுத்தும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் எனச் சுகாதார அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-4)

# மேலும் பலர் நாட்டை வந்தடைந்துள்ளனர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த 615 பேர், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

நேற்று சனிக்கிழமை காலை 8.30 அளவில் நிறைவடைந்துள்ள 24 மணித்தியாலத்தில், 13 விமானங்கள் ஊடாக இவர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும், முப்படையினரால் நடத்தி செல்லப்படும் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-4)


## ஓலைச்சுவடி சோதிட நிலையம்

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் காண்டம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

மட்டக்களப்பு, திருகோணமலையில் உள்ளவர்களுக்கு வவுனியாவில் வாசிக்கப்படும். சுபம்

தொடர்புகளுக்கு:- ஓலைச்சுவடி சோதிட நிலையம்

கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில், யாழ்ப்பாணம். (5652)

தொடர்புகளுக்கு. 076 328 7119


# கழிவுகளை பயன்படுத்தி மின் உற்பத்தி இம்மாதம் ஆரம்பம் - டலஸ்



(கொழும்பு)

கழிவுகளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் "இலங்கையின் முதல் மின் உற்பத்தி நிலையம்" தேசிய கட்டத்தில் சேர்க்கப்படவுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

வத்தள - ஹெரவலபிட்டியில் அமைக்கப்பட்ட மின் உற்பத்தி நிலையத்தை எதிர்வரும் புதன்கிழமை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த ஆலை ஒரு நாளைக்கு 700 தொன் கழிவுகளைப் பயன்படுத்தி 10 மெகா வோல்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும்.

இது தவிர, மக்கும் கழிவுகளைப் பயன்படுத்தி உயிர்வாயு மின்சாரம் தயாரிக்கும் முதல் திட்டம் இந்த ஆண்டு இறுதியில் மாத்தறையில் ஆரம்பிக்கப்படும் என்று டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்தின் கோட்டாவிலவில் அமைக்கப்பட்டு வரும் இத்திட்டத்தில், ஒரு நாளைக்கு 40 தொன் குப்பைகளைப் பயன்படுத்தி 400 கிலோ வோல்ட் மின்சாரத்தை தேசிய கட்டத்தில் சேர்க்க திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-4)


## மணமகள் தேவை

USA இல் PILOT ஆக பணிபுரியும் 39 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை (C-1211)

Email: filightsusaflorida@gmail.com
Please Reply
Contact : 011 581 3871

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## கடை வாடகைக்கு

சாவகச்சேரி நகரத்தின் மத்தியில்.சந்தியில் A.9 வீதியில் (கண்டிவீதி) மேல் மாடிக் கடை (First floor) வாடகைக்கு கொடுக்கப்படும். (C-1210)

தொடர்பு:- 077 536 1370 077 152 6874

## வீடு வாடகைக்கு

இராசவீதி சந்தி, ஆடியபாதம் றோட், திருநெல்வேலியில் 05 அறைகள், குசினி, ஹோல், இரண்டு இணைந்த குளியலறைகளுடன் வீடு வாடகைக்கும், தளபாடங்கள் விற்பனைக்கும் உண்டு.

அரச உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (C-1423)

தொலைபேசி இல:- 076 295 4484

## PEARSON INTERNATIONAL COLLEGE

Diploma in English
IELTS Acadamic
IELTS General
IELTS Life skills.

# Weekday classess
# Weekend Classess
# Personal Classes
# Group Classes
# Lecturers are above band 8 Scorers and professionally qualified

98% Students in IELTS Scored above 6.5
Learn the techiniques to score above 6.0
Unbeatable Success rate in Northern Province

Registered Exam Centre for IELTS
Special discounts for upcoming registration
074 188 7878 infopearsonicollege@gmail.com
idp IELTS
No.21,Ponnampalam Street 3rd lane, Power house road, Jaffna

## பண்ணை வெற்றிடம்

தனியாகவோ, குடும்பமாகவோ

இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கியிருந்து, பல்வேறு பணிகளிலும் பொறுப்புடன் ஈடுபடக்கூடிய தொழிலாளர் தேவை. உடனே தொடர்பு கொள்ளவும்.

திருநாவுக்கரசு நினைவு மாதிரிப் பண்ணை, மாவிட்டபுரம்

தொ.பே.: 071 110 0088 (5642)

# கொவிட்- 19 தொற்றினைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்குங்கள்-சுதர்ஷினி கோரிக்கை

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் தொற்றினைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பினை வழங்குமாறு பொதுமக்களிடம் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கோரிக்கை விடுத்துள்ளார்.**

நேற்று சனிக்கிழமை இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஆரம்ப சுகாதார மற்றும் கொவிட் கட்டுப்பாடு இராஜாங்க அமைச்சர், பொது மக்களின் உதவியின்றி இந்த வைரஸைக் கட்டுப்படுத்த முடியாது என்றும் தெரிவித்தார்.

பயணங்களை மட்டுப்படுத்தவும் அதிகளவிலான மக்கள் இருக்கும் இடங்களைத் தவிர்க்கவும் முகக்கவசம் அணியவும் ஒரு மீற்றர் சமூக இடைவெளியைப் பின்பற்றுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை நாட்டில் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசியைச் செலுத்தும் நடவடிக்கை தொடங்கப்பட்ட பின்னர், வைரஸை அதிக அளவில் கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (நி-4)

# தமிழக மீனவர்கள் கொலை விவகாரம் இலங்கையின் முடிவிற்காக காத்திருக்கின்றோம்

(சென்னை)

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் நான்கு பேர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில், இலங்கை அரசின் விசாரணை முடிவுக்காக காத்திருக்கிறோம் என இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் இராமேஸ்வரம், தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த 4 மீனவர்கள் கடந்த மாதம் கடலில் மீன்பிடிக்கச் சென்றிருந்தனர். ஜனவரி 18 ஆம் திகதி இலங்கை கடற்படையின் படகுடன் விபத்திற்குள்ளானதில் இந்திய மீனவர்களின் படகு மூழ்கியது. இதில் 4 மீனவர்கள் உயிரிழந்தனர்.

இந்த துயர சம்பவம் குறித்த கேள்விகள் இந்திய பாராளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை எழுந்தன. வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் பதில் அளித்தார்.

அப்போது அவர் தெரிவித்துள்ளதாவது,

இந்த துயர சம்பவத்தில், இலங்கைக்கு நாம் நமது கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளோம்.



அதன் பலனாக அவர்கள் ஒரு விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

அந்த விசாரணை முடிவுக்காக காத்திருக்கிறோம். அதே நேரத்தில் இந்த விவகாரத்தை மத்திய அரசு மிக மிக கடுமையாக எடுத்துக்கொண்டுள்ளது என்பதை நான் உறுதியாக தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது இலங்கையில் இந்திய மீனவர்கள் எவரும் சிறையில் இல்லை. சமீப காலம் வரை 9 பேர் சிறையில் இருந்தார்கள். அவர்கள் விடுவிக்கப்பட்டு விட்டனர்.

தற்போதைய நிலவரப்படி, அங்கு இந்திய மீனவர்களின் 62 படகுகள் உள்ளன. அவற்றை இலங்கையின் காவலில் இருந்து விடுவிக்க நாங்கள் முயற்சித்துக்கொண்டிருக்கிறோம்.


முன்பு 173 படகுகள் இருந்தன. அவற்றில் 36 படகுகள் மீட்கப்படக்கூடியவை. மீட்க முடியாத படகுகளுக்கான ஏல நடைமுறைகள் தற்போது விவாதத்தில் உள்ளன.

எவற்றை திரும்ப பெற முடியுமோ, அவற்றை திரும்பப் பெறுவோம். எவற்றை மீட்க முடியுமோ அவற்றை மீட்போம். அதற்கான முயற்சி எடுக்கிறோம். மீட்பை விரைவு படுத்துவோம்.

இந்திய மீனவர்களின் பாதுகாப்புக்கு மத்திய அரசு மிக கூடுதலான முன்னுரிமையை அளிக்கிறது. இந்திய மீனவர்கள் இலங்கையால் பிடிக்கப்படுவது பற்றிய தகவல் கிடைக்கிற போதெல்லாம், தூதரக ரீதியில் இந்த விவகாரத்தை இலங்கை அரசிடம் எடுத்துச்செல்கிறோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

# நான் போர்க்குற்றவாளி அல்ல எது நடந்தாலும் எதிர்கொள்ள தயார்

## பயணத்தடை குறித்து கமால் குணரத்ன



(கொழும்பு)

தான் போர்க் குற்றவாளி அல்ல என்றும் நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் தனது சேவையையே செய்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

மேலும் தமது இராணுவம் காட்டில் பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போரிட்ட காரணத்தினால்தான் அனைவரும் இன்று சுதந்திரமாக சுற்றித் திரிவதாகவும் அவர் தெரிவித்தார்.

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக பயணத்தடை விதிப்பது குறித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிவிப்பு தொடர்பாக, ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தோடு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை முட்டாள்தனமான அறிக்கையை வெளியிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் தான் போர்க் குற்றவாளி அல்ல என்பதால், கைது செய்யப்பட்டாலும் அவற்றை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் யு.என்.எச்.ஆர்.சி. அறிக்கையிலிருந்து தங்கள் பெயர்களை நீக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் கமால் குணரத்ன குறிப்பிட்டார். (நி-4)

# இந்திய பிரதி உயர்ஸ்தானிகருடன் தமிழ் காங்கிரஸ் சந்திப்பு



(கொழும்பு)

இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேகொப்பை பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்.

கொழும்பில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை வலியுறுத்துதல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஊடகமொன்றிற்கு தெரிவித்தார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினரான பிள்ளையான் என அறியப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், கருணா அம்மான் என அறியப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோரையும் இலங்கைக்கான இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் கே ஜேகொப் இந்த மாத ஆரம்பத்தில் பிரத்தியேகமாக தனித்தனியே சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# தேர்தலில் களமிறங்க தயாராகும் ஸ்ரீரங்கா

(அம்பாறை)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் ஊடகவியலாளர்களை இணைத்துக் களம் இறங்கவுள்ளதாக பிரஜைகள் முன்னணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஜே.ஸ்ரீரங்கா தெரிவித்துள்ளார்.

அம்பாறை ஊடக அமையத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீரங்காவின் தேர்தல் அணிக்கு கிழக்கில் உள்ள ஊடகவியலாளர்களின் ஒத்துழைப்பு கோரப்பட்ட போதிலும் அதற்கு ஊடகவியலாளர்கள் மறுப்புத் தெரிவித்துவிட்டனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 250 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 600 | 700 |
| தக்காளி | 260 | 210 | 230 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 70 | 50 |
| கோவா | 100 | 80 | 100 | 120 |
| கரட் | 200 | 220 | 200 | 240 |
| பூசணி | 100 | 140 | 140 | 160 |
| புடோல் | 200 | 200 | 160 | 160 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 420 | 450 | 400 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 150 | 120 |
| பாகற்காய் | 180 | 150 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 250 | 250 | 240 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 130 | 140 |
| பயற்றங்காய் | 180 | 200 | 350 | 250 |
| லீக்ஸ் | 170 | 140 | 140 | 160 |
| பீற்றூட் | 220 | 240 | 200 | 200 |
| கறிமிளகாய் | 280 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | --- | --- | --- | --- |
| போஞ்சி | 150 | 130 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 180 | 200 | 200 | 240 |
| கீரை - 1 பிடி | 60 | 60 | 50 | 60 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 70 | 80-100 |
| இராசவள்ளி | 250 | 200 | 250 | 240 |
| வெங்காயப்பூ | 200 | 180 | 270 | 240 |
| முள்ளங்கி | 140 | 100 | 180 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 120 | 50 | 30 |
| ஈரப்பலா | 130 | 100 | --- | 100 |

# இராசிபலன்

14.02.2021
மாசி 02, ஞாயிற்றுக்கிழமை.
திருதியை பின்னிரவு 2.52 மணிவரை
பூரட்டாதி பிற்பகல் 5.29 மணிவரை
சுபநேரம் 9.33-11.03 மணிவரை
இராகுகாலம் 5.03-6.33 மணிவரை
சந்திராஷ்டமம்: ஆயில்யம், மகம்
சர்வதேச காதலர் தினம் , சித்தாமிர்தம் வளவன்


மேஷம்
எடுத்த காரியங்களில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள்.


ரிஷபம்
உற்றார், உறவினர்களின் வருகையுண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, இனிய செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.


மிதுனம்
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள்.


கடகம்
சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.


சிம்மம்
வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.


கன்னி
குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.


துலாம்
சுப செய்திகள் வந்து சேரலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.


விருச்சிகம்
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், தூரத்து உறவினர்களின் வருகையுண்டு.


தனுசு
சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


மகரம்
பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சிலர் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம்.


கும்பம்
கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், போசன சுகமுண்டு.


மீனம்
குடும்பத்தில் கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், புதியவர்களின் நட்பு கிடைக்கும்.

இலாபம் இல்லாத வியாபாரம் இனிப்பில்லாத கற்கண்டு.

# சாணக்கியன் உள்ளிட்ட எழுவருக்கு நீதவான் நீதிமன்றம் அழைப்பாணை



(கல்முனை)

பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோ.கருணாகரம், த.கலையரசன் உள்ளிட்ட எழுவரை எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி முன்னிலையாகுமாறு கல்முனை நீதவான் நீதிமன்றினால் அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியில் கலந்து கொள்வார்கள் எனக் கூறி, கல்முனை பொலிஸ் நிலையத்தினால் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 29 பேருக்கு கல்முனை நீதிமன்ற உத்தரவின் பேரில் தடை உத்தரவு பெறப்பட்டிருந்தது.

ஆனாலும் பேரணி இடம்பெற்றதுடன் நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டவர்கள் என பெயரிடப்பட்டவர்கள் சிலர், அதனை மீறி கலந்து கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு, மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட எழுவருக்கு எதிராக கல்முனை நீதவான் நீதிமன்றில் வழக்கொன்று கல்முனை பொலிஸாரினால் கடந்த 5 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த வழக்கு இடம்பெற்றதுடன் நீதிமன்ற தடையுத்தரவை மீறியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோ.கருணாகரம், த.கலையரசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், மாணவர் மீட்பு பேரவை தலைவர் செ.கணேசானந்தன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி துணைச் செயலாளர் அ.நிதானசன் ஆகியோருக்கு நீதிமன்ற அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஐ.நாவால் எந்த சவால்கள் வந்தாலும் அதனை நிராகரிக்க அரசு தயார்

## வெளிவிவகார அமைச்சர்

**(கொழும்பு)**


**பெப்ரவரி 22 - மார்ச் 23 வரை நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத் தொடரின் ஆரம்பத்தில் இலங்கை தனது கருத்துக்களை முன்வைக்கும் என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அமர்வின் ஆரம்ப நாட்களில் நடைபெறும் உயர்மட்ட கூட்டங்களில் பொதுவாக நாடுகளின் உயர்மட்ட பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களை முன்வைப்பார்கள்.

இந்நிலையில் கனடா, பிரித்தானியா, ஜேர்மனி, மொண்டிநீக்ரோ, வடமசிடோனியா ஆகியவற்றின் சார்பாக பிரித்தானியாவின் வதிவிடப் பிரதிநிதி ஜூலியன் பிரெய்த் வெயிட் இலங்கை மீதான அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

இலங்கையின் முன்மொழிவுடன் ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு இலங்கை மேற்கொண்ட பதில் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மனித உரிமைகள் ஆணையாளர் தயாரித்த அறிக்கையும் இவ்வமர்வில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இவ்வறிக்கைகள் மூலம் பலத்த குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கும் இலங்கை தனது நிலைப்பாட்டை அறிவிக்க இது ஒரு தருணம் என்றாலும்



வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கு இது மிகவும் சவால் நிறைந்த நாட்களாக இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த உயர்மட்டக் கூட்டத்தில் கருத்துக்களைத் தெரிவிக்கவிருக்கும் இதர நாடுகளின் பிரதிநிதிகள் தரப்பில், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர், அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மற்றும் சீனாவின் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் அடங்குவர்.

கோப் குழும நாடுகளால் முன்வைக்கப்படும் புதிய தீர்மானம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 30/1 - 40/1 தீர்மானங்கள் தொடர்பில் இலங்கை மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் பின்னர், குறித்த தீர்மானத்திற்கு நல்லாட்சி அரசாங்கம் வழங்கிய இணை அனுசரணையில் இருந்து விலகியதாக புதிய அரசாங்கம் அறிவித்தது.

இந்நிலையில் கடந்த மாதம் ஐ.நா. ஆணையாளர் வெளியிட்ட இலங்கை தொடர்பான புதிய அறிக்கையில், கடந்த கால மனித உரிமை மீறல்களை இலங்கை கவனிக்கத் தவறியமையானது இத்தகைய மீறல்கள் மீண்டும் மீண்டும் நிகழும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

அத்தோடு கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் மீறல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் குற்றவாளிகளுக்கு எதிராக சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடை போன்ற தடைகளையும் ஐ.நா. ஆணையாளர் முன்மொழிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கொரோனா தொற்றை வெற்றிகரமாக கட்டுப்படுத்தும் நாடுகளில் ஒன்றாக இலங்கை இருக்கும்போது, அதனை இழிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு 16 தவறான விளக்கங்கள் அடங்கிய ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை நிராகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். (நி-4)

# புதிய கொரோனா கொத்தணி உருவாகும் அபாயம் பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்

## யாழ்.அரச அதிபர் மகேசன்



(நல்லூர்)

யாழில் மேலதிக கொத்தணி உருவாகும் நிலை காணப்படுவதனால் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுவது அவசியம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி சந்தை பகுதியில்மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் நான்கு வியாபாரிகளுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா நிலைமை சற்று குறைவடைந்து கடந்த வாரங்களில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருந்த நிலையில் தற்போது திடீரென தொற்று உறுதி செய்யப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்த நிலைமையில் யாழ். மாவட்டம் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டிய காலகட்டமாக இருக்கின்றது. தற்பொழுது யாழ்.மாவட்டத்தில் அனைத்து செயற்பாடுகளையும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி செயற்படுமாறு அறிவுறுத்தியிருந்தோம்.

சகல நடவடிக்கைகளும் வழமைபோல் இடம்பெற்று வருகின்றன.

அத்தோடு இறுக்கமான நடைமுறைகள் தளர்த்தப்பட்டு சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தமது வழமையான செயற்பாடுகளை பின்பற்றுவதற்காக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இனிவரும் நாட்களில் சுகாதார நடைமுறைகளை கட்டாயமாக பின்பற்றி செயற்பட வேண்டும். தற்போதைய நிலைமையானது மேலதிக கொத்தணி உருவாகும் ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

அத்தோடு தற்போது அனைத்து செயற்பாடுகளும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக பாடசாலைகள், மதத் தலங்கள், ஏனைய பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களில் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த அபாய நிலையை உணர்ந்து பொதுமக்கள் செயற்பட வேண்டும்.

குறிப்பாக பேருந்துகளில் பயணிப்போர் மற்றும் பொதுஇடங்களில் ஒன்றுகூடுவோர் தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

முச்சக்கர வண்டி சாரதிகள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். அச்சுவேலி சந்தையினை மூடுவதற்கு எந்த வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. எனினும் குறித்த தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புடையவர்கள் தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

அச்சுவேலி சந்தையுடன் தொடர்புடையோருக்கு மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர்.பரிசோதனையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டால் மாத்திரமே சந்தை மூடுவதற்குரிய தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (5-4-33)

# சட்டவிரோத கடைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## நகர சபை உறுப்பினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள் காணப்படுகின்ற சட்டவிரோத கடைகள் தொடர்பில் நகரசபை நடவடிக்கை எடுக்கத் தயங்குவது ஏன்? என உறுப்பினர் திருக்குமரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர்மேலும் தெரிவிக்கையில்,

ஏனைய சபை எல்லைக்குள் சட்டவிரோத கட்டடங்கள் தான் காணப்படுகின்றன.

ஆனால் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள் சட்டவிரோதக் கடைகளே காணப்படுகின்றன. நுணாவில் பகுதியில் ஏ-9 வீதியில் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. குறித்த கடைகள் யாருடைய அனுமதியும் பெற்றிருக்கவில்லை.

அத்துடன் ஏ-9 வீதியில் சட்டத்திற்கு முரணாக இவ்வாறான கடைகள் காணப்பட்டும் நகரசபை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. இவ்வாறான சட்டவிரோத கடைகளுக்கு எதிராக சாவகச்சேரி நகர சபை விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். (5-4-30)



தூயகரங்கள் தூயநகரம் என்ற தொனிப்பொருளுடன் மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனின் பணிப்பின் பேரில் யாழ்.மாநகரசபை மற்றும் யாழ்.பிரதேச செயலகத்தின் பங்களிப்புடனும் அதிக மக்கள் பங்கேற்புடனும் யாழ்.முற்றவெளிப் பகுதி மற்றும் குருநகர் கடற்கரைப் பகுதியில் தூய்மைப்படுத்தல் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படங்கள்:- சிவசாந்தன்)

# தரம் பிரித்து வைக்கப்படும் குப்பைகளும் அகற்றப்படுவதில்லை

## நகர சபை உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் தரம் பிரித்து பாதுகாப்பாக கட்டி வைக்கப்படுகிற குப்பைகளைக்கூட நகரசபை பணியாளர்கள் அகற்றுவதில்லை என சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர். அண்மையில் நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் சில வட்டாரங்களில் பத்து நாட்களுக்கு மேலாக குப்பைகள் அகற்றப்படாமல் தேக்க நிலையில் காணப்படுகின்றன. தரம் பிரித்து வைக்கப்படுகிற குப்பைகள்கூட அகற்றப்படாமல் உள்ளது.

நகரசபையின் கழிவகற்றும் வாகனங்கள் வருகின்ற போதிலும் கழிவுகள் அகற்றப்படுவதில்லை.

பொதுமக்கள் குப்பைகளை தரம் பிரிக்கத் தவறும் பட்சத்தில் அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமே தவிர குப்பைகளை அகற்றாமல்தேங்க விடுவது தவறு.

மக்கள் சிலவற்றை கற்றுக் கொள்ளவும் நடைமுறைப்படுத்தவும் காலஅவகாசம் தேவை. நகர சபையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இதனை புரிந்துகொள்ள வேண்டும் என மேலும் அவர்கள் தெரிவித்தனர். (5-4-30)

# நவாலியூர் சோமசுந்தரப்புலவர் திருவுருவ ஓவியம் திறப்பு



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கின் அடையாளமாகிய உலகத்தமிழர்களால் ‘‘தங்கத்தாத்தா’’ என்று அழைக்கப்படும் பதினையாயிரம் செய்யுள்களைப் பாடிய நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் திருவுருவ ஓவியம் திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

இவ் ஓவியம் கோபால் மோகன்ராசுவின் நிதிப்பங்களிப்பில் வரையப்பட்டது.

இவ் ஓவியத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி.யசோதா உதயகுமார் நவாலி அட்டகிரி முருகன் ஆலயத்தில் திரை நீக்கம் செய்து வைத்தார். (5-4)

# ஊடகவியலாளர் சத்தியமூர்த்தியின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தல்




(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர், நாட்டுப் பற்றாளர் பு.சத்தியமூர்த்தியின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று யாழ். ஊடக அமையத்தில் அதன் தலைவர் ஆ.சபேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது. (5-4-33)

# மது மற்றும் சிகரெட் பாவிப்பவர்களுக்கு கொவிட்-19 தடுப்பூசி போடுவது பயனற்றது

(கொழும்பு)

**மது மற்றும் சிகரெட் புகைப்பவர்களுக்கு தடுப்பூசி போடுவது பணம் மற்றும் வளங்களை வீணாக்குவதற்கு சமமாகும் என புகையிலை மற்றும் மது தொடர்பான தேசிய ஆணையத்தின் தலைவர் மருத்துவர் சமதி ராஜபக்ஷ தெரிவித்தார்.**

புகைபிடித்தல் சுவாச மண்டலத்தை சேதப்படுத்துகிறது.

சிகரெட் புகைப்பவர்கள் கொவிட் -19 நோயால் பாதிக்கப்படுவதற்கு அதிக வாய்ப்புள்ளது, மேலும் அவர்கள் நோய்த்தொற்றுக்கு ஆளாக நேரிடும் அபாயம் அதிகம் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், புகைபிடித்தல் மற்றும் மது அருந்துவது ஒருவரின் நோய் எதிர்ப்பு சக்தியை பலவீனப்படுத்துகிறது.

அத்தகைய நபர்களுக்கு தடுப்பூசி போடுவது நாட்டில் கொரோனா வைரஸை தடுக்கும் இலக்கை அடைவதில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

மது அல்லது சிகரெட் புகைக்காதவர்களுக்கு தடுப்பூசி போடுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று மருத்துவர் வலியுறுத்தினார்.

கொவிட் -19 க்கு எதிரான தடுப்பூசி பெற்றவுடன் குறைந்தது ஆறு மாதங்களாவது ஒருவர் புகைபிடிப்பதையும் மதுபானம் அருந்துவதையும் தவிர்க்க வேண்டும் என்று அவர் கூறினார். (நி-4)

## உரிமைகளை முடக்குவது அகழ்வாராய்ச்சியின் நோக்கமல்ல

### என்கிறார் விதுர

(கொழும்பு)

நாட்டிலுள்ள ஏனைய இனத்தவர்களின் உரிமைகளை முடக்குவது தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் நோக்கமல்ல என தேசிய மரபுரிமைகள், கலை கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் நோக்கங்களை கொண்டு தொல்பொருள் அகழ்வாராய்ச்சிக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன் வைப்பதை அரசியல்வாதிகள் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல்வாதிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு அடிபணிந்து தொல்பொருள் அகழ்வாராய்ச்சி பணிகளை இடைநிறுத்தப் போவதில்லை.

வடக்கில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வாராய்ச்சிப் பணிக்கு எதிராக ஒரு தரப்பினர் நீதிமன்றம் செல்வதாக குறிப்பிட்டுள்ளார்கள்.

அனைத்துச் சவால்களையும் சட்டத்தின் ஊடாகவும் எம்மால் வெற்றி கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (நி-4)

## அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழு சட்டத்தை தலைகீழாக்கியுள்ளது-மத்தும பண்டார



(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மூலம் சட்டம் தலைகீழாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நீதியையும் நீதித்துறையையும் சீரழிப்பதற்கு எதிராக எதிர்த்தரப்பிலுள்ள சகலருடனும் இணைந்து கலந்தாலோசித்து செயற்பட ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளதாக அதன் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொரோனா சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பில் பிரதமராலும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளேவினாலும் கூறப்பட்ட கருத்துக்கள் அரசாங்கத்தினுள் காணப்படுகின்ற முரண்பாடுகளை வெளிப்படுத்துகின்றன. தற்போது அரசாங்கமும் தோல்வியடைந்துள்ளது. பிரதமரும் தோல்வியடைந்துள்ளார்.

சட்டத்தை தலைகீழாக்கி அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு என்பதன் மூலம் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நீதியையும் நீதித்துறையையும் சீரழிப்பதற்கு எதிராக எதிர்த்தரப்பின் அனைத்து குழுக்களுடனும் இணைந்து கலந்தாலோசித்து நடவடிக்கைகளை முன்னெடுக்க தயாராகவுள்ளோம்.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள பிரேமலால் ஜயசேகரவிற்கு பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ள இடமளித்து, ரஞ்சன் ராமநாயக்கவிற்கு அதற்கான உரிமையை வழங்காமை நியாயமற்ற செயற்பாடாகும். சபாநாயகரொருவர் இவ்வாறு பக்கச்சார்பாக செயற்படுவது பொருத்தமற்றதாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## கிராமத்துடன் கலந்துரையாடல் வேலைத்திட்டத்தை வலுப்படுத்த இணைப்புக்குழுக்கள்

(கொழும்பு)

கிராமிய பிரதேசங்கள் மற்றும் மாவட்ட குழுக்களின் ஊடாக தீர்வுகளைப் பெற முடியாத, தேசிய மட்டத்தில் தீர்க்கக்கூடிய அபிவிருத்தி பிரச்சினைகளுக்காக விரைவில் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் வறுமை ஒழிப்பிற்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொள்கை ரீதியாக தீர்மானங்கள் மேற்கொள்ளும்போது அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கிடையிலான இணைப்பு வலுப்பெறும். ஜனாதிபதியின் கிராமத்துடன் கலந்துரையாடும் வேலைத்திட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான கொள்கைக் கமைய 5 தேசிய இணைப்புக்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளன.

இந்தக் குழுக்கள் அந்தந்த துறைகள் தொடர்பான அமைச்சுக்களுடன் இணைந்து தீர்மானங்களை மேற்கொள்வது வினைத்திறனாக அமையும் எனவும் செயலணியின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

பிரதேச இணைப்புக் குழுக்களுக்கு மேலதிக 5 உப குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன. (நி-4)

## மத்திய அஞ்சல் பரிவர்த்தனை ஊழியர்களுக்கு கொரோனா

(கொழும்பு)


கொழும்பு- மத்திய அஞ்சல் பரிவர்த்தனையில் பணியாற்றும் 4 ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்று உறுதி செய்யப்பட்ட அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அஞ்சல்மா அதிபர் ரஞ்ஜித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்பினை பேணிய 26 பேர், இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாத்திரம், 940 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட தாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## வத்தளையில் தீ விபத்து



(கொழும்பு)

வத்தளையில் நேற்று தீ விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

வத்தளை பகுதியில் உள்ள உணவகமொன்றிலேயே குறித்த தீ பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், தீ பொது மக்களின் உதவியுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், தீயை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

# அரிசியின் அதிகபட்ச விற்பனை விலை 100 ரூபாய் மட்டுமே- பந்துல



(குருமன்காடு)

**நெல்லினை என்ன விலைக்கு கொள்வனவு செய்தாலும் அரிசியினை 100 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்வற்கு அரசாங்கம் இடமளிக்காது என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

வவுனியா மாவட்ட செயலகத்தில் இன்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது கௌபி, பயறு போன்றன தற்போதும் அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.

நீங்கள் என்ன விலைக்கு நெல்லினை கொள்வனவு செய்தாலும் அரிசி 100 ரூபாவுக்கு மேல் எமது ஆட்சிக் காலத்தில் விற்பனை செய்ய மாட்டோம். 100 ரூபாவுக்குள் தான் அரிசியினை கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். நெல்லினை என்ன விலைக்கு என்றாலும் பெற்றுக்கொள்ளுங்கள். ஆனால் அரிசி 100 ரூபாவுக்குள் தான் இருக்க வேண்டும். அரசாங்கம் விவசாயிகளுக்கு நிறைய விடயங்களை செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறது. மானிய உரம், இலகுவான கடன் திட்டம், அரிசி கட்டுப்பாட்டு விலை என பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளோம். அரிசியினை மக்களுக்கு நியாயமான விலையில் பெற்றுக் கொடுப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறோம்.

பொருட்களை கொள்வனவு செய்யும் போது இடைத்தரகர்களினால் தான் விலை அதிகரிக்கிறது. பொருட்களை உற்பத்தி செய்பவர்களே விற்பனை செய்வதற்கான இடங்களை அமைத்துக் கொடுத்தால் இலாபத்தை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அநுரா தபுரம், மிகிந்தலை போன்ற இடங்களில் அவ்வாறான நிலையங்களை அமைக்க அமைச் சரவையின் அனுமதியைப் பெறவுள்ளோம். ரஜவாசல என்ற பெயரில் எல்லா அரச நிறுவனங்களையும் ஒன்றுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன்மூலம் இலகுவாக ஒரு இடத்திலேயே பொருட்களைப் பெற முடியும். ரஜவாசல என்ற திட்டத்தை வவுனியா மாவட்டத்திற்கும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் எனத் தெரிவித்தார். (5-4-250)

# உழவர் சந்தை ஊடாக தனியார் பேருந்து சேவை

## சங்கத் தலைவர் அறிவிப்பு

(நெளுக்குளம்)

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள உழவர் சந்தைக்கு விவசாயிகள் கிராமங்களில் இருந்து பொருட்களை கொண்டு வருவதற்கு வசதியாக தனியார் பேருந்துகள் அனைத்தையும் பழைய பேருந்து நிலையத்தினூடாக சேவையில் ஈடுபடுமாறு வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.ரி. இராஜேஸ்வரன் அறிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக் கையில்,

விவசாயிகள் உள்ளூர் விளைபொருட்களை உழவர் சந்தைக்கு பேருந்துகளில் கொண்டு வரும்போது அப்பேருந்துகள் பழைய பேருந்து நிலையத்தினூடாக பயணிக்க வேண்டும் என அனைத்து உள்ளூர் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே விவசாயிகள் தமது விளை பொருட்களை நேரடியாக பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள உழவர் சந்தைக்கு கொண்டு வர முடியும் எனவும் தெரிவித்தார். (5-4-299)

# உழவர் சந்தைச் செயற்பாடுகள் ஆரம்பம்



(நெளுக்குளம்)

விவசாயிகளின் உற்பத்தி பொருட்களிற்கு போதுமான நியாயமான விலை கிடைக்காமையினாலும் நுகர்வோர் களிற்கு சரியான விலையில் பொருட்கள் கிடைக்காமையினையும் கருத்தில் கொண்டு வவுனியா மாவட்டத்தில் விவசாயிகளிற்கு சேவை வழங்கும் நோக்குடன் குறித்த உழவர் சந்தை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக நேற்று திறந்து வைக்கப்பட்டது.

விவசாயிகள் தமது கமநல கேந்திர நிலையங்களினூடாக தமது உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ய முடியும் என்பதுடன் வியாபாரிகளுக்கு மொத்தமாக விற்பனை செய்வதற்கான ஒழுங்குகளும் இதனூடாக விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேன கலந்து கொண்டு சந்தையைத் திறந்து வைத்தார்.

மேலும் கமநலசேவை நிலைய பிரதி ஆணையாளர் இ.விஜயகுமார், மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், பிரதேச செயலாளர் ந.கமலதாசன், பிரதி விவசாயப்பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(5-250-299)

# நெல்லினை கொள்வனவு செய்ய கூ. சங்கங்களுக்கு கடன் திட்டம்



(குருமன்காடு)

விவசாயிகளிடம் இருந்து நெல்லினை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதற்காக வடமாகாண பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு சௌபாக்கியா கடன் திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களிடம் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண மற்றும் வடமாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சாள்ஸ் ஆகியோர் இணைந்து குறித்த கடன் திட்டத்திற்கான காசோலைகளை வழங்கி வைத்தனர்.

வடமாகாணத்தில் விவசாயிகளால் உற்பத்திசெய்யப்படும் நெல்லினை உத்தரவாத விலையில் பெற்று அதனை களஞ்சியப்படுத்தி மீண்டும் மக்களுக்கு உத்தரவாத விலையில் அரிசியினை வழங்கும் முகமாக பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டை ஊக்குவிக்க ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைக்கு அமைவாக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் ஒரு கட்டமாக வடமாகாணத்தில் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 8 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கே இலகு முறையில் செலுத்தும் வகையில் சௌபாக்கியா கடன் திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களை வினைத்திறன் மிக்கதாகவும் இலாப மீட்டும் நிறுவனங்களாகவும் மாற்றுவதுடன் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் நிலையங்களாக மாற்றியமைப்பது தொடர்பிலும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது பலநோக்கு கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுடன் அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் கலந்துரையாடினர்.

இந்நிகழ்வில் அமைச்சர்களுடன் கூட்டுறவு திணைக்கள உயர் அதிகாரிகள், வடமாகாண கூட்டுறவு திணைக்கள ஆணையாளர், வடமாகாண பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (5-4-250-299)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் 635 தீர்மானங்கள் நிறைவேற்றம்

(அக்கராயன்)

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச சபையில் சபை ஆரம் பிக்கப்பட்ட 2018 ஏப்ரல் மாதம் தொடக்கம் 31.12.2020 வரையான காலத்தில் 635 தீர்மானங்களும் 40 பிரேரணைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்துள்ளனர்.

வடக்கில் உள்ள பல உள் ளூராட்சி மன்றங்கள் தங்களின் கடமைகள் பொறுப்புக்களுக்கு அப்பால் பிரேரணைகள் தீர்மானங்கள் நிறைவேற்றுவதனையே பிரதான செயற்பாடாக கருத்தி பிரதேச சபை களின் வரையறைகளுக்கு அப்பால் சென்று தீர்மானங் களை நிறைவேற்றி வருகின்றனர்.

பிரதேச சபைகள் போட்டி போட்டிக் கொண்டு இவற்றை நிறைவேற்றி வருவதாக பொது மக்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். நிறைவேற்றப் படுகின்ற தீர்மானங்களில் பெரும்பாலானவை நடைமுறைப் படுத்த முடியாதவையாக காணப்படுகிறன.

இந்நிலையில் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையில் தாம் நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களில் 625 தீர்மானங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதாக வும் பிரரேரணைகளில் 33 பிரேரணைகளை நடைமுறை ப்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சட்டத்தின் படி செய்ய முடியாத பல தீர்மானங்களையும் தாம் நிறை வேற்றியுள்ளதாக குறித்த தகவலில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (5-4-350)

துஷ்டனையும், தங்கத்தையும், பேரிகையையும், முரட்டுக் குதிரையையும், கரும்பங்கழியையும், எள்ளையும் நற்குண விருத்தி கருதி அடிக்க வேண்டும்.– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தசரதருக்கு மந்தரைபோல மகிந்தவுக்கு வீரவன்ஸவா?

தசரதச் சக்கரவர்த்தி அப்பழுக்கற்ற மன்னன். அயோத்தி மக்களின் அன்புக்குரியவன்.

இவையாவற்றுக்கும் மேலாக, இராமபிரானின் தந்தை என ஏகப்பட்ட பெருமைக்கும் புகழுக்கும் உரித்தானவன்.

இருந்தும் தசரதச் சக்கரவர்த்தியின் இறுதிக்காலம் சோகமாய் அமைந்தது.

தன் மூத்த புதல்வன் இராமரைக் காட்டுக்கு அனுப்புகின்ற பெரும் பாதகத்தை அவன் செய்ய வேண்டியதாயிற்று.

அதனால் புத்திர சோகத்துக்கு ஆளாகி மரணத்தைத் தழுவிக் கொண்டான்.

தந்தையின் இறுதிச்சடங்கை மூத்த புதல்வன் நிறைவேற்றி வைப்பது வழமை.

எனினும் தசரத மன்னருக்கு அது சாத்தியப்படாமல் போயிற்று.

தவிர, இராமபிரானின் கையால் தசரதனுக்கு ஈமைக்கிரியை நடந்திருக்குமாயின் அஃது தசரதருக்கு சாயுட்சிய மோட்சத்தைக் கொடுத்திருக்கும்.

ஆக, அப்பெரும்பேறு தசரதச் சக்கரவர்த்திக்குக் கிடையாமல் போயிற்று.

இவற்றையெல்லாம் நோக்கும்போது, இதற்கெல்லாம் காரணம் என்ன என்ற தேடல் தோன்றும்.

இங்குதான் தசரத மன்னனின் மாமனையில் இருந்த கைகேயியின் தோழி மந்தரையே அனைத்துக்கும் மூல காரணம் என் பது உணரப்படும்:

ஆம், தசரதரின் அரண்மனை வளாகத்தில் இருந்து அரண்மனைக்குரிய அத்தனை சுகபோகங்களையும் அனுபவித்த கூனி, இராமர் மீது வெறுப்புக் கொண்டு இராமனைக் காட்டுக்கு அனுப்புவதற்காக கைகேயியைப் பயன்படுத்திய சூழ்ச்சியே, தசரதருக்கு இத்துணை கேட்டையும் தந்தது என்ற உண்மை அறியப்படும்.

இதைப்பார்க்கும்போது, இந்த நாட்டின் ஆளுந்தரப்புக்குள்ளும் சூழ்ச்சிகள் தொடங்கி விட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆம், கிழக்கு முனைய விவகாரத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அமைச்சர் விமல் வீரவன்ஸ போர்க்கொடி தூக்கியுள்ளார்.

கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கக்கூடாது என்பதில் மிகவும் இறுக்கமாக நிற்கும் அமைச்சர் விமல் வீரவன்ஸ, தனது எதிர்ப்பை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் காட்டுவது தெரிகிறது.

தவிர, அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ;

கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி மரணமடையும் இஸ்லாமியர்களை அவர்களின் மார்க்கத்தின்படி புதைக்க முடியும் எனக் கூறியிருந்தார்.

ஆனால் அவரின் உரைக்கு கிஞ்சித்தும் மதிப்புக் கொடுக்காத ஆளுந்தரப்பு, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறியபடியெல்லாம் செய்ய முடியாது என அதிரடியாக அறிவித்துள்ளது.

இவற்றையெல்லாம் ஒப்பிட்டு நோக்கும் போது மகிந்த ராஜபக்ஷ ஓரங்கட்டப்படுகிறாரா? அதைச் செய்வதற்கு அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமை தாங்குகிறாரா? என்று எண்ணத் தோன்றும்.

அதாவது தசரதருக்கு மந்தரைபோல மகிந்த ராஜபக்ஷவுக்கு விமல் வீரவன்ஸவா? என்ற கேள்வி மௌனமாக ஒலிக்கிறது.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# விசாரணை அறிக்கைகளை மூடிமறைக்க வேண்டிய தேவை அரசிற்குக் கிடையாது

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் விசாரணை அறிக்கைகளை ஒளிக்கமாட்டோம்.

கூடிய விரை வில் சபையில் முன்வைக்கப்படும். இவ்வாறு ஆளுங்கட்சி பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்த இரு அறிக்கைகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏன் தாமதம் ஏற்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"விசாரணை அறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

விவாதத்துக்கு நாள் வழங்கப்படும் என சபை முதல்வர் குறிப்பிட்டார்.

அதுவே அரசின் நிலைப்பாடு. ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் விசாரணை அறிக்கைகள் பாராளுமன்றத்துக்கு முன்வைக்கப்படாமல் மறைக்கப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

நாம் அவ்வாறு செய்ய மாட்டோம். ஒளிக்கவும் மாட்டோம். அறிக்கைகள் கூடிய விரைவில் முன்வைக்கப்படும். ஆளுங்கட்சி உறுப்பினர்களும் இதனையே விரும்புகின்றனர் என அவர் தெரிவித்தார். (நி-4)

### 20 வருடங்களின் பின்

# கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் நெல் கொள்வனவு ஆரம்பம்

(கொழும்பு)

20 வருடங்களுக்கு பின்னர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நெல் கொள்வனவு செய்யும் நடவடிக்கை நேற்று ஆரம்பமானது.

இதன் கீழ் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் கூட்டுறவு சங்கங்களுக்காக 4 சதவீத வட்டியின் கீழ் கடன் வழங்கப்படுவதாக கூட்டுறவு சேவைகள் விற்பனை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதுமுள்ள கூட்டுறவு திணைக்களங்கள் கொண்டுள்ள 382 நெல் களஞ்சியசாலைகளுக்கான 45 ஆயிரம் மெட்ரிக் தொன்னை இம்முறை பெரும்போகத்தில் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் மேலும் மாகாணங்களில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் மூலம் நெல்லைக்கொள்வனவு செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.


இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் நெல்லை அரிசியாக்கி நிவாரண விலைக்கு சந்தைக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில் ஜோசப் இராணுவ படை முகாம், SFHQ Vanni, விமானப்படை முகாம், விமானப்படைமுகாம்றோட்** ஆகிய பிரதேசங்களிலும் தடைப்படும்.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



## தானியத்தைப் பதுக்காதீர்கள்

❖ சரீர முயற்சியின் பலன் சிறிதளவே. ஆனால் தெய்வீகத் தன்மையோ எல்லாவற்றிலும் அதிகமான பலன் தருவதாகும். இப்போதைய வாழ்விற்கும் இனி வரப்போகும் வாழ்விற்கும் உறுதி தருவதாகும்.

❖ தானியத்தைப் பதுக்கி வைப்பவனைப் பொது ஜனம் சபிக்கும். ஆனால், அதை விற்பவன் தலையையோ வாழ்த்தும்.

❖ முட்டாளுக்கு அவனது புத்தியீனத்திற்கு ஏற்ப பதில் சொல். பதில் சொல்லாவிட்டால் அவன் தன்னை அறிவாளி என்று நம்பிக் கொண்டிருப்பான்.

❖ மிருதுவான பதில் சினத்தை மாற்றிவிடும். புண்படுத்தும் வார்த்தைகளோ ஆத்திரத்தைத் தான் கிளப்பிவிடும்.

❖ பணம் படைத்தவன் கடவுளின் ராஜ்ஜியத்திற்குள் நுழைவதை விட ஊசியின் காதுக்குள் ஒட்டகம் நுழைவது அதிகச் சுலபம்.

❖ கடவுளின் கருணையை பணத்தால் விலைக்கு வாங்கிவிடலாம் என்று நீ நினைத்தபடியால் உன்னுடைய பணம் உன்னுடனே அழிந்து போகட்டும்.

❖ அறிவாளிகளைத் திகைக்கச் செய்ய உலகின் பைத்தியக்காரப் பொருள்களை கடவுள் தேர்ந்தெடுத்தார். பலமுள்ளவற்றைத் திகைக்கச் செய்யப் பலவீனமானவற்றைத் தேர்ந்தெடுத்தார்.

# பட்டாசு ஆலையில் பயங்கர வெடி விபத்து

- 19 பேர் உடல் கருகிப் பலி
- 30 பேர் படுகாயம்
- 15 விடுதிகள் முற்றாக சேதம்



(சென்னை)

சிவகாசி அருகிலுள்ள பட்டாசு ஆலையில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 19 பேர் உயிரிழந்தனர்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே உள்ள அச்சன் குளம் கிராமத்தில் அமைந்துள்ள பட்டாசு ஆலையில் 150 இற்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்தவர்கள் பணிபுரிந்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணி அளவில் திடீரென பயங்கர வெடி விபத்து அங்கு ஏற்பட்டது. இதன்போது 150 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியில் இருந்துள்ளனர்.

இதில் ஆலையில் உள்ள 60 அறைகளில் 15 அறைகள் முற்றிலும் இடிந்து தரை மட்டமாகின. மேலும் 13 அறைகள் பலத்த சேதம் அடைந்து தீப்பற்றி எரிந்தன.

இந்த வெடிவிபத்து சத்தம் கேட்டு திரண்டு வந்த அயலூர் மக்கள் காயமடைந்தவர்களை விரைவாக மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பிவைத்தனர்.

இந்த வெடி விபத்தில் இதுவரை 19 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 30 பேர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.

வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் மிகவும் சிதைந்து போயும் கருகியும் இருந்ததால் உடல்களை அடையாளம் காண்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. (நி-4)

## பழ.நெடுமாறனுக்கு கொரோனா

(சென்னை)

தமிழர் தேசிய முன்னணி தலைவரும் ஈழத் தமிழர் தீவிர ஆதரவாளருமான பழ. நெடுமாறன் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்குலேசான காய்ச்சல், சளி இருந்ததால் கடந்த புதன்கிழமை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

தொடர்ந்து அவரிடம் மாதிரிகள் பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

தற்போது ராஜீவ்காந்தி அரச மருத்துவமனையில் பழ.நெடுமாறன் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் நலமுடன் இருப்பதாக மருத்துவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர். (நி-4)

## மியன்மார் இராணுவ ஆட்சிக்கு எதிராக
## ஐ.நா.மனித உரிமை பேரவை தீர்மானம்

(மியன்மார்)

**மியன்மாரில் இராணுவ ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆங் சான் சூகி உள்ளிட்ட தலைவர்களை விடுவிக்குமாறும் அங்கு மீண்டும் மக்கள் ஆட்சியை உறுதி செய்யுமாறும் வலியுறுத்தி ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.**

மியன்மார் நிலவரம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அவசரமாகக் கூடி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியது.

பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தால் கொண்டு வரப் பட்ட இந்தத் தீர்மானத்தை 47 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வாக்கெடுப்பின்றி ஏற்றுக்கொண்டது.

இருப்பினும் ரஷ்யாவும் சீனாவும் இந்தத் தீர்மானத்தில் இருந்து தாங்கள் விலகி இருப்பதாக அறிவித்தன. (நி-4)

## அமேசானில் தங்க சுரங்கங்கள்

(வோஷிங்டன்)

பெரு நாட்டில் இருக்கும் அமேசான் மழைக்காடுகளில் தங்கச் சுரங்கங்கள் இருக்கின்றதை நாசா வெளியிட்டுள்ளது.

இதில் பெரும்பாலான சுரங்கங்கள் சட்டவிரோதமாக நடத்தப்படுபவை என்பது குறிப்பிடத்தக்கது.

தங்கச் சுரங்கப் பணிகளுக்காக முறையாக தங்கத்தை எடுக்க உரிமம் பெறாதவர்கள் தோண்டி வைத்திருக்கும் குழிகள் என நாசா விண்வெளி முகாமை தெரிவித்தது.

பொதுவாக இந்தக் குழிகளை பார்வைக்குக் காட்ட மாட்டார்கள். சூரியஒளி பட்டு எதிரொலிப்பதால் தங்க ஜொலிப்பைக் காணலாம். (நி-4)

## உலக வானொலி தினம் நேற்று கொண்டாடப்பட்டது

உலக வானொலி தினம் நேற்றாகும். ஐ.நா. சபையின் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறு வனமான யுனஸ்கோ 2011 நவம்பர் 3 ஆம் திகதி உலக வானொலி தினத்தை அறி வித்தது.

முதலாவது உலக வானொலி தினம் இத்தாலியில் அமைந்துள்ள பீசா பல்கலைக்கழகத்தில் 2012 பெப்ரவரி 13 இல் கொண்டாடப்பட்டது.

"புதிய உலகம் புதிய வானொலி" எனும் தொனிப் பொருளில் இவ்வருட உலக வானொலி தினம் கொண்டாடப்படுகின்றது.

ஒலி அதிர்வுகளின் மூலம் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செய்திகளை அனுப்பும் சோதனையை மார்கோனி 1901 ஆம் ஆண்டு டிசெம்பர் 12 ஆம் திகதி அமெரிக்காவிலுள்ள ஒரு மலையின் உச்சியில் செய்து வெற்றி கண்டார்.

இந்த வெற்றியின் பின்னர் உருவானது தான் வானொலி. (நி-4)

## பிரித்தானியாவில்
## 66 ஆண்டுகளில் இல்லாத கடுங்குளிர் நிலவுகின்றது



(லண்டன்)

கடந்த 66 ஆண்டுகளில் இல்லாதவாறு பிரித்தானியாவில் நாடு முழுவதும் கடுமையான குளிர்காலநிலை நிலவி வருகின்றது.

இந்நிலையில், கடும் குளிர் நிலை நேற்று முன்தினம் இரவு பதிவாகியதாக அந்நாட்டு வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன் 1955 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கடுமையான குளிர் பதிவாகியுள்ளது.

"1955 பெப்ரவரி 23 முதல் இல்லாத அளவு பிரித்தானியா முழுவதும் நேற்று முன்தினம் இரவு குளிர்கால நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் 1962/1963 பனிப்பொழிவு பிரபலமற்ற குளிர்காலமும் அடங்கும். நேற்று முன்தினம் காலை 8.13 மணிக்கு அபெர்டீன்ஷையரின் ப்ரேமரில் குறைந்தபட்ச வெப்பநிலை 23.0 டிகிரி செல்சியஸ் ஆகும்.

இது 66 ஆண்டுகளில் இல்லாத அளவு பிரித்தானியாவில் பதிவான மிகவும் குளிரான பெப்ரவரி இரவு அது என தெரிவித்துள்ளது. (நி-4)

## பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டால்
## ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவு முறியும்
### ரஷ்யா எச்சரிக்கை

(மொஸ்கோ)

ரஷ்யாவுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் மேலும் பொருளாதாரத் தடைகளை விதித்தால் ஒன்றியத்துடனான உறவுகளை துண்டித்துக்கொள்ளத் தயாராக உள்ளதாக ரஷ்யா எச்சரித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி விவகாரம் தொடர்பில் ரஷ்யாவுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் மேலும் பொருளாதாரத் தடைகளை விதிக்கக்கூடும் என்ற தகவல்களுக்கு மத்தியில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அரங்கில் தனித்து விடப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. ஆனால் அப்படி ஒரு சூழல் ஏற்பட்டால் அதற்கு நாங்கள் தயாராகவே இருக்கிறோம் என ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்கெய் லாவ்ரோவ் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மொஸ்கோவில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

ரஷ்யாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான நல்லுறவு இரு தரப்புக்கும் மிகவும் முக்கியமானதாகும். ஆனால், சில துறைகளில் ரஷ்யாவுக்கு எதிராக தடைகள் விதிக்கப்படுவது பொருளாதார வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டார். (நி-4)

## வடக்கில் நேற்று...

சாலை ஆய்வுகூடத்தில் நேற்றுச் சனிக் கிழமை 340 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் செய்யப்பட்டுள் ளன.

அவர்களில் வட மாகாணத்தில் நான்கு பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கிளிநொச்சியில் இருவருக்கும் யாழில் ஒருவருக்கும் மன்னாரில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைத் தரப்புத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன.

(ம-3,18,60,250,299,316)

## கொரோனா...

துள்ளது.

கொரோனா வைரஸின் புதிய மாறு பாடு காரணமாக பொதுமக்கள் தேவை யற்ற உட்புற நிகழ்வுகள் மற்றும் செயல் பாடுகளை நடத்த அனுமதிக்கக் கூடாது என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போதுள்ள சட்டங்களின்படி, சுகா தார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்கும் போது இறுதிச் சடங்கு மற்றும் திருமண விழாக்கள் மட்டுமே நடத்த முடியும்.

தனிமைப்படுத்தப்பட்ட விதிமுறைகளை மீறும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக் கப்படும் என்றார். (ம-3)


மெகா பவர்
திகதி 13/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0764
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
V 05 10 44 45 47

மஹஜன சம்பத
திகதி 2021/02/13
சீட்டிழுப்பு இலக்கம் 4397
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
Q 0 2 3 7 3 9
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 13.02.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2692
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Z 24 49 66 80
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 13/02/2021 சீட்டிழுப்பு இலக்கம் 1096
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
W 9 6 6 2 3 4
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.02.13
சீட்டிழுப்பு இலக்கம் - 434
F 03 42 45 63
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்


## 20 குடும்பங்கள்...

னுக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது. இதையடுத்து அரியாலையில் 20 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அரியாலை, முள்ளிப்பகுதி மற்றும் அண்டிய இடங்களில் உள்ள சுமார் 20 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டன.

தொற்று உறுதி செய்யப்பட்டவரின் மகன் சென்ற இடங்கள் தொடர்பில் ஆரா யப்பட்டு வருகின்றது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

அதேவேளை, பஸ் நடத்துநரான முதல் தொற்றாளர் யாழ்ப்பாணம் நகரப் பகுதியை விட்டு வெளியிடங்களுக்குச் செல்லவில்லை என்பது ஆரம்ப விசார ணைகளில் தெரியவந்துள்ளது.

அவருக்குக் கொரோனா தொற்று எவ் வாறு ஏற்பட்டது என்பது தெரியவரவில்லை. பஸ் சாரதி தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவருக்குப் பி.சி.ஆர். பரி சோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட் டது. (ம-3)

## புதிய கோவிட்...

துரித ஆய்வு நடவடிக்கையில் சுகாதார அமைச்சு இறங்கியுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

வடமாகாணம் உள்ளிட்ட நாட்டின் 4 பகுதிகளில் அடையாளம் காணப்பட்டிருக் கும் புதிய வகை கொரோனா தொற்று தொடர்பான விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச் சின் உயர்அதிகாரிஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் தொற்றுநோயியல் பிரிவுக்கு அறிவுறுத்தியுள்ளதாக சுகாதார சேவை கள் பிரதிபணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

புதிய மாறுபாட்டின் பரவல் வீதம் அதிக மாக காணப்படுவதாக ஸ்ரீஜெயவர்த்தன புர பல்கலைக்கழகத்தின் ஆய்வு முடிவு கள் வெளிப்படுத்தியுள்ளன.

தற்போது குறித்த தொற்று கொழும்பு, அவிசாவளை, இங்கிரிய, பியகம, வத்தளை, மத்துகம, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளில் பெறப்பட்ட மாதிரிகளில் கண்டறியப்பட்டுள்ளது என்றார். (ம-3)

## இலங்கையின்...

மதமாக மாற்ற முன்மொழியப்பட்டது என்று பிவித்துரு ஹெல உறுமய கட்சி யின் தலைவர் அமைச்சர் உதய கம்மன் பில தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பில் சேர்க்கப்பட வேண்டிய 13 அம்ச ஆவணத்தை கொழும் பில் அமைச்சர் உதய கம்மன்பில நேற்று வெளியிட்டார்.

அதன்போதே அவர் இதனைக் குறிப் பிட்டார். (ம-3)

## இலங்கையில்...

ஆனால் ஐ.நாவுக்கு தைரியம் இல்லை. எனவே இலங்கை பொதுமக்கள் ஐ.நாவை சார்ந்து இருக்கக்கூடாது. ஒரு வேளை ஐ.நாவினால் நீதி கிடைத்தால் அது எதிர்பாராத வெற்றியாகும் என்று அவர் கூறினார்.

இலங்கையில் போரின்போதும் அதன் பின்னரும் ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கை குறித்த விரிவான மறுஆய்வு செய்ய அப்போதைய ஐ.நா. பொதுச் செய லாளர் பான் கீ மூன் நியமித்த குழுவுக்கு பெட்ரி தலைமை தாங்கினார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு அதன் பொறுப்புகளை நிறைவேற்றத் தவறி விட்டது என்று அந்த குழு கண்டறிந்தது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 74 ஆயிரத்தை...

கொரோனா தொற்றுக்கு உள்ளானவர் களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (ம-3)

## அரசுக்கு ஆதரவு...

அமைச்சர் நிசாட் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் முக்கியமான தலை வரை சந்தித்த பின்னர் அவர் இதனை அறிவித்துள்ளார்.

கொரோனா தொற்றால் இறக்கும் நபர் களை அடக்கம் செய்ய இடமளிக்கப்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பாராளு மன்றத்தில் தெரிவித்திருந்தமையை அடுத்தே பதியூதீன் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளதாக தகவல்கள் தெரி விக்கின்றன. (ம-3)

## கோவிட் - 19...

உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்றிரவு அறி வித்தார்.

அதன்படி, நாட்டில்கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணி க்கை 390 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## தமிழ்...

புறநகரிலுள்ள விருந்தினர் விடுதி யொன்றில் கட்சி களின் தலைவர் கள், பிரதிநிதிகள் சந்திக்கவுள்ளனர்.

எம்.கே.சிவாஜி லிங்கத்தின் ஏற் பாட்டில் இந்தச் சந் திப்பு நடக்கிறது. அனைத்து தமிழ் தேசிய கட்சிகளிற் கும் அழைப்பு விடுக்கப்பட்டுள் ளது. இந்தவகை யான சந்திப்புக் களில் இதுவரை தனியாக அழைக் கப்படாத ஜனநாயக போராளிகள் கட்சி யினரும் இன்று அழைக்கப்பட்டுள்ள னர். (ம-3)

## மைத்திரி...

பயங்கரவாத தாக் குதல் தொடர்பான விசாரணைகளை நடத்திய ஜனாதி பதி ஆணைக்குழு இந்த பரிந்துரையை முன் வைத்துள்ள தாக கூறப்படுகிறது.

இந்த ஜனாதி பதி ஆணைக்குக் குழுவை முன் னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவே நியமித் தார்.

விசாரணை களை நடத்திய ஆணைக் குழு கடந்த முதலாம் திகதி தனது அறி க்கை மற்றும் பரிந் துரைகளை தற்போதைய ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவிடம் கையளித்தது. (ம-3)

## இமையாணனில் பெண் ஒருவருக்கு கொரோனா

(கரணவாய்)

வடமராட்சி உடுப்பிட்டி இமை யாணன் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த பெண் கட்டுநாயக்காவில் உள்ள இறப்பர் தொழிற்சாலையில் பணி புரிந்துள்ளார்.

இவருக்கு கடந்த வியாழக் கிழமை பி.சி.ஆர் பரி சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதற்கிடையில் நேற்றுமுன் தினம் இமையாணன் பகுதியில் தனது வீட்டிற்கு வந்துள்ள நிலை யில் நேற்று கொழும்பில் இருந்து வெளியாகிய பி.சி.ஆர் பரிசோதனை முடிவில் இவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் குறித்த நபரை தனி மைப்படுத்தி வைத்தியசாலையில் அனுமதிக்கும் நடவடிக்கையில் அப்பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர் கள் ஈடுபட்டு வருகின்றனர். (ம-3,60)


லக்ன வாசனா
சீட்டிழுப்பு வாரம் 052
சீட்டிழுப்பு திகதி 13.02.2021
வெற்றி இலக்கங்கள்
25 35 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,485,580/=

அத கோடிபதி
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1193
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 13.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 107,850,055
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
40 50 67 69 Y
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3523
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 13.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,550,842
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
27 63 65 73 F
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 4,868,100/=
திகதி : 13.02.2021
வெற்றி வாரம் : 3074
வர்ணம் : இள நீலம்
வெற்றி இலக்கங்கள் மேடம்
08 25 37 54
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,502,160

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1367 நிறம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 13/02/2021 தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
H 33 43 49 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் 68,660,712/=

சுபீட்சம் / உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 410 திகதி 13.02.2021 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 03 50 58 ராசி எண் 7
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 14,039,192
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
Web: www.dlb.lk

## வேலை வாய்ப்பு

தனியார் அலுவலகம் ஒன்றில் பணிபுரிவதற்கு பெண் ஊழியர் தேவை.
தகைமை O/L, A/L

(5597)

**077 572 9724**

## வீடு வாடகைக்கு

யாழ். பருத்தித்துறை, புலோலி, 1ஆம் கட்டையில் புதிதாகத் திருத்தி அமைக்கப்பட்ட 4 அறைகள் கொண்ட விசாலமான வீடு உடன் வாடகைக்கு உண்டு.
தனியார் அலுவலகம், அலுவலர்கள் தங்குமிடம் (Quarters) போன்றவற்றிக்கு உகந்தது. முற்பணம், வாடகை பேசித் தீர்க்கப்படும்.
( தரகர் தேவையில்லை. )

(5667)

**☎-077 796 8805**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் யாழ். நகரில் IELTS (Academic and General ) A1 UK Exams (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை ) English Grammar and Spoken English தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். Guaranteed to 7.5 in IELTS Exams.

Jaffna College Under Graduate Department
( Group and Personal Classes available )

(5522)

Please Contact :
**077 780 3970, 074 007 1970**

## வாடகைக்கு

முருகேசு கட்டடம், ஏ9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சியில் இரண்டு கடைகள் வாடகைக்கு விடப்படும்.

(5623)

**076 335 4057**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1974 ஆம் ஆண்டு பிறந்த கார்த்திகை 2ஆம் பாதம் 5 இல் செவ்வாய் உடைய சுவிஸில் நிரந்தர வதிவிட உரிமை உடைய விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.

(5650)

**074 191 5106**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## காணிகள் விற்பனைக்கு

நல்லூர் செட்டித் தெருவில் 2 பரப்புக் காணியும், பண்ணை பஸ் நிலையம் முன்பாக 10 பரப்புக் காணியும் யாழ். சீனிவாசம் வீதியில் 7 பரப்புக் காணியும் இன்னும் பல காணிகள் விற்பனைக்கு உண்டு.

(5663)

**077 603 3259**
M.G.R

## காணி விற்பனைக்கு

யாழ். சீனிவாசம் வீதியில் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(5663)

**077 603 3259**
M.G.R

## பணிப்பெண் தேவை

மானிப்பாய் நவாலியில் வீட்டு வேலைகள் செய்வதற்கு 35 - 45 வயதிற்கு இடைப்பட்ட, நேர்மையான, வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(5666)

**தொடர்புகளுக்கு : 0777 888 325**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜேர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-1049)

**0768226240** DHL

## பணியாளர் தேவை

முன்னணி தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

- சிற்றூழியர் (ஆண் / பெண்)
- வகுப்பு மேற்பார்வையாளர் (ஆண்/ பெண்)
- கணனிப் பதிவாளர் (ஆண் / பெண் )

17.02.2021 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

(C-1340)

**NEW SCIENCE WORLD - JAFFNA**
Brown Road Junction, Jaffna.
**077 336 4055, 021 221 6690**

## அன்னா

EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/=
070 3305500
075 3305500

| | | | |
|---|---|---|---|
| 976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு |

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

## கண்ணீர் அஞ்சலி



இளைப்பாறிய ஆசிரியரும் முன்னாள் தலைவர் மதனசுரேந்திரனின் மனைவியும் கோவில் அங்கத்தவருமாகிய

திருமதி
**நாகேஸ்வரி மதனசுரேந்திரன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(5660)

நிர்வாக சபையினர்
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்)

## கண்ணீர்க் காணிக்கை



எமது நண்பன் ப. கமலதாசன்
(பிரதி அதிபர், யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் )
அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்
**நாகேசு பரமநாதன்**
( முகாமையாளர், S.S.WILSON, COLOMBO - 11 )

தோற்றம் 14.01.1949

மறைவு 12.02.2021

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நல்லூர்க் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(5648)

நல்லூர் நண்பர்கள்

## காணி விற்பனைக்கு

இல. 25, 3ஆம் குறுக்குத்தெரு, காங்கேசன் துறையில் ( ஸ்ரேசனுக்கு பின்பக்கம் )கிணற்றுடன் கூடிய காணி உடன் விற்பனைக்கு உண்டு.
நேரில் தொடர்பு கொள்ளவும்.
(தரகர் தேவையில்லை)

(5658)

**077 374 6008**

## பணிப்பெண் தேவை

வீட்டிலே தங்கியிருந்து வயோதிபப் பெண் ஒருவரை பராமரிக்கக் கூடிய பெண் ஒருவர் தேவை.

(5656)

**077 820 1195, 075 041 3579**

## வேலையாள் தேவை

களஞ்சியத்தில் இருந்து பொருட்களை விநியோகிக்கும் ஸ்தாபனத்திற்கு களஞ்சியப் பொறுப்பாளர் தேவை.

- பகுதிநேரம்
- முழுநேரம்

40 வயதிற்கு மேற்பட்ட கணனி அறிவுடைய திருநெல்வேலிப் பகுதியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

(5653)

தொடர்புகளுக்கு
**077 009 0189**

## வாகனம் தேவை

**விலைக்கு**
10 1/2 , 14 அடிக்கு உட்பட்ட ISUZU அலுமினிய BODY வாகனம் தேவை.

**வாடகைக்கு**
(மாதாந்த அடிப்படையில் )
விநியோக தேவைக்கு 10 1/2, 14 அடிக்கு உட்பட்ட பட்டா ரக அலுமினிய BODY வாகனம் தேவை.

(5653)

தொடர்புகளுக்கு
**077 009 0189**

## வேலையாட்கள் தேவை

கட்டட ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

- மேசன்
- கூலியாட்கள்
- காப்பென்ரர்
- வெல்டர்

(5662)

தொடர்புகளுக்கு
**076 600 3303**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00


வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 296

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 14.02.2021 தொலைபேசி : 021 222 3378



முல்லைத்தீவு
குருந்தூர் ஆதிசிவன்
ஆலயம்



தமிழ்நாடு
கூந்தூர் முருகன்
ஆலயம்



# குருந்தூர்மலை ஆதிசிவனே!

## எழுந்துவா எழுந்துவா!

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## விளையாட்டும் மீன்பிடியும் ஆங்கிலத்தில் வருகிறது பராக்...

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

என்ன விதானையாருக்கு உடல் நலம் சரியில்லைப் போல. மூப்பர் வினவினார்.

**விதானையார்:** பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நடந்த பேரணியில பங்குபற்றினனானல்லோ. கொஞ்சம் வெய்யில் பட்டுட்டுது.

விதானையார் இவ்வாறு கூறியதும் உசாரடைந்த சிறாப்பர் கனகசபை; எங்கட மக்களின்ர பேரெழுச்சி கண்டு வியந்து போனன். தமிழனை எவராலும் எதுவும் செய்யமுடியாது என்பதுதான் இப்ப என்ர நிலைப்பாடு.

**கங்காணி:** அதுசரி தமிழ்மக்கள் நடத்திய பேரணியை தென்பகுதியினர் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை என்று அமெரிக்கத் தூதுவர் சொல்லியிருக்கிறாரல்லோ.

**மூப்பர்:** எங்களுக்குத் தென்பகுதி கண்டு கொள்ள வேணுமெண்டில்ல. உலக நாடுகள் கண்டு கொண்டால் போதும்.

**சிறாப்பர்:** அதுதானே விவசாய அமைச்சர் சொல்லியிருக்கிறார். தமிழ்மக்கள் கனவு காணவேண்டாமெண்டு.

**சாத்திரியார்:** என்னைப் பொறுத்தவரை இந்த முறை இலங்கை அரசாங்கம் பாடம் படிக்குமெண்டு தான் நினைக்கிறன்.

**விதானையார்:** சாத்திரியார் நீங்கள் சொல்லுறதை நான் நம்பமாட்டன். (இவ்வாறு விதானையார் கூறியதும் ஆலடியில் நிசப்தம் நிலவியது. அந்த நிசப்தத்தைக் கலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.)

**கங்காணி:** ஏன் விதானையார் அப்படிச் சொல்லுறியள்.

**விதானையார்:** எங்களுக்குள்ள முதலில தூய்மை வேணும். தமிழ்த் தரப்புகளில யார் எந்தப் பக்கம் எண்டு தெரியாம இருக்குது. முதலில தமிழ்த் தரப்புகள் தமிழ் மக்களுக்கு விசுவாசமாக நடக்க வேணும். அதுதான் தேவை.

**மூப்பர்:** ஏன் விதானையார் பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நடந்த பேரெழுச்சியில ஒற்றுமையாகச் செயற்பட்டவியள்தானே.

**விதானையார்:** ஒற்றுமையாகச் செயற்பட்டிருந்தாலும் அந்தப் பேரணியைத் தாம்தாம் நடத்தியது போல சில தமிழ் அரசியல் கட்சிகள் காட்டிக் கொண்டனர். இது சரியோ.

**பண்டிதர்:** என்ன செய்யிறது. தமிழ்மக்களுக்காக எண்டு சொல்லிக் கொண்டாலும் தேர்தல் அரசியல் எண்ட ஒண்டு இருக்குதல்லோ. அப்ப தேர்தல் இலாபத்தையும் இடைக்கிடை சிந்திக்கிற தேவை அவையளுக்கு இருக்கத்தான் செய்யும்.

**வாத்தியார்:** சரி... சரி... எதையும் ஒட்டவெட்டி ஒட்டச்சாத்தாதீங்க. நல்லதை மட்டும் பார்ப்பம். இவ்வாறு வாத்தியார் கூறியதும் விதானையார் விசுவலிங்கத்திற்குக் கடும் கோபம் வந்தது. வாத்தியார் நாங்கள் ஒண்டும் ஒட்டவெட்டி ஒட்டச்சாத்தல்ல. ஆனால் எங்கட தமிழ் அரசியல்வாதிகள் சிலர் கடைசி நேரத்தில குழப்பம் செய்வினம். அதைத்தான் சொல்லுறன். இவ்வாறு விதானையார் உரக்கச் சொன்னதும் ஆலடியில் மீண்டும் மௌனம் நிலவியது.

மௌனத்தைக் கலைக்கப் பண்டிதர் குரல் கொடுத்தார்.

**பண்டிதர்:** அதுசரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில விளையாட்டு உடற்பயிற்சி அலகிற்கும் மீன்பிடிக் கற்கை நெறிக்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்குதாம்.

**சாத்திரியார்:** அது நல்ல விடயம் தானே.

**கங்காணி:** அனுமதி கொடுத்தது உண்மை தான். ஆனால் எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விளையாட்டு உடற்பயிற்சி நெறியையும் மீன்பிடி கற்கை நெறியையும் ஆங்கிலத்திலையல்லோ தொடரப்போகுதாம்.

**மூப்பர்:** நாசமறுக்க. அப்ப சிங்களப் பிள்ளைகளுக்கு இடம்கொடுக்கிறதுக்குத்தானே உந்த அனுமதியள்.

**சிறாப்பர்:** இஞ்சே மூப்பர் நீங்கள் சொல்லுறதைப் பார்த்தால் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுதான் ஆங்கிலத்தில கற்கை நெறியைத் தொடரச் சொன்ன மாதிரியல்லோ இருக்குது.

**மூப்பர்:** அப்ப அவையள் சொல்லவில்லையோ.

**சிறாப்பர்:** மூப்பர் இதெல்லாம் நாங்கள் தீர்மானிக்கிற விடயம் தான். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில விளையாட்டு விஞ்ஞானக் கற்கை நெறியையும் மீன்பிடிக் கற்கை நெறியையும் தமிழ்மொழியில ஆரம்பிக்கப் போறம் எண்டால் அதற்கு அவையள் அனுமதி தந்திட்டுப் போவினம்.

**மூப்பர்:** அப்ப என்ன கோதாரிக்காம் ஆங்கிலம் எண்டு கேட்டவியள்.

**பண்டிதர்:** மூப்பர் இதெல்லாம் உடன்பிறந்து கொல்லும் வியாதிகள்தான். இப்பவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில ஆயிரத்திற்கு மேற்பட்ட சிங்கள மாணவர்கள் படிக்கினம். இனி ஆங்கிலமொழியில விளையாட்டையும் மீன்பிடியையும் தொடக்கிவிட எங்கட பிள்ளைகள் ஒண்டும் அந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கமாட்டினம். சிங்கள மாணவர்கள் தானே வருவினம்.

**வாத்தியார்:** அப்ப இந்த இரண்டு கற்கை நெறியோட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில சிங்கள மாணவர்கள் அதிகம் எண்டாகிவிடும்.

**சாத்திரியார்:** இதுகளுக்கு ஒரு தீர்வு இல்லையோ?

**பண்டிதர்:** எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவைதான் இதுகள் பற்றிக் கதைக்க வேணும். குறைந்தது முதல் வருடம் தமிழிலும் பின்னர் ஆங்கிலத்திலும் கற்கை நெறியைத் தொடருதல் என்பதையாவது கொண்டு வந்தால் ஒழிய மற்றும்படி எங்கட பிள்ளையளுக்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும்.

**விதானையார்:** இதையொரு தீர்மானமாக நிறைவேற்றினால் என்ன?


**பண்டிதர்:** கட்டாயம் நிறைவேற்றவேணும்.


பண்டிதர் இவ்வாறு கூறியதும் விறுக்கென்று எழுந்த வாத்தியார் வைத்திலிங்கம் அன்புப் பெரியோர்களே! மரியாதைக்குரிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களே! பேராசிரியர்களே! பேரவை உறுப்பினர்களே! யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள மேற்குறிப்பிட்ட இரண்டு கற்கைநெறிகளையும் தமிழ்மொழி மூலம் ஆரம்பியுங்கள். அதில ஆங்கிலத்தையும் ஒரு முக்கிய பாட அலகாகக் சேருங்க.


இவ்வாறு வாத்தியார் தீர்மானம் கொண்டு வர, அதனை ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ள, அதற்குத் தனது ஆதரவும் இருப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# குருந்தூர்மலை அகழ்வாராய்ச்சியில் கிடைத்த சிவலிங்கம்







குருந்தமர நிழலின் கீழ் இருந்த சிவப்பரம்பொருள், மாணிக்கவாசகர் சுவாமிகளுக்கு உபதேசம் செய்தார் என புராணங்கள் கூறுகின்றன. குருந்த மரத்தைப் போன்று கல்லால மரத்தின் கீழிருந்தும் சிவன் உபதேசம் செய்வது பற்றிப் புராணங்கள் எடுத்துரைக்கின்றன.

பொதுவில் ஆலயங்களின் தூபிகளிலும் கோபுரங்களிலும் கல்லால மரத்தின்கீழ் தெட்சணாமூர்த்தியாக சிவப்பரம்பொருள் வீற்றிருந்து சந்தான குரவர்களுக்கு உபதேசம் செய்யும் நிகழ்வு காட்சிப்படுத்தப்பட்டிருப்பதைக் காணமுடியும்.

ஆக, குருந்தமரம் மற்றும் கல்லால மரம் என்பவற்றின் கீழ் சிவன் வீற்றிருந்து உபதேசம் செய்கின்ற இடங்கள் என்ற அடிப்படையில் அவை வழிபாட்டுக்குரிய இடங்களாகப் போற்றப்படுகின்றன.

இந்த அடிப்படையில் முல்லைத்தீவு மண்ணில் உள்ள குருந்தூர் மலையில் ஆதி சிவன் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார்.

ஆதிகாலம் தொட்டு சைவ மக்கள் சிவபெருமானை வழிபாடு செய்து வருகின்ற குருந்தூர்மலையை தமதாக்கும் நோக்கில் களமிறங்கிய தொல்பொருள் திணைக்களம், இப்போது ஆதிசிவனுக்கே ஆப்பு வைக்க முற்பட்டுள்ளது.

ஆம், குருந்தூர்மலை பௌத்த விகாரைக்குரியதென உரிமைகோரும் நோக்கில் அங்கு தொல்லியல் திணைக்களம் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது.

இவ் அகழ்வாராய்ச்சியில் பல்லவர் காலத்து தாராலிங்கம் கண்டெடுக்கப்பட்டது.

குருந்தூர்மலையை பௌத்த விகாரைக்குரிய இடமாக மாற்றுகின்ற நோக்கில் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்ட தொல்லியல் திணைக்களம் அங்கு பல்லவர் காலத்து தாராலிங்கம் கிடைக்குமென்று கனவிலும் நினைத்திருக்க மாட்டாது.

கிடைத்தது தாராலிங்கம் என்பதை மறைப்புச்செய்ய முற்பட்ட தொல்லியல் திணைக்களம் "குருந்தூர்மலையில் நடந்த அகழ்வாராய்ச்சியில் கிடைத்தது சிவலிங்கம் அல்ல என்றும் அது பௌத்த விகாரைகளில் அமையப்பெற்ற தூண்களின் அடிப்பாகம்'' என்றும் கூறியுள்ளது.

அதாவது குருந்தூர்மலையில் பௌத்த விகாரையே இருந்துள்ளது. எனினும் அது இப்போது சிதிலமடைந்து விட்டது என்பதாகத் தொல்லியல் திணைக்களம் கருத்துரைக்கிறது.

இங்குதான் தொல்லியல் திணைக்களம் தன்னை ஒரு பௌத்த அமைப்பாகக் காட்டிக்கொள்ள முற்படுகிறது.

ஒரு அரச திணைக்களம் இந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் பொதுவானதாக இயங்க வேண்டும். அதுவே அரச திணைக்களத்தின் தார்மீகக் கடமையாகும்.

ஆனால் இலங்கையில் உள்ள தொல்லியல் திணைக்களம் தமிழ்மக்களுக்கு எதிராகச் செயற்படுகின்ற நோக்கில் தமிழ்மக்களின் புராதனச் சின்னங்களை உதாசீனம் செய்வதைக் காணமுடிகிறது.

உண்மையில் தொல்லியல் திணைக்களம் தமிழர் பிராந்தியத்தில் அகழ்வாராய்ச்சியில் ஈடுபடுவதாக இருந்தால், தனது அகழ்வாராய்ச்சி நீதியாக-நியாயத்துவம் உடையதாக-பக்கச்சார்பற்றதாக இருக்கும் என்ற உறுதிமொழியை முதலில் வழங்கவேண்டும்.

இதை உறுதிப்படுத்துவதற்காக, தனது அகழ்வாராய்ச்சிப் பணியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள தொல் லியல் ஆய்வு சார்ந்த பேராசிரி யர்களையும் அத்துறையில் கற்று வருகின்ற யாழ். பல்கலைக்கழக மாணவர்களையும் இணைத்துக்கொண்டு அகழ் வாராய்ச்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

இதைவிடுத்து, பௌத்த துறவிகளை அழைத்துக் கொண்டு, இதோ! குருந்தூர்மலையில் பௌத்த எச்சங்களைத் தோண்டியெடுக்கப் போகின்றோம் என்பது போலச் செயலாற்றுவது எந்தவகையிலும் நியாயமாகாது.

தவிர, அகழ்வாராய்ச்சியின் போது தொல்லியல் சின்னம் கிடைக்கப் பெற்றால், கிடைத்த அடையாளம் உரிய பகுப்பாய்வுக்குட்படுத்தப்படுவதுடன், புலமைசார் தொல்லியல் அகழ்வாராய்ச்சி நிபுணர்களின் கருத்துக்களைக் கேட்டறிவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

இதைவிடுத்து, சிவலிங்க அடையாளத்தையொத்த சின்னங்களை விகாரைத் தூண்களின் அடிப்பாகம் என எடுத்த எடுப்பில் கூறுவதானது சிவப்பரம்பொருளை நிந்தை செய்வதாக அமைவதுடன் சைவமக்களையும் புண்படுத்தும் செயலாகும்.

எனவே இதுவிடயங்களில் தமிழர் தரப்புகள் உரிய கவனம் செலுத்த வேண்டும். குருந்தூர்மலையில் கிடைத்தது சிவ லிங்கம் என்று கூறுவதில் பௌத்தத்திற்கு எந்தப் பங்கமும் ஏற்படமாட்டாது.

ஏனெனில் கௌதம புத்தபிரான் ஓர் இந்து. எனவே எங்கள் சமயம் என்று சிங்கள மக்கள் ஏத்துகின்ற பௌத்தம் ஒரு தத்துவமேயன்றி அது சமயமன்று. அதாவது அஃது இந்து சமயத்தின் விழுமியங்களைச் சார்ந்து புத்தபிரானால் இந்த உலகிற்குப் போதிக்கப்பட்ட தத்துவம்.

ஆக, சிவபூமி என்று போற்றப்படுகின்ற ஈழத்தில் உரியவாறு அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டால், சிவ வழிபாட்டுச் சின்னங்களும் தெய்வ விக்கிரகங்களும் நிறையவே கிடைக்கப்பெறும். இதுவே உண்மை.

இந்த உண்மையை மறைப்புச் செய்வது மாபாவத்திற்குரியது. இதனைக் கௌதம புத்தபிரானும் ஒருபோதும் விரும்பமாட்டார் என்பதை பௌத்தபீடங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

விதுரன்




# கொடுக்கும் கை கீழே வாங்கும் கை மேலே

அக்பர் சபையில் அமர்ந்து ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கும் போது ஒரு விநோதமான எண்ணம் தோன்றியது.



உடனே அமர்ந்திருந்த அமைச்சர்களை நோக்கி, பொதுவாக ஒருவர் தானம் கொடுக்கின்றார் என்றால் அவரது கை உயர்ந்தும், வாங்குபவரின் கை தாழ்ந்தும் இருப்பது உண்மை! ஆனால் தானம் தரும் சமயத்தில் கை தாழ்ந்தும் பெறுபவரின் கை உயர்ந்தும் இருப்பது எந்த சமயத்தில்? இதற்கு சரியான விளக்கம் கூறுங்கள் என்றார் அக்பர்.

சக்கரவர்த்தி கேட்ட கேள்விக்கு அமைச்சர்கள் எவ்வளவு யோசித்தும் விடை சரியாகக் கிடைக்கவில்லை. ஆதலால் மன்னனின் கேள்விக்கு பதில் சொல்லாது மௌனமாக இருந்தனர். அச்சமயம் பீர்பால் சபை யில் வந்து அமர்ந்தார் மற்ற அமைச்சர்களிடம் கேட்ட அதே கேள்வியை பீர்பாலிடம் அக்பர் கேட்டார்.

பீர்பால் சிரித்துக்கொண்டே சக்கரவர்த்தி அவர்களே எல்லோரும் எளிதாகப் பதில் சொல்லி விடுவார்கள். இதற்கு விடையளிக்க வேண்டும் என்பதனால் விடையளிக்கிறேன்.

ஒருவர் மூக்குப் பொடிடப்பியைத் திறந்து மூக் குக்குப் பொடி போடும்போது மற்றொருவர் கொஞ்சம் மூக்குப் பொடி தாருங்கள் என்று கேட்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அச்சமயம் அவர் அந்த டப்பியை அவர் முன் நீட்டுவார். மூக்குப் பொடிய்யை எடுப்பவர் கொடுப்பவரின் கையைவிட எடுப்பவரின் கை சற்று மேலே இருக்கும்.


ஆகையினால் மூக்குப் பொடி தானம் தரும் சமயம் கொடுப்பவரின் கை கீழேயும் வாங்குபவரின் கை மேலேயும் உயர்ந்திருக்கும் என்றார் பீர்பால். இந்தச் சின்ன விடயம் கூட நமது அறிவுக்கு எட்டவில்லை என்று மற்ற அமைச்சர்கள் வருத்தப்பட்டனர்.

தன்னுடைய கேள்விக்கு சட்டென்று பதில் சொன்ன பீர்பாலை அக்பர் மிகவும் பாராட்டினார்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சிரஞ்சீவி அலெக்சாண்டர்

116



புருஷோத்தமருடன் நடந்த யுத்தத்தில் மாசிடோனியப் படைகள் ஜெயித்தபோதும்கூட அவர்களுடைய அடிமனத்தில் உருவான பயம் மட்டும் விலகவே இல்லை. தொடர்ந்து இந்தியாவுக்குள் அடியெடுத்து வைக்கத் தயங்கினார்கள்.

விடயம் அலெக்சாண்டரின் கவனத்துக்குச் சென்றது. எவ்வளவு உத்தமமான வீரனுடன் போரிட்டிருக்கிறோம் என்று ஒருபக்கம் பெருமைப்பட்டாலும் பயந்த வீரர்களை நினைத்தால் ஆத்திரமாக வந்தது.

நடந்ததை எண்ணிக் கவலைப்பட வேண்டாம். நம்மை வெல்ல உலகில் எவருமே இல்லை என்பதை ஒவ்வொரு முறையும் நிரூபித்துக் கொண்டே வருகிறோம்.

நாம் இன்னும் செல்ல வேண்டிய தூரம் எவ்வளவோ இருக்கிறது. அடைய வேண்டிய இலட்சியங்கள் எத்தனையோ இருக்கின்றன.

நாம் கடப்பதற்காக பரந்து விரிந்து ஓடும் கங்கை நதி காத்திருக்கிறது. களைப்பு உங்கள் உடலில் இருக்கலாம். மனத்தில் கூடாது. ஓய்வெடுங்கள்.

சொல்லிவிட்டுத் தானும் ஓய்வெடுக்கப் புறப்பட்டார் அலெக்சாண்டர். வீரர்கள் மத்தியில் எவ்விதமான அசைவும் இல்லை. அமைதி நிலவியது.

போர் தொடங்கி வெகுகாலமாகி விட்டது. ஊரில் இருக்கும் மனைவி, மக்களின் முகமே மறந்துவிடும் போல இருக்கிறது. மாசிடோனிய வீரர்கள் புலம்பத் தொடங்கினார்கள். அலெக்சாண்டர் வீரர்களை அழைத்துப் பேசினார்.

அன்புக்குரிய வீரர்களே! உங்களுடைய சூழலில் தான் நானும் இருக்கிறேன். நானும் உங்களைப் போலவே ஒரு வீரன். இந்தியாவை ஒட்டுமொத்தமாக நமது கைப்பிடிக்குள் கொண்டுவர வேண்டும் என்ற இலட்சியத்துடன் புறப்பட்டோம்.

அதற்கான பணிகளில் ஓரளவுக்கு வெற்றி கண்டுவிட்டோம்.

(தொடரும்)



## அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்களா?

**தர்மதன் — யாழ்ப்பாணம்**

**வாழ்வில் இழப்புகளை எப்படி எதிர்கொள்வது வியாசரே?**

அனைத்தையும் கடந்து போவதுதானே வாழ்க்கை. வாழ்க்கை என்கின்ற பேருந்தில் நாமெல்லாம் பயணிக்கின்றோம்.

நின்று விட்டதே என்பதற்காக பஸ் நிறுத்தப்பட்ட அந்தபேருந்துநிலையம்நமக்குச்சொந்தமானதல்ல.

இது போல்தான் வாழ்க்கையும் கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் எனும் அனைத்துச் செயற்பாடுகளும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கும்.

அந்த கடினமான கணப்பொழுதெல்லாம் கடந்து போக வேண்டியதுதான் மனிதனுடைய வேலை.

**ஆருகாஸ் — துனுக்காய்**

**அடிப்பவனுக்கு திருப்பி அடிப்பது தவறா வியாசரே?**

ஒருவன் நமக்கு அடிக்கிறான் என்றால் அமைதியாக இருக்கலாம். அந்த அமைதியை அவன் பயம் என நினைப்பானானால் நினைத்த அடுத்த கணமே எதிரி எதிர்பாராத அதிரடியைக் கொடுக்க வேண்டும்.

நாம் கொடுக்கும் அந்த அதிரடி எப்படி இருக்க வேண்டும் என்றால் இன்னொரு இடத்தில் அவன் கை நீட்ட யோசிக்க வேண்டும். அப்படி இருக்க வேண்டும் நம் பூசை.

ஒரு கன்னத்தில் அறைந்தவருக்கு மறு கன்னத்தைக் காட்டுவோமானால் இயேசுவிற்குப் பின் எத்தனை இயேசுக்கள் பிறந்திருக்க வேண்டும்.

**கோட்டாமேரி — அச்சுவேலி**

**நேற்று நண்பர்கள் தினம், இன்று காதலர் தினம் இதுபற்றி காதல் மன்னன் வியாசரின் கருத்து என்ன?**

வாய்க்குள்ள இருக்கிற 32ம் கழண்டு கன காலமாப் போச்சு. இப்ப காதல் எண்டு உச்சரிக்க கூதல் எண்டுதான் வெளியே கேக்குது.

இந்த வண்டவாளத்திலை காதல் மன்னனோ



பல்லு உள்ளவன் பகோடாச் சாப்பிடுறான். நமக்கு இடிச்சுப் பொடி பண்ணிற பவுடர்தான். அதைப் பகோடா என்று சாப்பிட வேண்டியது தான்.




**தருஷ் — வடமராட்சி**

**வியாசருக்கு காதலிச்ச அனுபவம் ஏதும் உண்டோ?**

அந்தக் கறுமாந்திரத்தை ஏன் கேக்கிறாய் இப்படித்தான் ஒரு ஐஞ்சு வருசமா ஒரு பெண்ணின் பின் சுற்றினேன்

சுற்றுவதென்றால் வேறொன்றும் இல்லை பார்ப்பது மட்டும் தான்.

அவர் பெயரை என் கையில் எழுதி அழகு பார்ப்பது, காதலர் தினத்தன்று அவள் வீட்டுக் கதவைப் பார்த்துக் கொண்டு அந்த வீதியால் போவதும் வருவதும் இப்படியே ஐஞ்சு வருசம் போய்விட்டது.

ஒரு நாள் கையில் ஒரு கவருடன் என்னை நோக்கி வந்தாள். எனக்கு நெஞ்சு படபடத்தது. நான் சொல்லுவன் எண்டு காத்திருந்து ஏலாமல் அவளே காதல் கடிதம் கொண்டு வாறாள் எண்டு நினைச்சன்.

கிட்டவந்தவள் கவரைத் தந்துவிட்டு தவறாமல் வாங்கோ என்று சொல்லிவிட்டு சென்றாள்.

திறந்து பார்த்தேன் அது அவளின் திருமண அழைப்பிதழ்.

**தபேந்து — நெல்லியடி**

**ஆதி சிவன் மைந்தன் என்பது நீர்தானோ?**

அடப்பாவி அதுக்குள்ள கொண்டுபோய் என்னை ஏன்றா கொளுவி விடுறாய்.

நானே ஏதோ நீங்க கேக்கிற கேள்விகளுக்கு அப்படி இப்படி என்று பதிலை சமாளிச்சு விடுறன்.

என்னைப்போய் ஆதிசிவன் மைந்தன் எண்டு சொல்ல அந்த சிவனுக்கு கோபம் வந்து நெற்றிக் கண்ணைத் திறந்து விட்டா நான் பொசுங்கிப் போடுவனே.



## வியாசருக்கு காதலிச்ச அனுபவம் ஏதும் உண்டோ?

**பரமேஸ் — வதிரி**

**அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்களா?**

அரசியல் கைதிகள் என எவரும் சிறைகளில் இல்லை என ஆளாளுக்கு பாராளுமன்றில் கதை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்களா? என்று கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

அது சரி, அரசியல் கைதிகள் என யாரும் சிறைகளில் இல்லை என்றால் தமிழ் தரப்புகள் சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளின் பெயர்ப்பட்டியல் அடங்கிய அறிக்கையை தரும் போது ஏன் அதைக் கைநீட்டி வாங்கினீர்கள்.

அப்போதே இது அது இல்லை எனக் கூறி இருக்கலாமே.
கடுப்பேத்துறார் மைலாட்.

**நேதாஜி — வதிரி**

**சுமந்திரனுக்கு பாதுகாப்பு தேவையா?**

பாதுகாப்பை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தான்தான் எடுத்ததாகப் பகிரங்கப்படுத்தி விட்டாரே.

இதற்குமேல் என்னத்தைச் சொல்லிவிட முடியும்.

**சுதன் — குப்பிழான்**

**சிறையிலும் இல்லை வெளியிலும் இல்லை என்றால் சரணடைந்தவர்கள் எங்கே?**

மண்ணுக்குள் தேடிப் பாருங்கள் என்று சொன்னார்கள் தானே. இதில் புரியவில்லையா அவர்களின மனக்கிடக்கை.

தம் பிள்ளைகளைக் கொடுத்துவிட்டு இன்று வருவான் நாளைவருவான் என காத்திருக்கும் பெற்றோரின் மனக்கிடக்கை புரியாதவர்களை மனிதர்கள் என்று கூறமுடியுமா என்ன.

ஐந்தறிவு ஜீவன்கள் கூட தனது பிள்ளையை இழந்தால் எப்படித் துடிக்கிறது.

காணாமல் போனவர்களின் உறவுகள் படும் பாட்டை பட்டுணர்ந்தால் மாத்திமே உணர்ந்து கொள்ள முடியும். அந்த வலியை வார்த்தைகளால் சொல்லிவிட இயலாது.

**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

## அன்புலகை ஆளட்டும்



அன் புலகை யாளட்டும்!
அதி வுலகு வாழட்டும்!
துன்ப நிலை துவளட்டும்!
தூய்மை யது துலங்கட்டும்!

செய் தொழில்கள் சிறக்கட்டும்!
சீரிளமை பிறக்கட்டும்!
வாழ்வுரிமை வளரட்டும்!
தாழ்வு நிலை தளரட்டும்!

வான மெங்கும் பொழியட்டும்!
வக்கி ரங்கள் ஒழியட்டும்!
தான மென்றும் தழைக்கட்டும்!
தக வதனால் தளிர்க்கட்டும்!

கால வெள்ள மோடட்டும்!
கற்கை நெறி நீளட்டும்!
கோல நிலை கூடட்டும்!
கொள்கை யென்றும் குலவட்டும்!

கலாபூஷணம் கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம்

## எம் தமிழ்

இன்னா,
பருத்தித்துறை

தாய்மொழியில் தாலாட்டுக் கேட்கும் தன்னினத்தோடு
வீரம் மிக்க வித்தகர் நிறைந்த ஈழம் தனில்

தரணி போற்றும் தேன்விழி காண் தேன்மொழி தனில்
எம்மொழி என வினவ தமிழ் என எழுந்தது ஓர் குரல்

அனல் வீசும் அலைகடல் தனில்- அறம் போற்றும்
ஈழத்தமிழர் அடிமைப்பட்டிருப்பது ஏனோ?

உரிமை வேண்டி உணவு விடுத்த தமிழனை
உணர்வு இன்றி இகழ்த்திக் கூறியது ஏனோ?

பார் போற்றும் பல் நூல் நிறைந்த நுண்கடலை
மனிதத்தனம் இன்றி தகனம் செய்தது ஏனோ?

நித்தம் நிலம் போற்றும் நந்திக்கடலை
இரத்தம் தலம் தோய்ந்து இரட்சித்தது ஏனோ?

உரிமை இழந்த என் உயிர்த் தமிழரை
ஈழம் தனில் உரிமை பெற வைக்குமா என் கவி

## தமிழ்- உயிர்

அராலியூர் ப.தர்மகுமாரன்

அகத்தியம் தந்த அதிசய மொழியாம்
ஆதித் தமிழனின் தெய்வீக மொழியாம்
அமிழ்தினும் இனிய பல்சுவை மொழியாம்
அகிலம் போற்றும் எங்கள் தமிழ்

தட்டிப் பறித்து தடைகள் பல போட்டு
எட்டப்பர் சிலரின் துரோக சிந்தனையில்
அழித்து ஒழித்து அடக்கிவிடலாம் என
ஆர்ப்பரித்துக்கொண்டு எக்காளமிடுகின்றது

ஏட்டிலும் எழுத்திலும் தமிழ்மொழி வளர்த்து
மூச்சிலும் பேச்சிலும் தமிழ் உரையாற்றி
ஏட்டிக்குப் போட்டியாய் கலைகளை உயர்த்தி
உலகப் பரப்பெல்லாம் தமிழ்மணம் கமக்க

அகிலம் வியக்க தமிழைக் காத்து
புகுவழி காட்டி புனிதம் காத்து
அழிவுகள் ஒரு போதும் தமிழனை அடக்கா
தமிழன் இருக்கும் வரை தமிழும் தழைக்கும்

மங்காத் தமிழன் மரபைக் காப்பான்
மானமுள்ள தமிழன் வீரமுடன் வாழ்வான்
வீழ்ந்துவிட்ட தமிழன் வீறுகொண்டு எழுவான்
வீழ்ந்தவைகள் எல்லாம் வித்துக்களே




## மௌனத்தின் தேடல்- 515



### காதலர் தினம்

ஒன்று மொன்றும் இரண்டு
இன்று நீயும் நானும் ஒன்று
என்னைத் துணிந்து நம்பு
என்றும் நிலைக்கும் தென்பு
எண்ணம் போல் வாழ்வும்
வண்ண மலர்த் தோட்டமாகும்

க.நாகராசா,
நுணாவில்.

### உடைப்பு

இரும்புக் கரம் கொண்டு
கொடுமைகள்
பல தந்து
வலிகளைப் பெருக்கி
வதைகளை விதைக்கும்
அநீதியே!
ஒருநாள் உடையும்
உன் கழனைப் பிழகள்
அன்று
விழந்திருக்கும்
எங்கள் தேசம்

நல்லூர் தேன்நிலா

### ஒன்றும் புரியவில்லை எனக்கு

இரக்கமில்லா இதயத்தில்
ஓடுவது ஏழைகளின்
உயிர் விழி சாறா!
அரக்கனெனின் ஆலகால
விட நெஞ்சா
ஒன்றும் புரியா
எனக்கு இறைவா!
உனக்கேதும் புரிகிறதா சொல்
பூவுலகு இன்று
புழுங்கி மடிகிறதே

சிவகாமி
நல்லூர்

### விதிக்குள் அகப்பட்ட வாழ்க்கை

புரிந்தும் புரியாததாய்
சில நிமிடங்கள்– வாழ்வில்
தவறென்று தெரிந்தும்
தெரியாததாய் பல சுமைகள்
எம் மனதில்... புதைந்து போன
கனவை மறப்பதா? இல்லை
புதைக்கப்பட்டுக் கொண்டு இருக்கும்
எம் வாழ்வின் நனவை
மறப்பதா தெரியவில்லை
விதிக்குள் அகப்பட்டுச் செல்கிறது
நம் வாழ்க்கையும் நாட்களும்

ம.கோல்டாமேரி
யா/ புனித தெரேசாள் ம.க.

## மௌனத்தின் தேடல்- 516



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

### மனித பொம்மை

பெரிய மனிதன் ஒருவனின் ஆளுகையின்
கைக்குள் சிறிய மனித பொம்மையின்
உயிர் உரிமை நசிப்பது போல
சித்திரிக்கும் காட்சி!

சி.சுகிர்தமலர், உரும்பிராய்

### அவலம்தான் முடிவுமில்லை

மூச்செடுக்க முடியவில்லை
முற்றாக உடல் குருதி
முடிவுவரை ஓடவில்லை
தொண்டை இறுக்கியதால்
பருக்கை ஏதும் இறங்கவில்லை
அண்டையிலும் ஆருமில்லை
அவலம்தான் முடிவுமில்லை
ஆர் எனக்கு உதவுவாரோ

சி.சங்கீதா, நாரந்தனை



# ஒற்றுமையின் எழுச்சி

> “தமிழன் என்றொரு இனமுண்டு
> தனியே அவர்க்கொரு குணமுண்டு
> அமிழ்தம் அவரது மொழியாகும்
> அன்பே அவரது வழியாகும்”

வாழை மரம் இருக்கிறதே. அதை உண்டாக்குவது மிகவும் சுலபமானது. அதுபோல அதற்கு பெரிதாக பராமரிப்பும் தேவை இராது. நிறைவான தண்ணீரே அது வளர போதுமானது. வாழை மரத்தை ஒரு இடத்தில் உண்டாக்கிவிட்டால் அதனை அழிப்பது மிகவும் சிரமமானது. அடியில் ஒரு சிறு கிழங்குத்துண்டு இருந்தாலே போதும் மண்ணை பிரித்து வெளிவந்து தன் வம்சத்தை விருத்தி செய்யும்.

அதனால்தான் எம்மவர்கள் பலர் பரம்பரை வம்சவிருத்தி என்பதை வாழை மரத்துடன் ஒப்பிட்டு வாழையடி வாழை என்கிறார்கள்.

வாழை மரத்தை வெட்டி வீதியோர குப்பையில் போட்டிருப்பதை நாம் அவதானித்திருப்போம்.

ஒரு சிறு மழை கண்டால் போதும் வெட்டி வீழ்த்தப்பட்ட அந்தக் கிழங்கில் இருந்து குருத்து வைத்து அந்த இடத்தில் தன் இனத்தை பரப்பி நிமிர்ந்து நிற்கும் வல்லமை கொண்டது வாழைமரம்.

வாழை மரத்திற்கும் தமிழ் இனத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பது கண்கூடு.

ஆம், வெட்டி வீழ்த்தப்பட்ட கிழங்கில் இருந்து தன் இனத்தை எப்படி வாழை பரப்புகிறதோ அதேபோல தமிழினமும் வெட்டி வீழ்த்த வீழ்த்த மீண்டும் மீண்டெழுந்து தன் இனத்தின் தன்மானத்தை பறைசாற்றி ஓங்கி ஒலிக்கும்.

தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் கொஞ்ச நஞ்சமல்ல. அந்த அநீதிகளைக் கொடுத்தது இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் என்றால் அதற்கு மறு கருத்துக் கிடையாது.

தமிழர்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட, அது இளைஞர் மத்தியில் பேரெழுச்சியை ஏற்படுத்தியது. அந்த எழுச்சி பாரிய ஆயுதப் போராட்டமாக மாற அது தமிழர்களின் உரிமைகளைப் பெற்றெடுக்கும் தியாக வேள்வியாக கடைப்பிடிக்கப்பட்டது.

தமக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்ள தொடங்கப்பட்ட தமிழர்களின் ஆயுதப் போராட்டம் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு வன்னிப் பெருநிலப் பரப்பில் மௌனிக்கப்பட அதில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதுடன் பல்லாயிரக்கணக்கானவர்கள் அங்கவீனர்களாக்கப்பட்டமை இன்றளவில் சாட்சியாக விளங்குகின்றது.

பல்லாயிரக்கணக்கான அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டதை மறைத்து பயங்கரவாதம் அழிக்கப்பட்ட நாளாக வெற்றி விழாக் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட பெரும்பான்மை அதில் திருப்தியும் கண்டது.

இனி தமிழினத்திற்கு மீட்சி இல்லை. தமிழினத்திற்கென இருந்த தமிழ்த் தரப்பும் விலைபோய் விட்டது. இனி தமிழினத்தினால் தலைநிமிர முடியாது எனும் தோரணையில் பேரினவாத அரசுகள் தமிழர் நிலங்களை கபளீகரம் செய்யும் செயற்பாட்டில் வலு வேகமாகச் செயற்பட்டதுடன் காரணமின்றி சிறைகளில் அடைத்து வைத்திருக்கும் அரசியல் கைதிகளை விடுவிக்காமல் அரசியல் கைதிகள் என சிறைகளில் எவரும் இல்லை என அறிக்கை விடுவதில் அதிக கவனம் செலுத்தினர்.

தோற்கடிக்கப்பட்ட இனம் இனி சுதந்திரம் பற்றிப் பேசக் கூடாது என்று அரசு சார்ந்த பிரமுகர்கள் பாராளுமன்றின் உள்ளேயும் வெளியேயும் கொக்கரித்துக் கொண்டே இருக்கின்றனர்.

தமிழர் உரிமை சார்ந்து யாரேனும் வாய்திறந்தால் அவர்களை உள்ளே அடைப்போம் என மிரட்டும் தொனியில் பேசியும் வந்தனர்.

அடக்குமுறைக்குள் அடைபட்டுக் கிடந்த தமிழினம் ஒன்றும் தன்மானத்தை இழந்த இனமல்ல.

“தமிழர் என்றொரு இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு, அமிழ்தம் அவரது மொழியாகும், அன்பே அவரது வழியாகும் என்ற நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கத்தின் கூற்றுக்கிணங்க பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில், தமிழினம் தோற்கடிக்கப்பட்ட இனமல்ல என்பதை இந்த உலகிற்குப் பறைசாற்றியிருக்கிறது.

பொத்துவிலில் விதைக்கப்பட்ட சிறு தீ பொலிகண்டியில் பாரிய தீப்பிழம்பாய் கொதித்ததைப் பார்த்த பேரின அரசிற்கு பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்பதே உண்மை.

தனது உரிமைகள் மறுக்கப்படுகின்றன, நிலங்கள் சுரண்டப்படுகின்றன. அவற்றை உடன் நிறுத்த வேண்டும் எனக் கோரி மேற்கொள்ளப்பட்ட பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான அறப்போரின் வீரியம் பற்றி தென்னிலங்கை ஊடகங்கள் கண்டுகொள்ளாவிட்டாலும் தமிழனின் ஒற்றுமையினை மீண்டும் வலுவடையச் செய்திருக்கிறது இந்த அறவழிப் போர் என்பது உண்மையானது.

வயது வித்தியாசமின்றி பேரணியில் கலந்து கொண்டு தமிழரின் உரிமைகளை வலியுறுத்திய இந்த அறத்தீ சாதாரணமானதல்ல. இதை சாதாரணமானது என யாரும் நினைத்தால் அதற்கு யாம் ஒன்றும் செய்துவிட முடியாது.

வீதிகளில் ஆணிகளைக் கொட்டி, தடைகளையிட்டு, புகைப்படம், வீடியோ என்பவற்றை எடுத்து, நீதிமன்றங்களூடே தடைகளை விதித்து இப்படி இந்த அறப் போரினை நிறுத்த எடுத்த அத்தனை சதி வேலைகளையும் பொடிப் பொடியாக்கி பொத்துவில் தொடங்கி பொலிகண்டியில் சபதமெடுத்து முடிவடைந்தது அறவழிப் போராட்டம்.

வெட்ட வெட்ட முளைத்தெழும் வாழைமரம் போல தமிழினமும் எவ்வளவுதான் அழிக்கப்பட்டாலும் மீண்டெழும். தன் பண்பாடு, கலாசாரம் என்பவற்றை கட்டிக்காத்து தன்னினத்தின் இருப்பை நிலை நிறுத்தும்.


இதையே பொத்துவில் முதல் பொலிகண்டி வரை மாபெரும் மக்கள் எழுச்சி அறவழிப் போராட்டம் எடுத்துக் காட்டியிருக்கிறது.

“ஒற்றுமையே பலம்”

அபிமன்யு

# பறக்கும் தட்டை பார்த்தது தவறா?





## மாயமில்லை மந்திரமில்லை

நீல் டிகிராஸ் டைசன் எனும் இயற்பியலாளரை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். வானியற்பியலில், முதன்மையானவர்களில் இவரும் ஒருவர், அற்புதமான அறிவாளி. இவர் தயாரித்து வெளியிட்ட, 'காஸ்மோஸ்' தொலைக்காட்சித் தொடர் உலகப் பிரசித்தம். வேற்றுக் கோள்களில் ஏலியன்கள் இருப்பதை இவர் மறுத்ததேயில்லை. ஆனால், 'பறக்கும் தட்டுகள் பூமிக்கு வந்தன' என்றால் போதும் கொலைவெறியாகிவிடுவார், கேலியாகச் சிரிப்பார். பறக்கும்தட்டுகளை அவரால் ஏற்றுக்கொள்ளவே முடிவதில்லை. 'யூஃபோ' என்றுதான் பறக்கும்தட்டை அழைக்கிறார்கள்.

அதன் அர்த்தம், '**Unidentified Flying Object**' என்பது. அடையாளம் காணப்படாத பறக்கும் பொருள். 'பறப்பது என்னவென்றே தெரியாவிட்டால், அதை ஏலியனின் விண்கலமென்று எப்படிச் சொல்லலாம்?' என்பதே டைசனின் கேள்வி. ஆனாலும், யூஃபோக்களை கி.மு.1440இலேயே எகிப்தில் கண்டதாகப் பதிவுகள் உள்ளன. அப்போதிருந்து இப்போதுவரை பல லட்சம் பதிவுகள் காணப்படுகின்றன. பறக்கும்தட்டை முதலில் புகைப்படம் எடுத்தவர், 'வில்லியம் ரோட்ஸ்' எனும் பீனிக்ஸ் நகரவாசி. 7 ஜூலை, 1947இல் எடுத்தார்.

டிஜிட்டல் கமராக்களும் கம்ப்யூட்டரும் இல்லாத காலத்தில் புகைப்படங்களை வெட்டுதல், ஒட்டுதல் அறியாத சாதாரண மனிதர், தற்செயலாக வானத்தில் தெரிந்த பறக்கும் பொருளை, அவர் எடுத்த புகைப்படம் அமெரிக்காவின் பிரபல பத்திரிகைகளில் வெளியானது. இரண்டு நாட்களுக்குப் பின்னர், வில்லியமின் வீட்டுக்கதவு தட்டப்பட்டது. வாசலில் இரண்டு **FBI** உளவாளிகள், தங்களின் அடையாள அட்டையைக்காட்டி அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். வில்லியம் எடுத்த புகைப்படத்தையும் நெகட்டிவையும் வாங்கிக்கொண்டார்கள் போய்விட்டார்கள். அடுத்த தினங்களில், **FBI** காரியாலயத்துக்குத் தொலைபேசியில் கேட்டபோது, அப்படி யாரையும் அனுப்பவில்லை எனப் பதில் வந்தது.

அந்தச் சம்பவம் நடப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் (24. 06.1947) 'கென்னத் ஆர்னால்டு' எனும் விமானி, விமானத்தில் பறந்து கொண்டிருந்தபோது பறக்கும்தட்டைக் காண்கிறார். அதன் வடிவத்தை வரைந்து, குறிப்புகளுடன் அரசுக்கு அனுப்பிவைக்கிறார். ஆனால், கிணற்றில் போட்ட கல்தான். இரண்டு வாரங்களுக்குப் பிறகு, வில்லியம் எடுத்த புகைப்படத்தைப் பத்திரிகையில் பார்த்தபோது, 'இதேதான் நான் கண்ட பறக்கும்தட்டு' என்று பத்திரிகையாலயத்துக்கு அறிவித் தார். அத்துடன், வில்லியம் படமெடுத்த அதே தினத்தில், ரோஸ் வெல் என்னும் இடத்தில் பறக்கும் தட்டொன்று நிலத்தில் விழுந்து நொறுங்கியது. அதுவே, இன்றுவரை உலகையே ஆச்சர்யத்தில் ஆழ்த்தி வைத்திருக்கும் ரோஸ் வெல் பறக்கும் தட்டு மர்மம். இந்த மூன்று சம்பவங்கள் நடந்த இடங்களுக்கும் மனிதர்களுக்கும் எந்தவிதத்திலும் சம்பந்தமேயிருக்கவில்லை!

ஏப்ரல் 27, 2020 அன்று, மக்களின் பார்வைக்காக, மூன்று காணொலிகளை பென்டகன் வெளியிட்டது. அவற்றில் இருப்பவை உண்மையானவையென்றும் அறிவித்தது. அமெரிக்கக் கடற்படையினரின் விமானிகளால் பதிவுசெய்யப்பட்ட அந்தக் காணொலிகளில், பறக்கும் தட்டுகள் படமாக்கப்பட்டிருக்கின்றன. 2004, 2015 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட காணொலிகள். 2004 ஆம் ஆண்டு, பசுபிக் கடலின் மேற்பரப்பில், 160 கிலோமீற்றர் தூரத்தில், மிதந்தபடியிருந்த பறக்கும்தட்டை ரேடார் காணொலி மூலம் படம்பிடித்திருந்தனர்.

இரண்டு போர் விமானங்களின் விமானிகள், பறக்கும்தட்டைக் கண்டதும் பேசிக்கொண்ட உரையாடல்களும் தெளிவாகவே பதிவாகியிருக்கின்றன. 2015 ஆம் ஆண்டு காணொலிகளில், பறக்கும் தட்டுகள் பறக்கும் வேகம், சுழலும் அதிசயம், இரு சம்பவங்களாகப் படம் பிடிக்கப்பட்டிருக்கின்றன. அப்போதும் விமானிகளின் உரையாடல்களும், ஆச்சரியக் கூச்சல்களும் பதிவாகியிருக்கின்றன.

அந்த மூன்று காணொலிகளையுமே பென்டகன் வெளியிட்டு, அவை உண்மையானவையென்று உறுதியும் செய்திருக்கிறது. ஆனால், இதுவரைக்கும், மில்லியன் காணொலிகளையும், புகைப்பட ஆதாரங்களையும் சாதாரண மக்கள் பூமியெங்கும் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் ஒன்றைக்கூட உண்மையென்று எந்த அரசும் ஒப்புக்கொள்ளவில்லை.

2017 ஆம் ஆண்டில், நியூயோர்க் டைம்ஸ்"க்கு இரகசியமாக, இந்தக் காணொலிகள் கிடைத்தன. உடனடியாக அவற்றைப் பத்திரிகையில் வெளியிட்டார்கள். அப்போது பிடித்தது சனியன். உலகெங்கும் பெருந்தலைவர்கள் ஏலியன்களின் இருப்பை உறுதிப்படுத்துமாறு பேசிக்கொண்டார்கள். கனடாவின் முன்னாள் அமைச்சர், இஸ்ரேல் அமைச்சர் ஆகியோர் வெளிப்படையாகவே ஏலியன்கள் பூமிக்கு வந்தது உண்மைதான் என்றார்கள்.

தாமஸ் ரீட், அம்மா நான்சி, தம்பி மாத்யூ, பாட்டி ஆகிய நால்வரும் பறக்கும் தட்டிலிருந்து மீண்டும் காரில் விடப்பட்டார்கள் அல்லவா... பாட்டியே முதலில் சுய நினைவுக்கு வந்தார். பின்னர் எல்லோரும் பழையநிலைக்கு வந்தார்கள். சில நிமிடங்கள்தான் பறக்கும்தட்டில் இருந்ததாக ஒவ்வொருவரும் நினைத்தார்கள்.

ஆனால், மூன்று மணி நேரம் பறக்கும்தட்டில் இருந்திருக்கிறார்கள். ஒரு வழியாக வீடு வந்து சேர்ந்தவர்கள், நடந்தவற்றை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டார்கள். விடிந்ததுதான் தெரிந்தது, சுற்றுவட்டாரத்திலிருக்கும் பலருக்கு அந்த அனுபவம் கிடைத்திருந்தது. 'டாம் வார்னர்', 'மெலனி கிர்ச்டார்ஃபர்' , 'ஜேன் கிரீன்' ஆகிய மூவரும் இதில் முக்கியமானவர்கள். அங்கிருந்த பொலிஸ் நிலையம், வானொலி நிலையம் ஆகியவற்றுக்கும் அறிவிக்கப்பட்டது.

பலர் தங்களிடம் முறையிட்டதாக வானொலி நிலையத்தினரும் சொல்லியிருந்தார்கள். மசாசுசெட்ஸ் முழுவதும் செய்திகள் பரவின. வழமைபோல யாரும் நம்பவில்லை. அந்தச் சம்பவத்தைச் சொல்பவர்கள் கேலியாகப் பார்க்கப்பட்டனர். ஊர் மக்கள் மட்டுமே அவர்களை நம்பியும் துணையாகவும் இருந்தவர்கள். பொலிஸ் நிலையத்திலும், வானொலி நிலையத்திலும் இருந்த பதிவுகள் நீக்கப்பட்டன.

இது பற்றிப் பேசுவதில் பயனேதுமில்லை என்று சம்பந்தப்பட்டவர்கள் நிறுத்திக்கொண்டார்கள். ஆனால், அவர்களைச் சுற்றி ஏதோ நடந்து கொண்டிருந்தது. குறிப்பாக தாமஸ் ரீட் குடும்பம் எங்கு சென்றாலும் சிலரால் அவதானிக்கப்பட்டார்கள். சம்பவம் பற்றிப் பேச வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டார்கள். அறிவுறுத்தியவர்கள், அமெரிக்க அரசின் உளவுப் பிரிவினர் என்பது தெரிந்தது. பயத்தில் பேசுவதை நிறுத்திக் கொண்டார்கள்.

ஆனால், நான்சியைப் பிரிந்திருந்த தாமஸின் அப்பாவுக்கு அந்தச் சம்பவம் முழுவதும் தெரியவந்தது. அவரொரு சட்டத்தரணியாக இருந்தார். நடந்த சம்பவத்தைப் புத்தகமாக எழுதி வெளியிட ஆயத்தமானார். சிலரால் அதுவும் தடுக்கப்பட்டது. அவரோ அதை விடுவதாக இல்லை. ஒருநாள் அலுவலகத்தில் இறந்துகிடந்தார். அவரின் இரத்தத்தில் பங்கசுகள் பரவியிருந்ததாக மரண அறிக்கை தெரிவித்தது. அலுவலகத்தி லிருக்கும் குளிரூட்டியிலிருந்து பங்கஸ் பரவியதாகத் தெரிந்தது.

அதன் கீழே உடைந்துபோன பரிசோதனைக் குழாயின் சிறு துண்டுகள் கண்டெடுக்கப்பட்டன. அத்தோடு நின்றிருந்தால்கூட இந்த அளவுக்குச் சந்தேகம் வந்திருக்காது. மறுநாள் அரசு அதிகாரிகள் எனச் சொல்லிக்கொண்டு, தாமஸின் தந்தை அதுவரை சேகரித்திருந்த அனைத்து ஆவணங்களையும் துடைத்தெடுத்து, கொண்டுசென்றனர்.

காரணமேயில்லாமல், நான்சிக்கு 25,000 டொலரை அரசு கொடுத்தது. இவையெல்லாம் தாமஸ் ரீட், ஒரு தொலைக்காட்சிக்குக் கொடுத்த வாக்கு மூலம். அதன் பின்னர் யாருடனும் அது பற்றிப் பேசுவதற்கு தாமஸ் குடும்பம் தயாராக இருக்கவில்லை. யாருடன் மோதுகிறோம், யார் எதிரியென்றே தெரியாமல் என்னதான் செய்வது... தற்செயலாகப் பறக்கும்தட்டைச் சந்தித்தது அவ்வளவு தவறான காரியமா? ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர், முதன்முறையாக் வாய்திறந்திருக்கிறார்கள். அது நடந்துவிட்ட பல சம்பவங்களின் திறவுகோலானது.

இப்போது சிலரால் கேட்கப்படும் கேள்வி முக்கியமானது. 'பறப்பது என்னவென்று தெரியாததால், அதை 'யூஃபோ' என்று குறிப்பிட்டோம். இப்போது தான் அவற்றை இனம் கண்டுவிட்டோமே... அதனால், அவற்றை 'யூஃபோ' என்று சொல்லாமல் 'ஐஃபோ' (**IFO Identified**) என்று சொல்ல லாமே?' என்கிறார்கள். நீல் டிகிராஸ் டைசன் போன்ற விஞ்ஞானிகளும் அப்படிச் சொல்லும்போது மறுத்துப் பேச முடியாதல்லவா?

மர்மம் தொடரும்......

# ஒரு நான் பலதாகிறேன்!



வயிற்றில் அல்ஸர் என்பதால், பிரபல ஹோமியோபதி டாக்டர் ஒருவரிடம் சிகிச்சைக்குப் போயிருந்தேன். அவர் என் வயிற்றை அழுத்தோ அழுத்தென்று, அரை மணி நேரம் அழுத்திப் பரிசோதித்தார். கையால் அழுத்தியே, வயிற்றில் உள்ள என் குடலிடம் நேரடியாக 'என்ன சங்கதி' என்று கேட்டுவிடலாம் என்கிற அபிப்ராயமோ என்னவோ!

மாபெரும் மருந்து அலுமாரியே எனக்குப் பின்னால் அனுப்பி வைப்பார் என்று நினைத்து நடுங்கிக்கொண்டிருந்தேன். ஆனால், ஒரேயொரு சிறிய பொட்டலத்தில் மருந்து தந்தார். எக்ஸ்ரே, எண்டோஸ்கோபி, எண்டுஸ்கோபி போன்றவற்றுக்கெல்லாம் எனக்குக் கொடுப்பினை இல்லையோ என்று உள்ளுக்குள் ஏமாற்றத்துடன், அவரை ஏறிட்டேன். "இந்த பவுடரை அரை லீற்றர் தண்ணீரில் கலந்து ஒரு போத்தலில் வைத்துக்கொண்டு, வயிறு வலிக்கிறபோதெல்லாம் ஒரு ஸ்பூன் சாப்பிடுங்க" என்றார்.

எனக்கு கொஞ்சம் இருமலும் உண்டு. ஆகவே, அவர் முன் வலுவில் இருமிக் காண்பித்து, அதற்கும் மருந்து கேட்டேன். "உங்களுக்குக் கொடுத்திருக்கிற இதே மருந்தை இன்னும் ஒரு ஸ்பூன் சாப்பிடுங்க'' என்றார். "இரண்டுக்கும் ஒரே மருந்தா?'' என்றேன். உடனே அவர், "உங்களுக்குத் தலை வலி வருமா?'' என்று கேட்க, "எப்பவாவது வரும்'' என்றேன். "அப்படி வரும் போது, இதே மருந்துல இன்னும் ஒரு ஸ்பூன் சாப்பிடுங்க'' என்றார். "அட... சகல ரோக நிவாரணி என்பார்களே, அந்த மாதிரியா இது!'' என்று சிரித்தேன் (வயிற்றெரிச்சலுடன்).

அவர், 'இப்போ நான் எங்கே இருக்கேன்?' என்று புதிர் போட்டார். 'இது என்ன கேள்வி? கன்ஸல்டிங் ரூம்லதான் இருக்கீங்க' என்றேன். "இங்கே, கன்ஸல்டிங் ரூம்ல உங்ககிட்ட பேசிட்டிருக்கேனே... என் பேரு என்ன?' என்றார். உடனே நான், 'டாக்டர் சிவகாமிநாதன்' என்றேன்.

"சரி, கொஞ்சம் நேரம் கழித்து, மாடியில, டைனிங் ஹோல்ல சாப்பிடுவேனே... அப்ப என் பேரு என்ன?'' என்று கேட்க, "என்ன டாக்டர் தமாஷ் பண்றீங்க... அப்பவும் டாக்டர் சிவகாமிநாதன்தான்'' என்றேன், சற்றே சலிப்புடன்.

"ஆகவே, இருப்பது ஒரே நான்தான். வேறு வேறு இடத்தில் தோன்றுகிறேன். ஆனால், எல்லா இடத்திலும் என் பெயர் சிவகாமிநாதன்தான். வியாதியும் அப்படித்தான். ஒவ்வொருத்தருக்குள்ளேயும் இருப்பது ஒரே வியாதிதான்.

அது தலையில் வரும்போது தலைவலி என்றும், வயிற்றில் வரும்போது வயிற்றுவலி என்றும், கால்,கை மூட்டுகளில் வரும் போது மூட்டுவலி என்றும் பெயர் மாறுகிறது. மூல காரணத்தை அறிந்து வைத்தியம் செஞ்சுட்டா, எல்லா வியாதிகளும் ஒரே வித மருந்தில் குணமாகிடும். என் மருந்தின் ரகசியம் இது தான்'' என்றார்.

மருந்துப் பொட்டலத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, சிந்தனையுடன் வீட்டுக்கு நடந்தேன். நோய் மட்டுமல்ல, கடவுளுடைய செயல்கள்கூட அப்படித் தான்! நமக்கு இருப்பது ஒரே மனம்தான். கெட்ட மனம், வஞ்சக மனம், சூழ்ச்சி மனம், தாராள மனம் என்று அதைப் பலவிதமாகச் சொல்கிறோம்.

இறைவனால் அளிக்கப்பட்ட மனமும் அப்படித்தான்! அது எங்கெங்கு எப்படி எப்படி சஞ்சரிக்கிறதோ, அத்தகைய பெயர்களைப் பெறுகிறது. நமக்கு அளிக்கப்பட்டுள்ள அந்த ஒரு மனத்தைச் சுத்தமாக வைத்துக்கொண்டால் போதும் அது எந்தச் செயலைச் செய்தாலும் தூய்மையாகவே இருக்கும்!

# பேய்க்கதை



–இந்திரபுத்திரன்–

யாரும் ஏதும் ஏடாகூடமாகக் கதைத்தால் "பேய்க் கதை கதைக்காதை" எனும் வழமை ஊர்ப்புறங்களில் இருக்கிறது.
பேய்க்கதை சொல்லி, தானே பேய்க்குப் பயந்து ஓடிப்போய் தாயின்ர இடுப்பில் ஏறி இருக்கும் காஞ்சனா லோரன்சை எல்லோருக்கும் தெரியும் தானே.
பேய்க்கு (அமானுஷ்ய சக்தி) பயப்படாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் என்பதே உண்மையானது.
இதுவும் 1980 களில் நடந்த ஒரு சுவாரஸ்யமான பேய்க்கதையே.
சின்னவி அண்ணருக்கு ஆடு, மாடு பிசினஸ் தான். ஆடு, மாடுகளை பார்த்த உடனேயே ஆடு இத்தினை கிலோ தேறும், மாடு இத்தினை லீற்றர் பால் கறக்கும் நாம்பன் உழவுக்குச் சரிவருமா வராதா எண்டு கணித்துச் சொல்லி விடுவார்.
அவரின் கணிப்பும் தவறுவதில்லை. அதனால் அவரின் பேச்சு எப்போதுமே எடுபடும்.
அன்றும் விளானில் மாடு ஒன்று அவிழ்ப்பதற்காக கால்நடையாகச் சென்றவர் அலுவல் முடிஞ்சு காசெல்லாம் செற்றில் பண்ணி மாட்டை அவிழ்த்துவர இரவு 11 மணி ஆகிவிட்டது.
அந்தக் காலங்களில் விளான் மயானம் படு பயங்கரமானது. வீதியின் இருமருங்கும் பற்றை. கும் இருட்டு. ஏதோ ஒரு அசாத்திய துணிச்சலில் சின்னவி அண்ணன் மாட்டை கலைச்சுக் கொண்டு விளான் பாதையில் வந்தவருக்கு பனிக்குளிருக்கு சுருட்டை மூட்டுவம் என்ற நினைப்பு வர, இடுப்பில் வைத்திருந்த சுருட்டை எடுத்து நெருப்பு பெட்டியை உரசி மூட்டி தீக்குச்சியை எறிய முற்பட ஒரு குரல் கேட்டது.
"தம்பி நெருப்பைத் தா" எண்டு நிமிர்ந்து பார்த்தவர் நெருப்பைக் கேட்டவரிடம் நெருப்பை கொடுக்க மாடு திமிறியது. மாட்டுக் கயிற்றை இழுத்துப் பிடித்தவர் நிமிர்ந்து பார்க்க நெருப்பு வாங்கியவரைக் காணவில்லை.
அப்பதான் விளான் சுடலைக் கொள்ளிவாய் பேய் நினைவுக்கு வந்தது சின்னவி அண்ணனுக்கு.
பிறகென்ன கட்டியிருந்த சாரத்தை அவிழ்த்து எறிஞ்சுவிட்டு ஓட்டம் பிடிச்சவர்தான் கருகம்பனைச் சந்தியில் வந்துதான் கால் ஆறினார்.
இரவு 12 மணி எண்டதாலை பிரச்சினை இல்லாமல் போச்சு. மெல்லமா வீட்டை வந்து கொடில கிடந்த சாரத்தை எடுத்துக் கட்டிக் கொண்டு வீட்டுக்கை போனார்.
அடுத்த 10 நாள் அண்ணருக்கு குலைப்பன் காய்ச்சல்.

## கதை கதையாம் காரியமாம்



# "வதம் செய்வேன்!" சசி எடுக்கும் புது ஆயுதம்



சென்னையில் திடீர் மழை ஓய்ந்த இம்மாதம் 8 ஆம் திகதி பின்னிரவுக்கு மேல் தனது நான்கு வருட சிறை வாசத்தை முடித்துவிட்டு வீடு திரும்பியிருக்கிறார் சசிகலா. ஒரு முறை அ.தி.மு.க கொடியைக் கட்டியதற்கே பொலிஸ் டி.ஜி.பி. வரை புகார் மனு அளித்த அமைச்சர்கள், அந்தக் கொடியுடன் பெங்களூரிலிருந்து சென்னைக்கு 350 கிலோ மீற்றர் தொலைவுக்கு ஆதரவாளர்கள் புடைசூழ சசிகலா பயணமானவுடன் பதற்றத்தின் உச்சிக்கே சென்று விட்டார்கள்.

## அம்மா மேல் சத்தியம்!

இம்மாதம் 6 ஆம் திகதி நடந்த அந்தக் கூட்டத்தில், எமோஷனலான மனநிலையில்தான் இருந்தார் முதல்வர் பழனிச்சாமி. கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரின் உதடுகளிலும் மௌனம். விருப்ப மனுக்கள் பெறுவது, பூத் கமிட்டி பற்றிய ஆலோசனை என்று சொல்லப்பட்டாலும், சசிகலாவின் வருகை, அ.தி.மு.கவின் மேல்மட்டம் வரை பலரையும் ஆட்டம் காணச் செய்திருந்தது.

கோவையில் ஏற்கனவே பல்வேறு கூட்டங்களுக்கு ஒப்புக்கொண்டதால் அமைச்சர் வேலுமணியும், மகளின் நாட்டியாஞ்சலி அரங்கேற்றத்தால் அமைச்சர் சி.விஜயபாஸ்கரும், கொரோனா பாதிப்பிலிருந்து அண்மையில் மீண்ட அமைச்சர் காமராஜூம் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இவர்களைத் தவிர மற்ற அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், வழிகாட்டுதல் குழு உறுப்பினர்கள் என அனைவரும் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி பேசும்போது அவர் குரல் தழுதழுத்துவிட்டது என்கிறார்கள். "நான்கு வருடங்களில் உங்களுக்கெல்லாம் எவ்வளவு சாதகமாக இந்த ஆட்சி இருந்தது என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். மீண்டும் அம்மாவின் ஆட்சி அமைய வேண்டும். உங்கள் மாவட்டத்திலுள்ள நிர்வாகிகளை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் கழகத்துக்கு விசுவாசமாக இருப்பீர்கள் என்று சத்தியம் செய்யுங்கள்" என்று உருக்கமாகக் கூறியிருக்கிறார் எடப்பாடி. இதைத் தொடர்ந்து, நிர்வாகிகள் அனைவரும் நெஞ்சில் கைவைத்து, 'அம்மா மேல சத்தியமா அ.தி.மு.கவைவிட்டுப் போகமாட்டோம்' என்று சத்தியப்பிரமாணம் எடுத்திருக்கிறார்கள்.

ஆலோசனைக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக பழனிச்சாமி தரப்பிடம் இரண்டு தென்மாவட்ட அமைச்சர்கள், "நீங்களே கூடிப் பேசிக்கிறீங்க, நீங்களே முடிவு எடுத்துக்குறீங்க. பிறகு எதுக்காக எங்களை ஆலோசனைக் கூட்டத்துக்குக் கூப்பிடுறீங்க? கூட்டத்துல எங்களையும் பேசவிட்டால்தானே ஒரு முடிவு கிடைக்கும்" என்று சற்று வேகமாகவே ஆதங்கப்பட்டிருக்கிறார்கள்.

அதற்கு, "எல்லோரும் பேசினால் குழப்பம் தான் வரும். தலைமை என்ன முடிவெடுக்கிறதோ, அதை நீங்க செயற்படுத்தினால் போதும்" என்று பழனிச்சாமி தரப்பிலிருந்து பதில் வந்திருக்கிறது. இதனால், அந்த அமைச்சர்கள் இருவரும் அப்செட் என்கிறார்கள்.

## பன்னீர் மௌனம் பின்னணி என்ன?

இந்தக் கூட்டத்தில் கட்சி ஒற்றுமையை வலியுறுத்தியதோடு, துணை முதல்வர் பன்னீர்செல்வத்தின் பேச்சு சுருக்கமாக முடிந்துவிட்டதாம். இது பழனிச்சாமி தரப்புக்கு ஏமாற்றம் என்கிறார்கள். சசிகலாவுக்கு எதிராகப் பேட்டியளிக்கச் சொல்லி பன்னீருக்கு கடந்த ஒரு வாரமாக பழனிச்சாமி தரப்பு நெருக்குதல் கொடுத்திருக்கிறது. அதற்கு அவர் மசியாததால், அறிக்கை மட்டுமாவது விடச் சொல்லியிருக்கிறார்கள்.

அதற்கும் பன்னீர் உடன்படவில்லையாம். இரண்டு வாரங்களுக்கு முன்பாக, 'நமது அம்மா' நாளிதழிலில் வெளியிடுவதற்காக சசிகலாவைக் கடுமையாக விமர்சித்து ஒரு கட்டுரை தயாராகி இருந்திருக்கிறது. அதையும் பிரசுரிக்கக் கூடாது என்று பன்னீர் தடுத்துவிட்டாராம். இதை முன்வைத்து சசிகலா ரூட்டுக்கு வண்டியைத் திருப்ப பன்னீர் தயாராகி விட்டதாகவும், சில சிக்னல்களுக்காக அவர் காத்திருக்கிறார் என்றும் சொல்கிறார்கள் பன்னீருக்கு நெருக்கமானவர்கள்.

## "வதம் செய்வேன்!"

ஆவேசம் தணியாமலேயே பயணத்தைத் தொடங்கினார் சசிகலா. தமிழக - கர்நாடக எல்லையான ஜூஜூவாடி அருகே வந்தபோது, திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழக அ.தி.மு.க துணைச் செயலாளர் தட்சணாமூர்த்தியின் காருக்கு மாறினார் சசிகலா. இந்த டுவிஸ்ட்டை யாருமே எதிர்பார்க்கவில்லை.

"சசிகலாவின் காரிலிருந்து கொடியைக் கழற்றினால் பிரச்சினை வெடிக்கும். இதைவைத்தே சசிகலா மீது ஏதேனும் வழக்கைப் பதிவுசெய்து கைது செய்யலாம் என்று காத்திருந்தது எடப்பாடி அரசு. அதற்கெல்லாம் இடம் கொடுக்காமல் காரை மாற்றி இராஜதந்திரமாக நடந்து கொண்டார் சசிகலா.

மேலும், சசிகலாவின் காரிலிருந்து தானே அ.தி.மு.க கொடியைக் கழற்ற முடியும்? அ.தி.மு.க உறுப்பினரின் காரிலிருந்து கட்சிக்கொடியைக் கழற்ற முடியாதே... இதுவும் சசிகலாவின் ஐடியா தான். பயணத்தின் இடையே, ஓசூரிலுள்ள முத்து மாரியம்மன் கோயிலுக்குச் சென்றார் சசிகலா. அங்கு அவருக்கு ஜீவிதா என்கிற பெண்மணி அ.தி.மு.க சால்வையை அணிவித்தார். அடுத்து, கிருஷ்ணகிரி அருகே மோரண பள்ளியிலுள்ள மஹா ப்ரத்யங்கரா தேவி கோயிலுக்கு சசிகலா சென்றபோது ஒரு சம்பவம் நடந்தது.

துரோகிகளையும் எதிரிகளையும் வதம் செய்யும் ப்ரத்யங்கரா தேவியிடம் மனமுருகி வேண்டிக்கொண்டால், நினைத்தது நடக்கும் என்பது நம்பிக்கை. கோயிலில் சில நிமிடங்கள் அமர்ந்து மனமுருகி ப்ரத்யங்கரா தேவியிடம் வேண்டிக்கொண்ட சசிகலா கிளம்பும் தறுவாயில் தொண்டர் ஒருவர் வந்தார். "அம்மா, துரோகிங்களை நீங்க வதம் செய்யணும்மா' என்று உணர்ச்சிப் பெருக்கில் பொங்கினார் அந்தத் தொண்டர். வெறித்துப் பார்த்த சசிகலா, 'நிச்சயமா வதம் செய்வேன்ப்பா' என்று கூறினார்.

இதைத் தொடர்ந்து வாணியம்பாடி அருகே தொண்டர்களிடையே பேசிய சசிகலா, "தீவிர அரசியல் ஈடுபடுவேன். அடக்குமுறைக்கு என்றுமே அடிபணிய மாட்டேன். அ.தி.மு.கவைக் கைப்பற்றுவீர்களா? என்று சிலர் கேட்கிறார்கள். மிக விரைவில் மக்களை நேரில் சந்திப்பேன். ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக ஒற்றுமையுடன் இருந்து, வரும் தேர்தலில் பொது எதிரியை வீழ்த்த வேண்டும்" என்றார்.

இப்படியொரு பெரிய கூட்டத்தைக் கூட்டி, மாஸ் காட்டினாலும், சசிகலாவை நம்பி அவர் பக்கம் செல்ல அ.தி.மு.க நிர்வாகிகள் பலரும் தயங்குகிறார்கள். இது குறித்து நம்மிடம் பேசிய தென்மாவட்ட அ.தி.மு.க எம்.எல்.ஏ ஒருவர், "சசிகலாவை நாங்கள் இப்போது ஆதரித்து விடலாம். அவர் கையில் அதிகாரம் சென்றுவிடும்.

ஆனால், நாளைக்கே அவருடைய உறவுகள் அவரைச் சுற்றி அகழி அமைத்து விடுவார்கள். மீண்டும் உறவுகள் மூலமே நாங்கள் சசிகலா வைக் காண முடியும். ஆனால், எடப்பா டியை ஒரு சாதாரண கட்சி நிர்வாகியோ அல்லது எம்.எல்.ஏவோகூட எளிதாக அணுக முடிகிறது. தொண்டர்களின் நம்பிக்கையைப் பெற்றால் மட்டுமே சசிகலா பக்கம் நிர்வாகிகள் வருவார்கள்" என்றார்.

## சசிகலாவின் புது ஆயுதம்!

அந்த எம்.எல்.ஏ. சொல்வது உண்மை என்பது போலத்தான் பெங்களூரில் சசிகலா தங்கியிருந்தபோது சில காட்சிகள் அரங்கேறின. ரிசார்ட்டில் டாக்டர் வெங்கடேஷூக்கும் தினகரனுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதாகச் சொல்கிறார்கள். இந்தக் கோபத்தில் தான், தான் புறப்படும்போது தினகரனை அழைத்து, 'நீ தனியாக வா. என் காரில் வெங்கடேஷ் மட்டும் வரட்டும்' என்று சசிகலா சொல்லிவிட்டாராம்.

அதேபோல இளவரசி, விவேக் இருவரையும் அதிகாலை 5 மணிக்கே மற்றொரு காரில் சென்னைக்குக் கிளம்பச் சொல்லிவிட்டார் சசிகலா. சசிகலா உறவுகளெல்லாம் பெங்களூரில் முகாமிட்ட நேரத்தில், திவாகரன் மட்டும் மன்னார் குடியிலேயே இருந்திருக்கிறார்.

திவாகரன் மகன் ஜெய் ஆனந்த் சசிகலாவைக் காண பெங்களூர் சென்றபோது அவரிடமும் முகம் கொடுத்துப் பேசவில்லையாம். "சசிகலா சென்னை திரும்பிய பிறகு குடும்ப உறவுகளைச் சரிக்கட்ட அவர் தனியாக நேரம் ஒதுக்க வேண்டும்" என்கிறார்கள் விபரமறிந்தவர்கள்.

பெப்ரவரி 14, 2017இல் சிறைக்குச் செல்வதற்கு முன்பாக ஜெயலலிதா சமாதியில் ஆவேசமாக ஒரு சபதத்தை எடுத்தார் சசிகலா. இப்போது, சிறையிலிருந்து வெளியே வந்தவுடன் ப்ரத்யங்கரா தேவி முன்னிலையில் மற்றொரு சபதமெடுத்திருக்கிறார்.

சசிகலா, தனது எதிரிகளையும் துரோகிகளையும் வதம் செய்வாரா என்பது விரைவிலேயே தெரிந்து விடும்!

**ஜூனியர் விகடன்**

# கடல் புறா

## நீர்க்குடங்கள் நான்கு

காலத்தின் பதிவு 57

மரக்கலங்களைப்போல் உலோகங்களால் செய்யப்பட்ட தவலைகளில் குடிநீர் எடுத்துச் செல்லப்படுகிறது. ஆனால் அவையனைத்தும் இரண்டாம் பட்சம். ஊன் தெரியுமா? என்று கனவில் பேசுபவன் போல் பேசிய அமீர் கனவில் கேள்வி கேட்பவன் போலவே கேட்டான்.

அவன் மனம் கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கவே யாரிடமிருந்தும் பதில் வராது போனாலும் பதில் வந்ததாகப் பாவித்துக் கொண்டு அந்தப் பதிலுக்குப் பதில் சொல்லும் முறையில் மேற்கொண்டு விபரிக்கவும் தொடங்கி சொல்கிறேன் கேளுங்கள். யவனர் மரக்கலங்களிலும் குடங்கள் செம்பு அல்லது பித்தளையினால் செய்யப்பட்டவை. உலோகத்தில் வைக்கப்படும் நீர் காலக்கிரமத்தில் பாதிக்கப்படுகிறது. உலோகத்தின் அடியில் பலப்பல விதமான வண்டல்கள் சீக்கிரம் தேங்குகின்றன.

ஆகவே அந்த மரக்கலங்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஏதாவது ஒரு துறைமுகத்துக்கு நீர் சேகரிப்பதற்கே செல்ல அவசியம் ஏற்படுகிறது. அரபு நாட்டு மரக்கலங்களில் நீர்க்குடங்கள் மரத்தால் செய்யப்பட்டவையாகையால் உலோகத் தவலைகளை விட அவை சிறந்தவை. ஆனால் மரத்தில் நீரின் சம்பந்தத்தால் சீக்கிரம் பாசி பிடிக்கிறது. அதிக நாள் பாசியிருந்தால் குடிநீரில் ஒருவித வேகம் வருகிறது.

ஆகவே மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது அரபு நாட்டுக் கப்பல்கள் ஏதாவது ஒரு துறை முகத்தில் குடிநீர் சேகரிக்கத் தங்கும். ஆனால் இந்த மண்குடங்களை உடைய சீன மரக்கலங்களுக்கு அத்தகைய கஷ்டம் ஏதுமில்லை. அவற்றில் சேகரிக்கப்படும் குடிநீர் ஒரு வருசமானாலும் கெடாமலிருக்கும். குடிநீருக்காக எந்தச் சீனக் கப்பலும் துறைமுகங்களை நாடுவதில்லை. ஒரே சமயத்தில் குறைந்த பட்சம் ஆறு மாதங்களுக்கு வேண்டிய குடிநீரைச் சீனக் கப்பல்களில் பார்க்கலாம். நானும் என் குருநாதரும் சீன அரசினர் கப்பல்களுடன் போர் செய்த காலங்களில் நீர் சேகரிப்பதற்கு எந்தத் துறைமுகத்தையும் நாடியது கிடையாது. தென் சீனாவில் எங்கள் துறைமுகத்தில் இந்தக் குடங்களில் பிடிக்கும் நீரே தேவைக்குப் போதுமானது! இப்பொழுது கூட குருநாதரின் மரக்கலம் ஒவ்வொன்றிலும் இம் மாதிரிக் குடங்கள் ஐம்பதுக்கு மேல் இருக்கும். ஆகையால் தான் எனக்குத் துணிவு ஏற்பட்டது. குருநாதரைக் கேட்டேன் மகிழ்ச்சியடைந்தேன் என்ற அவன் சொற்களில் உவகை பெரிதும் துள்ளி நின்றது.

அவன் வார்த்தைகளில் தொனித்த ஆனந்தம் சிவந்த வர்ணத்தின்



சாண்டில்யன்

மீது வெள்ளைக்கோடுகளில் பல்லை இளித்த பயங்கர உருவங்கள் தீட்டப்பட்டிருந்ததால் பிசாசுகளைப் போலவே காட்சியளித்த அந்த நீர்க்குடங்களைப்பற்றிய விபரங்களைச் சொன்ன போது அவன் குரலில் எழுந்த உணர்ச்சி வேகம் இரண்டையும் அநபாயன் கவனிக்கவே செய்தானென்றாலும் அமீர் சொல்வதைச் சொல்லி முடிக்கட்டுமென்று பொறுமையோடிருந்தான்.

அதிக பொறுமையில்லாத கருணாகரபல்லவன் மட்டும் அமீரின் கனவில் குறுக்கிட்டு அமீர் உங்களுக்கு குருநாதரை கண்டதும் ஆனந்தம், நீர்க்குடங்களை நினைத்ததும் ஆனந்தம். இன்னும் எதெதில் ஆனந்தம் இருக்கிறது? என்று கோபத்தால் கடுமை பெரிதும் கலந்து நின்ற சொற்களை உதிர்த்தான்.

நீர்க்குடங்களின் மீது நாட்டிய கண்களை நாட்டியபடி இளைய பல்லவனைத் திரும்பிப் பாராமலே எனது உயிர்த் தோழர் தமிழகத்தின் பிற்காலப் பேரரசர் அநபாயரையும் அவரைச் சேர்ந்தவைகளையும் தப்ப வைப்பதிலிருக்கிறது. மூன்றுக்கும் பெரும் சம்பந்தம் இருக்கிறது என்றான் அமீர்.

அவன் சொன்ன பொருள் திட்ட வட்டமாக விளங்கவில்லையாதலால் அதற்கு விளக்கம் கேட்க இடையே பாய்ந்தது ஒரு குரல். எந்த மூன்றுக்கும் சம்பந்தம்? என்று இயற்கையாக் கடுமையில்லாத குரலில் சற்றே கடுமையை வரவழைத்துக் கொண்டு காஞ்சனாதேவி கேள்வியொன்றைத் தொடுத்தாள்.

அமீர் மெள்ளத் தலையைத் திருப்பி காஞ்சனா தேவியின் கண்களோடு தன் கண்களை ஒரு விநாடி சந்திக்கவிட்டான். பிறகு சொன்னான். குருநாதரைச் சந்தித்தது , சீனநாட்டு நீர்க்குடங்கள் என்னிடமிருந்தது. அநபாயர் இந்த ஏழையின் உதவியை நாடியது. இந்த மூன்றிலும் எனக்கு ஆனந்தம். மூன்றுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

என்ன தொடர்பு? என்று மீண்டும் கேட்டாள் காஞ்சனாதேவி.

அமீர் காஞ்சனாதேவியையும் பார்த்து நீர்க்குடங்களையும் பார்த்தான். பார்த்தது மட்டுமன்றி அந்தக் குடங்களை நோக்கி கையை நீட்டி இளவரசி இந்தக் குடங்களை நான் ஏன் வாங்கினேன் தெரியுமா? என்றொரு கேள்வியையும் கேட்டான்.

எனக்கெப்படித் தெரியும்? என்றாள் காஞ்சனாதேவி அவன் கேள்வியில் அதிகச் சிரத்தை காட்டாமலே.

ஆனால் நீர்க்குடங்களை மீண்டும் நோக்கிய அமீரின் கண்களிலோ சிரத்தையும் கனிவும் மிதமிஞ்சிப் பரந்து நின்றன.

இந்த நீர்க்குடங்களை நான் வாங்கிய போது இவை உங்களைத் தப்ப வைக்கும் என நான் கனவு கூடக் காணவில்லை. இந்த நில வாழ்க்கையில் சலித்ததால் நீர் வாழ்க்கையை மேற்கொள்ள இவற்றை வாங்கினேன்.

கடலெனும் காந்தம் என்னை இழுத்ததால் என் வாணிபத்தை ஏறக்கட்டி விட்டு ஒரு மரக்கலம் வாங்கித் திரை கடலோட திட்டமிட்டேன். அந்தத் திட்டத்தின் முதல் படியாக இவற்றை வாங்கினேன். குருநாதரிடம் மரக்கலப்பயிற்சியை அடைந்த பிறகு வாணிபம் செய்வதாயிருந்தால் தரை வாணிபம் வேண்டாம். அலைகடலில் ஓடி மரக்கலத்தின் மூலம் வாணிபம் புரிவோம் என்ற ஆசை ஏற்பட்டது. அந்த ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ள பாலூர் வந்தேன். வாணிபத்தைப் பெருக்கினேன்.

சென்ற வருடமே வாணிபத்தை ஏறக்கட்டி மரக்கலம் வாங்கி நீரின் மேல் நடந்திருப்பேன். ஆனால் கடலைப்போலவே மற்றொரு காந்தம் என்னைப்பற்றிக் கொண்டது இந்தப் பாலூரிலே என்று சொலலிக் கொண்டே போன அமீர் சற்று நின்று அநபாயரைத் திரும்பி நோக்கினான். அது இந்தக் காந்தம் தான். இவர் நட்பில் சிக்குண்டேன். பாலூரில் தமிழருக்குத் தொண்டு புரியத் தீரமும் சாகசமும் நிறைந்த செயல்களில் இவர் ஈடுபட்டதைக் கண்டு முதலில் வியப்பின் வசப்பட்டேன்.

பிறகு இவர் அடிமையாகவே ஆகிவிட்டேன். இவர் மூலம் தான் இப்பொழுது இந்த அடிமைத் தளையும் போகின்றது. ஆனால் அந்த அடிமைத்தளை எத்தனை இன்பமானது! என்று சொல்லிப் பெருமூச்சும் விட்ட அமீர் திடீரெனத் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு அந்த நட்பு அவர் விடுதலைக்கு மட்டுமல்ல அவர் நண்பர்கள் விடுதலைக்கும் மார்க்கம் கேட்டது. சமயத்தில் குருநாதரும் வந்தார். என்னிடம் சந்தர்ப்பவசத்தால் நீர்க்குடங்கள் இருந்தன. விதி எப்படித் தான் காரியங்களை நடத்திக் கொள்கிறது பாருங்கள்.

குருநாதா இல்லையேல் இந்த நீர்க்குடங்களால் எந்தப் பயனும் இல்லை. ஏனென்றால் இத்தகைய நீர்க்குடங்கள் சீனக் கப்பல்களுக்காக ஏற்பட்டவை. வேறு கப்பல்களில் இவற்றை ஏற்றச் சொன்னால் நமது திட்டம் அம்பலமாகி விடும். ஆகவே குருநாதரைக் கண்டதும் மகிழ்ச்சியடைந்தேன்.

அவர் மரக்கலத்துக்கு நீர் சேகரிக்கும் பாசனையில் அவர் மரக்கலத்தின் ஐந்தாறு குடங்களை மாற்றி விடுவது, அல்லது கூடச் சேர்த்துவிடுவது, சில குடங்களில் நீர், சில குடங்களில் மனிதர்! யார் கண்டுபிடிக்க முடியும், குருநாதர் வந்ததால் குடங்களுக்குப் பயன் பிறந்தது. குடங்களுக்கு பயன் பிறந்ததால் அநபாயருக்கு நான் உதவ முடிந்தது. மூன்றுக்கும் சம்பந்தம் கேட்டீர்களே? புரிகிறதா தேவி?" என்று கேட்கவும் செய்தான்.

காஞ்சனாதேவிக்கு மட்டுமென்ன மற்றவர்களுக்கும் திட்டம் தெளிவாகத்தான் புரிந்திருந்தது. எதிரே பயங்கரமாக உயரமாக நின்ற நீர்க்குடங்களைக் கவனித்த அநபாயன், "இந்த நீர்க்குடம் ஒவ்வொன்றிலும் மனிதர் எழுந்து நின்றாலும் தலை வெளியே தெரியாது. விந்தையான திட்டம்! என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

(தொடரும்.)

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : கல்யாணப் பரிசு
இயற்றியவர் : பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
இசை : ஏ.எம்.ராஜா
பாடியவர்கள் : ஏ.எம்.ராஜா, பி.சுசீலா



வாடிக்கை மறந்ததும் ஏனோ என்னை
வாட்டிடும் ஆசையில் தானோ பல
கோடி மலர் அழகை மூடி வைத்து மனதை
கொள்ளை அடிப்பதும் ஏனோ (வாடிக்கை)

வாடிக்கை மறந்திடுவேனோ என்னை
வாட்டிடும் கேள்விகள் ஏனோ இளம்
மங்கை எந்தன் மனதில் பொங்கி வரும்
நினைவில் மாற்றம் சொல்வதும் ஏனோ
(வாடிக்கை)

அ..ஆ...ஆ..ஆ..
அ..ஆ...ஆ..ஆ..

அந்தி நேரத்தின் ஆனந்த காற்றும்
அன்பு மணக்கும் தேன் சுவை பாட்டும்
அமுத விருந்தும் மறந்து போனால்
உலகம் வாழ்வது ஏது பல
உயிர்கள் மகிழ்வதும் ஏது நெஞ்சில்

இனித்திடும் நினைவை
இன்பம் எனும் உறவை
தனித்து பெற முடியாது
ஓ..ஓ..ஓ..

அந்தி நேரம் போனதால்
ஆசை மறந்தே போகுமா
அன்புக் கரங்கள் சேரும்போது
வம்பு வார்த்தைகள் ஏனோ
இன்ப வேகம் தானோ (வாடிக்கை)

அ..ஆ..ஆ..ஆ....ஆ....
அ..ஆ..ஆ..ஆ....ஆ....

காந்தமோ இது கண்ணொளி தானோ
காதல் நதியில் நீந்திடும் மீனோ
கருத்தை அறிந்தும் நாணம் ஏனோ
பொறுமை இழந்திடலாமோ
பெரும் புரட்சியில் இறங்கிடலாமோ

நான் கருங்கல் சிலையோ
காதல் எனக்கில்லையோ
வரம்பு மீறுதல் முறையோ

சைக்கிளும் ஓட மண்மேலே
இரு சக்கரம் சுழல்வது போலே
அணை தாண்டி வரும் சுகமும்
தூண்டி விடும் முகமும்
சேர்ந்ததே உறவாலே

அ..ஆ..ஆ..ஆ....ஆ....
அ..ஆ..ஆ..ஆ....ஆ....

# என்னில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட நீ!

விடை கொடுத்தலே ஆகச் சிறந்த கதை சொல்லிக் கொண்டிருந்த காதலின் கனத்தை அப்படியே கடத்துவது இருவருக்குள்ளான நெருக்கமோ நினைவுகளோ அல்ல, விடை கொடுத்தலும் அதன் நிமித்தமும்தான்! அப்படியொரு தருணம் நமக்குள் நிகழ்ந்து சிலகாலமாகிவிட்டன.

பிரியப்பட்டவர்களுக்கு இறுதி விடை கொடுத்து விட்டு எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடிக்கும் எடை அதிகம். உள்ளிருந்து உடைந்து சிந்தும் உயிரின் ஒரு பகுதி அங்கேயே தங்கி விடும். நெடுஞ்சாலையில் சிக்கி உருக்குலைந்துபோன குருவியின் கடைசி மிச்சம் வண்டித் தடங்களாகப் பதிந்திருப்பது போல! நானும் அப்படித்தான். நம் இறுதிச் சந்திப்பு நிகழ்ந்த இடத்தில் இன்னமும் மிச்சமிருக்கிறேன்.

நாற்சந்தியில் சுற்றிலும் வேடிக்கை பார்க்கும் குழந்தையின் கன்னக்கதுப்பில், குறுகுறுப்பாய் காலில் ஊறி நெகிழும் பூனையின் விளையாட்டில், ஏற்பாடில் காரணமின்றி சூழும் வெறுமையில், ரசித்துச் சுவைக்க ஆளின்றி தனித்து தட்டில் விடப்பட்டிருக்கும் பண்டத்தில் என எதிர்ப்படும் எல்லாமுமே கண்ணாடியாய்ப் பிரதிபலிக்கின்றன நின்னை! ஆனாலும் பகல் நேர்ந்துள்ள பணிகளின் வழியே அப்பிம்பங்கள் சிலவற்றிலிருந்து விடுவித்துக் கொள்கிறேன். பிழைத்திருத்தல் ஏனோ பலிக்கிறது பகல் பொழுதுகளில்! இரவுகள் மெலிதாய் கிசுகிசுக்கும் வாடைகளுக்கானவை. இரவுகள் பரபரத்து அடங்கும் இச்சைகளுக்கானவை. இரவுகள் களைத்துச் சயனிக்கும் உடல்களுக்கானவை. இரவுகள் மனத்திரையில் எழும் கோர்வையற்ற காட்சிகளுக்கானவை. இரவுகள் ஒலிவழி உரையாடல் நிகழ்த்தும் ஏணைய உயிர்களுக்கானவை. இரவுகள் இசைக்கானவை. இரவுகள் நமக்கானவை. ஆனால் நிச்சயம் எனக்கானதல்ல! இரவின் ரேகை முழுக்க உன் தடங்கள்.

இரவின் இசை நிகழ்த்தும் சம்பாஷணையில் தோற்று வதைபட்டு கரையேறுவதே ஒவ்வொரு முறையும் பெருஞ் சாதனையாக இருக்கிறது.

**பிரிவென்பது அவ்வப்போது நிகழும் குறுங்கால மரணம்.**

பிடித்தமான பக்கங்களை உணவாக்கிக்கொள்ளும் ஒட்டுண்ணி. மணல் வீட்டை கலைத்துப்போடும் நுரைச் சிதறல்கள். இங்கே பிரிவை தங்கள் இருப்பால் நிரப்ப வருபவர்களுக்குக் கடலில் வீழும் மழைத்துளியின் விதியே வாய்த்திருக்கிறது. என்ன செய்வது? காலம் மின்னல் வேகத்தில் யுகங்களாகக் கடந்தாலும் அதைக் காட்டும் முட்கள் தேங்கிப் போயிருப்பது ஒரு வட்டத்திற்குள்தானே! போலவே நானும் கடந்த காலத்தில் தேங்கிப் போய் விட்ட படிமமாக.

இனி முடிவென ஒன்று நிகழ்ந்தாலும் அது ஊனுக்கானதாய் மட்டுமே இருக்குமெனத் தோன்றுகிறது. பேதங்களுக்கு அப்பாற்பட்ட காதல் சூழ்வெளியில் என்றாவது ஒரு நாள் சந்திப்போம் என்பதோடு முடியட்டும் எல்லாம்!

**பிரிவை நிரப்ப வருபவர்கள்கடலில் வீழும் மழைத் துளிகளல்ல.**



பேரழகான முடிவுரை எல்லாக் கதைகளுக்கும் வாய்ப்பதில்லை. நம் கதையின் முடிவுரை எதுவென்பது இனி நிகழ்வனவற்றைச் சார்ந்தே இருக்கிறது. இறுதி விடை கொடுத்தல் என இங்கே எதுவுமில்லை.

நினைவுகளில் நினைத்த போதெல்லாம் உருக்கொள்பவர்களுக்கு ஏது விடைகொடுத்தல் எல்லாம்? பட்டாம்பூச்சிகள் யாராலும் எப்போதும் சொந்தம் கொண்டாடப்படுவதில்லை.

ஆனால், விரலிடுக்கில் அவை விட்டுச்செல்லும் வண்ணங்கள் நமக்குக் கிடைக்கும் அன்பின் பரிசு. நம் சந்திப்பு நிகழ்ந்த இடத்தில் நீ விட்டுச்சென்ற உன்னின் மிச்சமும் அன்பின் பரிசுதான். அதை பத்திரமாகச் சேகரித்து வைத்திருக்கிறேன்.

இரவுகள் கொண்டாட்டத்திற்கானவை. இரவுகள் பூச்சுகளற்ற நிர்வாணத்திற்கானவை. இரவுகள் குவிந்து கிடக்கும் கோளங்களின் பிரமாண்டத்திற்கானவை. இரவுகள் நம் அற்பங்களைச் சுட்டுபவை. இரவுகள் இசைக்கானவை. இரவுகள் வெள்ளிக்குப் பின் மேகங்கள் பூசிக்கொள்ளும் வண்ணங்களுக்கானவை. இரவுகள் புது விடியலுக்கானவை.


எனவே இரவுகள் உனக்கானவையும் கூட! பிரிவென்பது மரணமில்லை.

ரயில் பிரயாணிகள்! சிலவற்றைக் கொடுத்தும் சிலவற்றை எடுத்தும் செல்வார்கள்.

கூண்டிலிருந்து விடுபடும் பறவை திரிந்து களிக்க பெரு வானமிருக்கிறது. கூண்டைச் சுமத்தல் இனியும் நியாயமில்லை.

மீண்டும் ஓர் இளவேனிற் காலம் வரும் காய்ந்து கிடக்கும் உன் இலைகளுக்கு ஒளிச் சேர்க்கையூட்ட! அதுவரை காத்திரு! காத்திருத்தல்தானே காதலின் ஊற்று! வாழ்ந்திரு. ஊற்றில் மீண்டும் மூழ்கி எழு! இக்கடிதம் பழுப்பேறிப் பட்டுப் போன விருட்சத்திற்கு மட்டுமல்ல, காதலால் உள்ளும் புறமும் மாயும் அத்தனை உயிர்களுக்குமானது. காதலின் வாழ்த்துகள்!

## கதாநாயகனாக அர்ஜூன் தாஸ்



கைதி, அந்தகாரம் மற்றும் மாஸ்டர் படங்களில் நடித்த அர்ஜூன் தாஸ் அடுத்ததாக கேரள இயக்குனர் படத்தில் கதாநாயகனாக நடிக்க இருக்கிறார். லோகேஷ் கனகராஜ் இயக்கிய கைதி திரைப்படத்தில் நடிகர் அர்ஜூன் தாஸ் தனது அற்புத மான நடிப்பால் அனைவரையும் கவர்ந்தார். கைதியின் வெற்றியைத் தொடர்ந்து, அறிமுக இயக்குநர் விக்னராஜன் இயக்கத்தில் வெளியான அந்தகாரம் படமும் அர்ஜூன் தாஸுக்கு நல்ல பெயரை ஏற்படுத்திக் கொடுத்தது.சமீபத்தில், லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் வெளியான மாஸ்டர் படத்திலும் அர்ஜூன் தாஸ் ஒரு முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்தார்.கைதி, அந்தகாரம் மற்றும் மாஸ்டர் என வரிசையாக நல்ல படங்களில் நடித்திருந்த அர்ஜூன் தாஸ் தற்போது இயக்குநர் வசந்தபாலன் இயக் கும் புதிய படத்தில் கதாநாயகனாக நடிக்க இருக்கிறார்.அர்பன் பாய்ஸ் ஸ்டூடியோஸ் என்ற பெயரில் புதிய தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங் கியுள்ள வசந்தபாலன் மற்றும் அவரது நண்பர்கள் இப்படத்தை தயாரி க்கின்றனர்.

## விஜய் டிவியில் வெளியாகும் ஏலே

ஏலே திரைப்படம் தியேட்டரில் வெளியாக மூன்று நாட்களே இருந்த நிலையில் சில ஆச்சரியகரமான புது விதிகளாலும் தவிர்க்க முடியாத சில காரணங்களாலும் படத்தை திரையரங்கிற்கு கொண்டு வர முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. ஆகையால் தியேட்டர்களை தவிர்த்து எங்கள் படத்தினை உலகம் முழுதும் உள்ள ரசிகர்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது. ஸ்டார் விஜய் தொலைக்காட்சியுடன் இணைந்து 2021 பெப்ரவரி 28 அன்று ஞாயிறு பகல் 3 மணிக்கு, உலகத்தொலைக்காட்சிகளில் முதல் முறையாக, நேரடியாக இத்திரைப்படத்தினை வெளியிடுகிறோம் என படக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.


Full Insurance ஐ பெற்றிடுங்கள்,
தவணைப்பணத்தின் ஒரு பகுதியை
மாத்திரமே செலுத்துங்கள்.

'MotorGuard Pay As You Claim' திட்டத்தின் மூலம் Full Insurance காப்புறுதி தொகைக்கு பதிலாக அத்தொகையின் 40%, 50% அல்லது 60% இனை செலுத்தி முழுவருடத்திற்குமான காப்புறுதியினை பெற்றிடுங்கள்.
எதிர்பாராத விபத்து ஏற்படின் மாத்திரமே அதற்கான நட்டஈட்டை பெறும்போது அக் காப்புறுதித்தொகையின் மிகுதியை செலுத்தி உரிய நட்டஈட்டைப் பெற்றிடுங்கள்.

விரையுங்கள்!
'Pay As You Claim' இனை
இன்றே பெற்றிடுங்கள்!



HNB General Insurance Limited (PB 5167)
2ம் மாடி, ஐஸ்லண்ட் பிஸ்னஸ் சென்டர்,
இல. 30, ஸ்ரீ உத்தரானந்த மாவத்தை, கொழும்பு 03.
தொலைபேசி: 0114 676 700 | மின்னஞ்சல்:info@hnbgeneral.com
இணையம்: www.hnbgeneral.com
அழையுங்கள் : 0114 883 883
விதிகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடங்கும்

MotorGuard Pay As You Claim | HNB General Insurance

(C-1209)


## விஷ்ணு விஷாலுக்கு ஜோடியாக வருகிறார் ஐஸ்வர்யா ராஜேஷ்



நடிகர் விஷ்ணு விஷால் அடுத்த தாக நடிக்கவுள்ள படத்தில் அவரு க்கு ஜோடியாக ஐஸ்வர்யா ராஜேஷ் நடிக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டு ள்ளது. தமிழில் வெண்ணிலா கபடி குழு, பலே பாண்டியா, குள்ள நரிக்கூட்டம், நீர்ப்பறவை, முண்டா சுப்பட்டி, வேலைன்னு வந்துட்டா வெள்ளைக்காரன், ராட்சசன் உள் ளிட்ட படங்களில் நடித்தவர் விஷ்ணு விஷால். இவர் நடித்துள்ள காடன், ஜகஜால கில்லாடி ஆகிய படங்க ளின் ரிலீசுக்கு தயாராகி வருகின்றன. தற்போது எப்.ஐ.ஆர். எனும் படத்தை தயாரிப்பதோடு மட்டுமல்லாமல் அதில் ஹீரோவாகவும் நடித்துள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்து இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. இதையடுத்து மோகன் தாஸ் படத்தில் நடிக்க உள்ளார் விஷ்ணு விஷால். களவு படத்தை இயக்கிய முரளி கார்த்திக் இப்படத்தை இயக்க உள்ளார். உண்மைக்கதையை மையமாக வைத்து உருவாக உள்ள இப்படத்தை விஷ்ணு விஷால் தனது சொந்த தயாரிப்பு நிறுவனம் மூலம் தயாரிக்கிறார். இந்நிலையில், நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ், இப்படத்தில் விஷ்ணு விஷாலுக்கு ஜோடியாக நடிக்க உள்ளதாக படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இதர நடிகர், நடிகைகள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் தேர்வு மும்முரமாக நடைபெற்று வருகிறது.

## புலனாய்வு பத்திரிகையாளர்களாக தனுஷ், மாளவிகா மோகனன்



ஜகமே தந்திரம், கர்ணன் ஆகிய படங்களை முடித்துவிட்ட தனுஷ், தற்போது கார்த்திக் நரேன் இயக் கத்தில் உருவாகிவரும் தனது 43ஆவது படத்தில் நடித்து வரு கிறார். இந்த படத்தில் கதாநா யகி யாக மாளவிகா மோகனன் நடிக்கி றார். சமீபத்தில் இந்தப் படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு நடைபெற்று முடிந்துள்ளது. படப்பிடிப்பு தளத்திலிருந்து தனுஷும் மாளவிகா மோகனனும் இணைந்து எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் சோஷியல் மீடியாவில் வைரலாகி வருகின்றன. இந்தப் படத்தில் தனுஷ், மாளவிகா மோகனன் இருவருமே புலனாய்வுப் பத்திரிகை நிருபர்களாக நடிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. பிரபல பத்திரிகையாளர் ஒருவரும் அவரது மனைவியும் கார் விபத்தில் கொல்லப்பட, அவர்களது மகன் தனது தந்தையின் மரணத்தில் உள்ள மர்மத்தை ஒரு பத்திரிகையாளராக கண்டுபிடிப்பதுதான் இந்தப் படத்தின் கதை என்று சொல்லப்படுகிறது.


## சித்தி-2 இலிருந்து விலகிய ராதிகா



நடிகை ராதிகா நடிப்பு, தயாரிப்பு என இரு துறைகளிலும் சாதனை படைத்தார்.சின்னத்திரையில் நடிப்பு மட்டுமன்றி தங்கவேட்டை, கோடீஸ்வரி போன்ற ரியாலிட்டி ஷோக்களையும் நடத்தினர். இவர் தயாரித்து நடித்த சித்தி தொடர் சின்னத்திரை உலகில் சாதனை படைத்தது. தற்போது சித்தி 2வில் நடித்து வருகிறார்.ராதிகா சினிமாவில், சின்னத்திரையில் இருந்தாலும் அவ்வப்போது அரசியலிலும் தலைகாட்டுவார். அதோடு வருகிற சட்ட சபை தேர்தலில் போட்டியிடவும் இருக்கிறார்.தீவிர அரசியலில் குதிக்க இருப்பதால் ராதிகா, சின்னத்திரையில் இருந்து படிப்படியாக விலகை போவதாக அறிவித்திருந்தார். தற்போது அதனை தனது டுவிட்டரில் உறுதிப்படுத்தியிருக்கிறார். சித்தி சீரியலில் நடிக்கும் கலைஞர்களுடன் எடுத்துக் கொண்ட குரூப் போட்டோக்களை வெளியிட்டு சித்தியில் இரு ந்து விலகுவதை அறிவித்திருக்கிறார். இப்போதைக்கு மகிழ்ச்சியும், வருத்தமும் கலந்த மனநிலையில் சித்தி 2இல் இருந்து விலகுகிறேன். ஆனாலும் எனது கடின உழைப்பு இருந்து கொண்டே இருக்கும். அனை த்து தொழில்நுட்ப கலைஞர்களிடமிருந்தும், சக நடிகர், நடிகைக ளிடமிருந்தும் விலகிச் செல்வது வருத்தமாக இருக்கிறது. இந்த தொடர் கவின், வெண்பா மற்றும் யாழினி ஆகியோருக்கு நல்ல அதிர்ஷ் டத்தைத் தர வேண்டும்.

எனது ரசிகர்கள் மற்றும் நலன்விரும்பிகள் தந்த நிபந்தனையற்ற அன்பு மற்றும் விசுவாசத்திற்கு நன்றி. தொடர்ந்து சித்தியை நன்றாக பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறியிருக்கிறார்.

# அசத்தும் தமிழன் வோஷிங்டன் சுந்தர்



**2015,** நவம்பர் மாதம்... சென்னையைச் சேர்ந்த 16 வயது சிறுவன் வோஷிங்டன் சுந்தரின் பெயர் இந்திய அண்டர் 19 அணியில் அறிவிக்கப்படுகிறது. பெப்ரவரி நடைபெற இருக்கும் ஜூனியர் உலகக்கோப்பைக்கு முன்னதாக, ஒரு முன்னோட்டமாக இலங்கையில் நடைபெற இருக்கும் ஒருநாள் போட்டி தொடர் அது. சிறுவன் வோஷிங்டன் சுந்தருக்கு முதல் வெளிநாட்டுத்தொடர். குடும்பமே மகிழ்ச்சியில் கொண்டாடுகிறது. சந்தோஷத்தில் திளைக்கிறான் சிறுவன் வோஷிங்டன்.

டிசெம்பரில் தொடங்க இருக்கும் இத்தொடருக்காக தீவிரமாக தயாராகிறான். ஆனால், டிசெம்பர் முதலாம் திகதியன்று ஆரம்பித்த சென்னை வெள்ளம், ஒட்டுமொத்த சென்னையையும் முடக்க, சிறுவனின் முதல் ஓவர்சீஸ் டூர் கனவு கலைகிறது. சென்னை விமானநிலையம் மூடப்பட்டதில் வோஷிங்டனால் இந்திய அணியினருடன் இலங்கைக்குச் செல்லமுடியவில்லை. கிட்டத்தட்ட பாதித்தொடர் முடிந்தபிறகுதான் இலங்கை போய்ச் சேர்ந்தார் வோஷிங்டன்.

"என் மகன் நல்ல விளையாட்டு வீரன் என்பதைவிட நல்ல மனிதன். அவனுடைய முதல் ஓவர்சீஸ் போட்டிக்கு அவனால் செல்லமுடியவில்லை. சென்னை வெள்ளத்தில் சிக்கிக் கொண்டோம். அந்த நேரத்திலும் களத்தில் இறங்கி, அந்தப் பகுதியிலிருந்து மக்களுக்கு தன்னிடமிருந்த காசைக் கொண்டு உணவு வாங்கிக்கொடுத்து உதவிகள் செய்தவன் என் மகன்" என விகடன் வோஷிங்டனுக்கு வழங்கிய நம்பிக்கை விருதுவிழாவில் சொல்லி பெருமைப்பட்டார் அவரது தந்தை சுந்தர். தான் படிக்க, விளையாட பண உதவிகள் செய்த இராணுவ வீரர் வோஷிங்டனின் பெயரையே மகனுக்கு வைத்து பெருமைப்படுத்தியிருக்கிறார் சுந்தர்.

தந்தையின் நிறைவேறாத கிரிக்கெட் கனவை எட்டிப்பிடித்த மகன் வோஷிங்டன் சிறுவயதில் இருந்தே இந்திய கிரிக்கெட் வீரனாக வேண்டும் என்றே வளர்க்கப்பட்டு அதனை 18 வயதிலேயே செய்துகாட்டிய சாதனைச் சிறுவன்.

அண்மையில் நடந்து முடிந்த அவுஸ்திரேலிய தொடரில் பிரிஸ்பேன் டெஸ்டில் முதல் சர்வதேச டெஸ்ட் போட்டியில் விளையாடியவர் எந்தப்பதற்றமும் இன்றி முதல் இன்னிங்ஸில் 85 ஓட்டங்கள் அடித்தார். இந்தியாவின் வெற்றிக்கு முதல் அடித்தளம் போட்ட அரைச்சதம் இதுதான். அதேபோல் நடந்து முடிந்த சென்னை டெஸ்ட்டிலும் கோலி, ரோஹித் என சீனியர் பட்ஸ்மன்கள் எல்லோரும் தடுமாறி, முதல் இன்னிங்ஸில் கடைசிவரை களத்தில் நின்று 85 ஓட்டங்கள் சேர்த்தார் வோஷிங்டன்.

இந்தியாவின் எதிர்காலம் என இப்போது எல்லா நாட்டு கிரிக்கெட் ரசிகர்களும் இந்த 21 வயது ஓல்ரவுண்டரைக் கொண்டாடுகிறார்கள்.

முன்பே சொன்னதுபோல் இது தந்தை கண்ட கனவு. தன்னால் ரஞ்சி அணியில் கூட இடம்பிடிக்கமுடியாமல் போன நிலைமை தன் மகன் வோஷிங்டனுக்கும் வந்துவிடக்கூடாது என 6 வயது முதல் தன்னுடைய பயிற்சிப் பாடசாலையிலேயே கிரிக்கெட் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்துவிட்டார் சுந்தர். கவாஸ்கரும், டிராவிட்டும்தான் டெக்னிக்கலி ஸ்ரோங்கான பட்ஸ்மன்கள் என்பது சுந்தரின் எண்ணம். அதனால் சிறுவயதில் இருந்தே அவர்களின் வீடியோக்களை மகன் வோஷிங்டனுக்குப் போட்டுக்காட்டி பயிற்சி அளித்திருக்கிறார்.

பட்டிங் திறமையை மட்டுமே வைத்திருந்தால் இந்திய அணிக்குள் இடம் கிடைப்பதில் சிரமம் வரலாம் என்பதால் மகனை பௌலராகவும் மாற்ற ஆரம்பித்தார் வோஷிங்டன். "எல்லா நேரமும் உன் மேல வெளிச்சம் இருக்கனும்" என ஒருகட்டத்தில் விக்கெட் கீப்பிங் பயிற்சியும் அளித்துள்ளார். கிரிக்கெட்டின் எல்லா ஏரியாவிலும் வோஷிங்டன் கில்லியாக இருக்க வேண்டும் என்பதுதான் தந்தையின் பெரிய ஆசை.

ஆரம்பத்தில் வேகப்பந்து வீச்சு, ஓஃப் ஸ்பின், லெக் ஸ்பின் என எல்லாவற்றையும் முயற்சி செய்துவிட்டு இறுதியில் ஓஃப் ஸ்பின்னில் செட்டில் ஆனார் வோஷிங்டன். 2014 இல் பெர்ஸ்ட் டிவிஷன் ஆடிய வோஷிங்டனின் பட்டிங், பௌலிங் திறமைகள் எல்லோரையும் வியக்கவைக்க, 15 வயதிலேயே இந்திய அண்டர் 19 அணிக்குள் இடம் கிடைத்தது.

2016 அண்டர் 19 உலகக்கோப்பையிலும் தன்னுடைய திறமைகளை நிரூபிக்க 2017 ஆம் ஆண்டு ஐ.பி.எல். கதவுகள் திறந்தது. புனே அணிக்காக மிகச்சிறப்பான எக்கனொமிக்கல் பௌலராக பட்டைத்தீட்டப்பட்டார் வோஷிங்டன். டோனி- ஸ்மித் கப்டனாக இருந்த அந்த சீசனின் குவாலிஃபையர் போட்டியில் மும்பைக்கு எதிராக 3 விக்கெட்கள் எடுத்து, மான் ஓஃப் த மட்ச் விருது வென்று புனே இறுதிப்போட்டியில் நுழையக்காரணமாக இருந்தவர் வோஷிங்டன்.

விக்கெட்களை வீழ்த்துவதைவிடவும் எக்கனொமிக்கலாகப் பந்துவீசுவதுதான் வோஷிங்டனின் பலம். அதனால்தான் கோலி இவரைப்பெரும்பாலும் பவர்ப்ளே ஓவர்களிலேயே பயன்படுத்துகிறார்.

### இந்தியக் கனவு!

18 வயதிலேயே இந்திய அணிக்கு ஆடும் வாய்ப்பு வோஷிங்டனுக்கு கிடைத்துவிட்டது. அண்டர் 19 ஆடிய அதே இலங்கையில் முதல் சர்வதேசப் போட்டி. இலங்கைக்கு எதிரான இருபது-20 தொடரில் அறிமுகமானார் வோஷிங்டன்.

பிரிஸ்பேன் டெஸ்ட் வோஷிங்டனுக்கு முதல் சர்வதேச டெஸ்ட். வோர்னர், ஸ்மித், கிரீன் என முக்கிய பட்ஸ்மன்களை வீழ்த்தியவர், உலகின் மிகச் சிறந்த பௌலர்களான ஸ்டார்க், கம்மின்ஸ், ஹேசில்வுட், லயானின் பந்துகளை எதிர்கொண்டு மிகவும் இக்கட்டான நேரத்தில் 62 ஓட்டங்கள் குவித்தார்.

முதல் சென்னை டெஸ்ட்டிலும் வோஷிங்டனுக்கு விக்கெட்கள் கிடைத்திருக்கவேண்டியது. பன்ட், ரோஹித் என மாறிமாறி கேட்ச்களை டிராப் செய்தததில் விக்கெட்டே கிடைக்காமல் போனது. ஆனால், பட்டிங்கில் 85 ஓட்டங்கள் குவித்து, தான் யார் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துவிட்டார் வோஷிங்டன். அதுவும் அண்டர்சன் பந்தில் நடந்து வந்து அடித்த சிக்ஸ் எல்லாம் வாவ்... வேற லெவல்!

இன்னும் பல வாவ்களை ஒளித்துவைத்திருக்கிறார் வோஷிங்டன் சுந்தர்... வாவ் முமன்ட்டுகள் தொடர வாழ்த்துகள் வோஷிங்டன்!

# இங்கிலாந்தின் வேகப் புயல்

**செ**ன்னை டெஸ்ட்டின் இறுதி நாள் ஆட்டத்தில் இங்கிலாந்திடம் தோல்வியைத் தவிர்க்கப் போராடிக் கொண்டிருக்கிறது இந்தியா. கோலி மட்டுமே 45 ஓட்டங்களோடு களத்தில் நிற்க மற்ற டொப் ஓடர் பட்ஸ்மன்கள் அத்தனைபேரும் பெவிலியனுக்குப் போய்விட்டனர்.

மதிய உணவு இடை வேளையின் போது 144 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்களை இழந்து நிற்கிறது இந்தியா. இன்னும் இரண்டு செஷன்கள் மீதம் இருக்கும் நிலையில் வெறும் 4 விக்கெட்டுகளை மட்டுமே கையில்வைத்துக்கொண்டு 276 ஓட்டம் சேஸிங்கை எதிர்நோக்கியிருக்கிறது இந்தியா.

இந்தியாவின் இரண்டாவது இன்னிங்ஸில் ஷுப்மான் கில், அஜிங்கியா ரஹானே, ரிஷப் பன்ட் என மூன்று முக்கிய விக்கெட்டுகளையும் தூக்கியவர் ஜேம்ஸ் அண்டர்சன். சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான பிட்ச்சில் மிரட்டிக்கொண்டிருக்கிறார் அண்டர்சன். இதுவரை 7 ஓவர்கள் வீசி 4 மெய்டன் ஓவர்கள் போட்டு, 8 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 3 விக்கெட்களைக் கைப்பற்றியிருக்கிறார் ஜிம்மி.



வேகப் பந்து வீச்சுக்கு சாதகமான இங்கிலாந்து பிட்ச்களில் மட்டுமல்ல, வேகப்பந்து வீச்சுக்கு கொஞ்சமும் ஒத்துழைக்காத இந்திய பிட்ச்களிலும் இந்தியாவின் மிகச்சிறந்த பட்ஸ்மன்களை வீழ்த்தி வருகிறார் இவர். 2006 இல் இந்தியா வந்த இங்கிலாந்து மும்பையில் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விளையாடியது. அப்போது நல்ல போர்மில் விளையாடிக்கொண்டிருந்த சச்சின் டெண்டுல்கரை மும்பை டெஸ்ட்டில் தொடந்து பல டொட் பால்களை சந்திக்கவைத்து கடைசியில் ஒரு ஓட்டத்தில் அவுட் ஆக்கினார் அண்டர்சன். டிரைவ் ஷொட்டுக்குத்தூண்டிய அண்டர்சனின் சிறப்பான பந்து வீச்சுக்கு அன்று விக்கெட்டைப்பறிகொடுத்தார் சச்சின்.

இதேபோல் 2012 இல் இந்தியா வந்த இங்கிலாந்து அணியின் அண்டர்சனிடம் சச்சினோடு சேர்ந்து கோலியும் சிக்கினார். கொல்கத்தாவில் நடந்த டெஸ்ட் போட்டியில் டெண்டுல்கரை மீண்டும் கீப்பரிடம் கட்ச் கொடுக்கவைத்து அவுட் ஆக்கிய அண்டர்சன், கோலியையும் கிட்டத்தட்ட அதே வகையில் அவுட் ஆக்கினார். இந்த முறை கோலிக்கு ஸ்லிப்பில் கட்ச்போனது.

இப்போது 2021 சென்னை டெஸ்ட்டிலும் மிரட்டிக்கொண்டிருக்கிறார். நடந்து முடிந்த ஆட்டத்தில் ஒரே ஓவரில் இந்ததலைமுறை வீரரான ஷுப்மான் கில்லையும் அடுத்து அஜிங்கியா ரஹானேவையும் ஒரே ஓவரில் அவுட் ஆக்கினார். அடுத்த சச்சின், அடுத்த கோலி எனப்புகழப்படும் ஷுப்மான் கில்லை ஒரு அற்புதமான புல்லர் லென்த் பந்துமூலம் போல்டாக்கினார் அண்டர்சன். ரஹானேவும் கிட்டத்தட்ட இதே போன்ற ஒரு டெலிவரியில் அவுட்.

மூன்று தலைமுறைகளாக இந்திய பட்ஸ்மேன்களை மட்டுமல்ல எல்லா நாட்டு பட்ஸ்மேன்களையும் மிரட்டிக் கொண்டிருக்கும் அண்டர்சன் இதுவரை 609 விக்கெட்கள் எடுத்திருக்கிறார். அண்டர்சன் வேகப்பந்து வீச்சின் அரசன்!


# அலெக்சாண்ட்ரியாவின் கலங்கரை விளக்கம்

எகிப்தின் நைல் நதிப் பாசனப்பகுதியின் மேற்குப்புறத்தில் அமைந்திருந்த பாரோஸ் தீவின் அலெக்சாண்ட்ரியா நகரில் கட்டப்பட்டிருந்த கலங்கரை விளக்கம் தான் ஆண்டிபாட்டரின் உலக அதிசயப்பட்டியலில் ஆறாவது இடத்தைப் பிடித்திருந்தது.

பிரமிடுகள் மற்றும் மௌசோலியத்துக்கு அடுத்து மிக உயரமான கட்டடமாக அதன் காலத்தில் கருதப்பட்டது. சுமார் 115 மீற்றரிலிருந்து 136 மீற்றர் வரை இருந்திருக்கலாம் என்று அனுமானிக்கப்பட்ட அந்தக் கலங்கரை விளக்கம் மெடிப்டோரினியன் கடலையொட்டி எகிப்தின் வட மத்தியப் பகுதியில் கட்டப்பட்டிருந்தது.

கிரேக்க வரலாற்று அறிஞர் ஸ்ட்ராபோவின் குறிப்புகள்படி கோஸ்ட்ராஸ் என்ற கட்டடக்கலைஞர் தான் இதை வடிவமைத்தவர். அலெக்சாண்ட்ரியா எகிப்தின் இரண்டாவது பெரிய நகரம். கெய்ரோ மற்றும் கிஸாவுக்கு அடுத்து நிர்வாக ரீதியில் மூன்றாவது மிகப் பெரிய மாகாணம்.

எகிப்தின் 80 சதவிகித ஏற்றுமதி, இறக்குமதி அலெக்சாண்ட்ரியா துறைமுகத்தில்தான் நடைபெறுகின்றன. கிரேக்கத்தின் தொன்மையான ஹெலினிக் நாகரிகம் என்பது மெடிப்டோரினியன் கடற்கரையை ஒட்டி வாழ்ந்த மக்களின் நாகரிகமே.



அலெக்சாண்ட்ரியாவின் கலங்கரை விளக்கம் எப்படி இருந்தது என்பதைக்காட்டும் வரைபடம்.

அலெக்சாண்ட்ரியா நகரம் பேரரசர் மகா அலெக்சாண்டர் காலத்தில்தான் தீவிலிருந்து நிலப்பகுதியோடு இணைக்கப்பட்டது. கி.மு. 332 ஆம் ஆண்டு பாரோஸ் தீவுக்கும் நிலப்பகுதிக்கும் இடையே சுமார் ஒரு மைல் நீளத்துக்கு (1260 மீ.) மதகு ஒன்றைக் கட்டி நகரை இணைத்தார்கள்.

நகரம் அலெக்சாண்டர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டாலும் கலங்கரை விளக்கம் அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த தாலமேயால் கட்டப்பட்டது.

கி.மு.305 ஆம் ஆண்டு முதலாம் தாலமே சோடர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இதன் கட்டுமானப் பணிகள் 12 ஆண்டுகள் மேற்கொள்ளப்பட்டு அவரது மகன் இரண்டாம் தாலமே பிலடெல்சஸ் காலத்தில் முடிக்கப்பட்டது.

அரபுப் பயணி அபு ஹக் யூசுப் தனது பயணக் குறிப்புகளில் கலங்கரை விளக்கத்தின் வடிவமைப்புக் குறித்து விரிவாக எழுதியுள்ளார். (தொடரும்...)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2231

சுந்தர்சன்


போறவன் வாறவனுக்கு எல்லாம் நல்லது செய்யப்போய் தான்...




நடுத்தெருவுல நிக்குது ட்ராபிக் சிக்னல்...

சவிதா


எல்லோருக்கும் பிராணிகள் மேல அன்பு இருக்கத்தான் செய்யுது...



நாங்க பிரியாணி ஆகுறவரை...!

டினுஷியா

தலைசிறந்த பொய்களில் ஒன்று



நல்ல மார்க் எடுத்தா நல்ல வேலை கிடைக்கும்...

கனகராஜ்

எதையும் சாதாரணமாக எடுத்துக்கிற மனசு இருந்தா...



உலகத்துல நம்மள விட சந்தோஷமானவங்க யாரும் இருக்க முடியாது!!!

நாகேசன்

தாய் கஷ்டப்படுவதை கண்டுபிடித்து விடலாம்...



ஆனால் தந்தை கஷ்டப்படுவதை பிற்காலத்தில் பிறர் சொல்லித்தான் நமக்கே தெரியவரும்...

சுப்ரியா

காதலிக்கிறவன் அதிர்ஷ்டசாலி காதலிக்காதவன் புத்திசாலி என்று சொன்னீங்களே



கல்யாணம் ஆனவன் கடனாளி என்று ஏன்டா சொல்லல.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 242

# பொய்கள் பல்கிப்பெருகி மருத்துவத்துறை எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றன

"கவிதைக்குப் பொய் அழகு" என்று சொல்வார்கள். நன்மை பயக்குமெனில் ஆபத்தில்லாத பொய் நியாயமானது என்றும் சொல்வார்கள். ஆனால் மருத்துவத்துறையிலே சொல்லப்படும் பொய்கள் மிக ஆபத்தானவை. சிகிச்சைக்காகச் செல்லும் பல பொதுமக்கள் மருத்துவத்துறையினருக்குப் பல பிழையான பொய்யான தகவல்களை வழங்கிவருவது மிகவும் வேதனையானதும் ஆபத்தானதுமான விடயமாக இருந்து வருகின்றது.

கொடுக்கப்படும் மருந்துகளைச் சரிவரப்பாவிக்காத பொழுதும் பாவித்து வருவதாகச் சொல்லும் பொய்கள், பழைய மருத்துவத் தகவல்களை மறைத்துச் சொல்லும் பொய்கள், நல்ல மருந்து கிடைக்கும் என்று நம்பி அறிகுறிகளைக்கூட்டிச் சொல்லும் பொய்கள், பல மருத்துவர்கள் கொடுக்கும் மருந்துகளைத் தகுந்த ஆலோசனையின்றிக் கலந்து பாவித்துக்கொண்டு உண்மை நிலையை மறைக்கச் சொல்லும் பொய்கள் எனப் பொய்களின் வகைகள் பல்கிப்பெருகி மருத்துவத்துறை எங்கும் வியாபித்து நீக்கமற நிறைந்திருக்கின்றன.

ஒவ்வொருவரும் மருத்துவரைச் சந்திக்கும்பொழுது தான் பாவித்துக்கொண்டிருக்கும் மருந்துகளின் சரியான உண்மையான விபரங்களை மருத்துவருக்குத் தெரியப்படுத்தவேண்டும். ஒவ்வொரு மருந்தும் எவ்வாறு வேலை செய்கிறது என்பதைக் கணிப்பிட்டே தொடர்ந்து வழங்கப்படவேண்டிய மருந்துகளும் சிகிச்சை முறைகளும் தீர்மானிக்கப்படுகின்றன.

எனவே மருந்துகளைக் கூட்டிக் குறைத்து அல்லது மாற்றிப் பாவித்துவிட்டு ஒழுங்காக மருந்து எடுப்பதாகச் சொல்லும் பொய் உண்மையிலேயே மிகவும் ஆபத்தானது.


முன்னைய மருத்துவத் தகவல்கள், முன்பு இருந்த நோய்கள் என்பன ஒருவரின் தற்போதைய சிகிச்சை முறைகளைத் தீர்மானிப்பதற்கு முக்கியமானவை. இதைத் தெரிந்திருந்தும் பலர் பழைய மருத்துவத் தகவல்களை மறைக்க முயல்வதன் காரணம் என்ன?

உண்மையை வரவழைக்க வைத்தியர்கள், சட்டத்தரணிகள் போலவும், துப்புத்துலக்கும் அதிகாரிகள் போலவும் வாதாடித்தான் வைத்தியம் செய்ய வேண்டும் என்ற துர்ப்பாக்கிய நிலையே இங்கு நிலவுகின்றது. துப்புக்கள் துலங்காத பொழுது சில சமயம் துயரமான சம்பவங்கள் நோயாளர்களுக்கு நிகழ்ந்து விடுகின்றன.

தம் உயிரைப் பணயம் வைத்து ஒரு நோயாளி பொய் சொல்லத் துணிவதன் காரணம் என்ன? அவர்களைப் பொய் பேச வைப்பவர்கள் யார்? இதற்குப் பதில் மிகவும் தெளிவானது, துல்லியமானது. மருத்துவர்களும் மருத்துவத்துறை சார்ந்தவர்களுமே நோயாளர்களைப் பொய் சொல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளிவிடுகிறார்கள். இதற்கான காரணங்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

உண்மையைச் சொன்னால் வைத்தியர் கோபித்துக்கொள்வார் அல்லது பேசுவார் என்ற பயம் காரணமாகப் பலர் பொய் சொல்லுகிறார்கள். உயிரைப் பணயம் வைக்கும் அளவுக்கு வைத்தியரின் பேச்சுக் கடுமையானதுதானா?

தாம் சொல்லும் பொய் எவ்வளவு ஆபத்தானது என்று தெரியாமல் பலர் பொய் சொல்கிறார்கள். அதாவது நோய் பற்றிய போதுமான அளவு அறிவு இன்மையால் சொல்லப்படும் பொய் நோயாளர்களுக்கு இது சம்பந்தமான அறிவைப் புகட்டவேண்டியது மருத்துவக் குழுவின் கடமையே. எனவே இதற்கான பொறுப்பையும் மருத்துவக் குழுவே ஏற்கவேண்டி இருக்கிறது.



உண்மை நிலையை மனம் விட்டுப் பேசும் சூழ்நிலை வைத்தியசாலைகளில் இல்லை. சொல்லப்படும் உண்மை பலருக்குத் தெரிந்துவிடும் என்ற மனப்பயம். இதன் இரகசியத்தன்மை பேணப்படுமா? என்ற ஏக்கம். இதன் காரணமாக உண்மையை மறைக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

பதற்றம் அல்லது பயம் காரணமாக ஏற்படும் தடுமாற்றத்தினாலும் பலர் பொய் சொல்கிறார்கள். நோயாளர்களைப் பதற்றப்படுத்தும் குற்றமும் மருத்துவக் குழுமீதே விழுகிறது.

மருத்துவர்களோ, தாதியர்களோ அல்லது வைத்தியசாலை உத்தியோகத்தர்களோ நோயாளர்களுடன் கோபித்துக்கொள்ள முடியாது. அவ்வாறு செய்தால் அது தவறானது என்பதில் சந்தேகம் இல்லை. எனவே நோயாளர்கள் பயமின்றி, பதற்றமின்றி உண்மையான மருத்துவத் தகவல்களை சொல்ல முன்வர வேண்டும். நோயாளர்களில் ஒருவர் தனிமையில் வைத்தியருடன் கதைக்க விரும்பினால் அதற்கான சந்தர்ப்பத்தைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு உண்மையான தகவல்களை மருத்துவருடன் பகிர்ந்து கொள்ளலாம். இதன் இரகசியத் தன்மை பேணப்படும்.

சில உண்மைகளைப் பேசுவதால் நோயாளர்களுக்கு சில சங்கடங்கள் ஏற்படலாம். ஆனால் அரிச்சந்திரன் உண்மையை மட்டும் பேசியதால் ஏற்பட்ட சங்கடங்கள் போன்று பாரதூரமாக இருக்காது. எனவே உண்மையை மறைத்து உயிரைப் பணயம் வைப்பது சரியானதா? எனச் சிந்திக்க வேண்டும். தவிர்க்கப்படக் கூடிய மரணங்களை தவிர்ப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் எம்மை மாற்றிக் கொள்வதற்கு நிறைய இடம் இருக்கிறது. எம்மையும் சற்று மாற்றிக் கொள்ள முயல்வோம். மருத்துவத்துறையிலே சொல்லப்படும் பொய்கள் மிக ஆபத்தானவை. பொய்யாமொழிப்புலவரின் வழி நின்று பொய் பேசுவதைத் தவிர்ப்போம். அதன் மூலம் பல அநியாய மரணங்களை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து தவிர்க்க முடியும்.

**Dr.சி.சிவன்சுதன்**
**மருத்துவ நிபுணர்**

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.